பக்கங்கள்: 22
விலை: 30.00

# தீம்புனல்
THEEMPUNAL
வாராந்தப் பத்திரிகை


தீ : 01 புனல்:36 01.01.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



மக்களை அச்சுறுத்தும் பொருட்களின் விலை உயர்வு

செல்வின்

பக்கம் 04



போதைப் பொருள் பாவனையால் சீர்கெடும் சமூகம்

சந்திரமதி போல்ராஜ்

பக்கம் 09



வர்மா

# அத்தியாவசியப் பொருட்களுக்காக அலையும் மக்கள்

அந்நியச் செலாவணி கையிருப்பு அதலபாதாளத்தில் வீழ்ந்ததால் இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. கொரோனா எனும் கொடும் தொற்று இலங்கையின் பொருளாதாரத்தை அடியோடு அசைத்துவிட்டது. இலங்கையின் பொருளாதாரம் சுற்றுலாத்துறையைச் சார்ந்துள்ளது. இரண்டு வருடங்களாக சுற்றுலாத்துறை முடங்கியுள்ளது. வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வரவை நம்பி இருந்த இலங்கையின் அந்நியச் செலாவணி இருப்பு மெது மெதுவாகக் குறைந்து விட்டது. இதன் காரணமாக, இலங்கை ரூபாவின் மதிப்பு மிக மோசமாகச் சரிந்து விட்டது. அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்ததன் எதிரொலியால் வெளிநாடுகளில் இருந்து அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் கைவசம் இல்லாமையால் அவற்றின் விலை கிடுகிடென உயர்ந்து விட்டது. இந்த நிலை நீடித்தால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என எச்சரிக்கப்படுகிறது. அந்நியச் செலாவணியில் ஆரம்பித்த பிரச்சினை சங்கிலித் தொடராக உணவுப் பஞ்சத்தில் வந்து நிற்கிறது.

அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, பால், மா, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. பால் பவுடர், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு சிலிண்டர் ஆகியனவற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விலை நிர்ணயம் செய்யப்படாததால் பொருட்களின் விலை கண்டபாட்டுக்கு உயர்ந்துள்ளது. இவற்றுடன் கொரோனாவின் தாக்கம் வேலைவாய்ப்பின்மை என்பனவற்றால் வாழ்வியல் சிக்கல் தோன்றியுள்ளது.

இரண்டு ஆண்டுகளில் 20% சரிந்த இலங்கை ரூபாய் மதிப்பு இந்த ஆண்டு மட்டும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் மதிப்பானது 7.5% சரிந்துள்ளது. உள்ளூர் நாணயத்தின் மதிப்பை உயர்த்துவதற்கான முயற்சியாக இலங்கை மத்திய வங்கி சமீபத்தில் வட்டி விகிதங்களை அதிகரித்ததுடன், வங்கிகளுக்கு வரவேண்டிய கடன்பாக்கிகளை வசூலிக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியது. மத்திய வங்கியின் தரவுகளின்படி, ஜூலை மாத இறுதியில் இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு 2.8 பில்லியன் டொலராகக் குறைந்துள்ளது. 2019 நவம்பரில் இது 7.5 பில்லியன் டொலராக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 2019 நவம்பரில் கோத்தபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பொறுப்பேற்றது பிறகு அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு 20% க்கும் அதிகமாகச் சரிந்துள்ளது. மேலும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததன் காரணமாகக் கடந்த ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் 3.6% என்ற அளவில் சரிந்தது.

அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் பொருட்டு, உள்ளூர் சமையலில் பயன்படுத்தும் அத்தியாவசிய மசாலாப் பொருட்கள், சமையல் எண்ணெய் வகைகள், மஞ்சள் மற்றும் பல்வேறு வாகனங்களை இறக்குமதி செய்வதை அரசாங்கம் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் தடை செய்தது. அதன் பின்பும் நிலைமை கட்டுக்குள் வரவில்லை. தற்போது இலங்கை இறக்குமதியாளர்கள் பலர் உணவு மற்றும் மருந்துகள் வாங்குவதற்கு பணம் செலுத்த டொலர்களைத் தர முடியவில்லை என்றும் கூறுகிறார்கள்.

பெரும்பாலும் இலங்கையிலுள்ள அனைத்து வங்கிகளும் வெளிநாட்டு பணம் அல்லது அந்நியச் செலாவணி முற்றிலும் இல்லாத நிலையை எதிர்கொண்டுள்ளன. வெளிநாடுகளுக்கு பணம் அனுப்புவதற்கு உச்சவரம்பை அரசு நிர்ணயித்துள்ளது. தினமும் எண்ணற்ற மக்கள் வங்கிக்கு வந்து அவசரத் தேவைக்காக அமெரிக்க டொலரைப் பெறுவதற்கு காத்துக்கிடக்கின்றனர். இலங்கை மிகக் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

▶20



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இன் இனிய புதுவருட வாழ்த்துக்கள்
2022
Happy New Year!

தீம்புனல் THEEMPUNAL



ஐ.வி.மகாசேனன்

# அமெரிக்க–சீன மென் அதிகாரப்போக்கும் தேசிய அரசுகளில் இராணுவ அணுகுமுறையும்?

கோவிட்-19 பெருந்தொற்று உலகை சூழ்ந்து முழுமையாக ஈராண்டை கடந்துள்ளது. 2020ஆம் ஆண்டு நிலையான முடிவுகளை வெளிப்படுத்தாத போதிலும், 2021 இன் அரசியல்நிகழ்வுகள் கோவிட் -19 க்குப் பின்னரான உலக ஒழுங்கின் செல்நெறியை அடையாளப்படுத்துவதாக அரசறிவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உலக அதிகாரத்திற்காக போட்டியிடும் அரசுகள் மென் அதிகாரத்திற்குள் (Soft Power) நகர முற்படுகையில் தேசிய அரசுகள் சுயாதீனமாக இராணுவ அதிகாரத்திற்குள் (Military Power) நகரும் போக்குகள் அவதானிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை 2021 ஆம் ஆண்டின் தொகுப்பாக இக்கால சர்வதேச அரசியல் போக்கினை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்று உலக நாடுகளிடையே பாரபட்சமின்றி இழப்புகளை அதிகரித்து கொண்டே செல்கிறது. வளர்ச்சியடைந்த நாடுகளாயினும் சரி, வளரும் நாடுகளாயினும் சரி, வளர்ச்சி குன்றிய நாடுகளாயினும் சரி கொரோனா வைரஸினாலும் அதன் உருமாற்றுத் திரிபுகளாலும் தொடர்ச்சியாக அழிவுகளைச் சமச்சீராக எதிர்கொண்டு வருகிறன. எனினும் பாதிப்பின் தாக்கம் வளர்ச்சியடைந்த நாடுகளை விட ஏனைய நாடுகளுக்கு அதிக சுமையை ஏற்படுத்தி வருகிறது. கோவிட் பெருந்தொற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பொதுவானதாயினும் அதன் சுமை ஒப்பீட்டளவில் வளர்ச்சியடைந்த நாடுகளை விட ஏனைய நாடுகளுக்கு அதிகமாகவே காணப்படுகிறது. இத்தகைய வேறுபாடுகளை அவற்றின் அரசியல் மாறுதல்களில் இலகுவில் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது.

உலக அதிகாரத்திற்காக போட்டியிடும் அமெரிக்காவும் சீனாவும் அதிகம் ஏனைய நாடுகளை கவர்ந்து இழுக்கும் பொறிமுறையாக மென் அதிகாரத்தை முதன்மைப்படுத்துவதனை 2021 இல் அவதானிக்க கூடியதாக உள்ளது. கோவிட் பெருந்தொற்று இரு நாடுகளிலும் அதிக இழப்புக்களை ஏற்படுத்திய போதிலும் அவற்றின் பொருளாதார ஸ்திரம் வலுவிழந்த அரசுகளை ஈர்க்கும் இராஜ தந்திரத்தை நகர்த்தக்கூடிய திறனை வழங்கி உள்ளது.

சீனா ஏற்கெனவே தனது வெளியுறவுக்கொள்கையில் மென் அதிகாரத்தையே முதன்மைப்படுத்தி செயற்படுகிறது. பட்டி மற்றும் சாலை முன்முயற்சியூடாக (Belt and Road Initative) நாடுகளின் உட்கட்டமைப்புக்களை மையப்படுத்தி மேற்கொண்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் மென்அதிகாரம் சார்ந்ததாகவே காணப்படுகிறது. இந்நிலையில் கோவிட்-19 பெருந்தொற்றுக்கு பின்னரான சூழலில் சீனா தனது மென்அதிகார வெளியுறவுக்கொள்கை செயற்பாட்டினுள் சுகாதார உதவித் திட்டங்களையும் இணைத்துள்ளது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பை தொடர்ந்து 2021இல் ஆட்சிக்கு வந்த ஜோ பைடனும் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பாக சீனாவை குற்றம்சாட்டி சீனாவை உலகில் இருந்து தனிமைப்படுத்தும் உத்திகளை மேற்கொண்டார். எனினும் சீனா தடுப்பூசிகளை உலக நாடுகளுக்கு அன்பளிப்பாகவும் கடனுக்கும் வழங்கி அமெரிக்காவின் விமர்சனங்களை தகர்த்திருந்தது. ஆரம்பத்தில் சீனாவின் தடுப்பூசிக்கு அமெரிக்கா நெருக்கடிகளை கொடுத்திருந்தாலும், தற்போது 90க்கும் மேற்பட்ட நாடுகளில் சீனாவின் இருவகை தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டு வருவதாக நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் உறுதிப்படுத்துகிறது.

சீனாவின் துரித வளர்ச்சிக்கு காரணமாய் அமைந்துள்ள மென்அதிகாரம் மீது அமெரிக்க ஆட்சித்துறை கோவிட் பெருந்தொற்றுக்கு பின்னராக அதிக கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மென்அதிகார சிபார்சுகளை அதிகம் பரிசீலிக்க முற்பட்டுள்ளமையையே அவரது வெளியுறவுக் கொள்கையில் அவதானிக்க முடிகின்றது. 2021 ஜூன் மாதம் தனது முதலாவது வெளிநாட்டு பயணமாக ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொண்ட பைடன், அங்கு ஜி07 மாநாட்டில் கலந்துரையாடப்பட்ட B3W (Build Back Better World) திட்டம் சீனாவின் பட்டி மற்றும் சாலை முன்முயற்சிக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளின் மென்அதிகாரத் திட்டமாகவே காணப்படுகிறது. மேலும், 2021 இன் இறுதியில் டிசம்பர் நடுப்பகுதியில் தென்கிழக்காசிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் வெளியுறவு செயலாளர் ஆண்டனி பிளிங்கன் இந்தோனேசியாவிற்கு மிகவும் கவனிக்கத்தக்க உறுதிமொழியை அளித்துள்ளார். அதாவது, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்க உறவுகளையும் முதலீட்டையும் மேம்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். அந்தப் பிராந்தியத்தில் சீனாவுடன் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் அமெரிக்க உயர்மட்ட தூதர் வெளியுறவு செயலாளர் தென்கிழக்கு ஆசியாவில் சுற்றுப்பயணம் செய்யத் தொடங்கிய நிலையில் கூறியுள்ளார். இது பிளிங்கன், இந்தோனேசியாவில், சீனாவை எதிர்ப்பதற்கு மென் அதிகாரத்தை வலியுறுத்துகின்றமையையே வெளிப்படுத்துகிறது.

உலக அதிகாரத்திற்காக போட்டியிடும் அரசுகள் மென் அதிகாரத்தை நோக்கி நகருகையில் மறுதளத்தில் தேசிய அரசுகளில் குறிப்பாக வலுக்குன்றிய அரசுகளில் உள்ளக வன் அதிகாரப் போக்குகள் அதிகரிக்கும் சூழல் கவனிக்கப்படுகிறது. இந்த இருவேறுபட்ட அதிகார பொறிமுறைக்குள்ளும் ஓர் ஒழுங்கு உலக அரசியலில் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. இதனை நுணுக்கமாக அவதானித்தல் அவசியமாகிறது.

ஒன்று:- ஆப்கானிஸ்தானில் செப்டெம்பரில் மீள உயிர்ப்படைந்துள்ள தலிபான்களின் ஆட்சியானது தேசிய அரசுகளில் அதிகரித்து வரும் உள்ளக வன்னதிகாரம் உலக அதிகார அரசுகளின் மென் அதிகாரத்துடன் இணக்கமானது என்பதற்கு வலுவாக சான்றாக அமைகிறது. ஆப்கானிஸ்தானில் இடம்பெறும் தலிபான்களின் ஆட்சிக்கு சீனாவும் ரஷ்யாவும் நேரடியாக ஆதரவினை வெளிப்படுத்தி உள்ளது. சீன தூதரக உறவை பேணுவதுடன் ரஷ்யா தலிபான்களுக்கு ஆதரவாக தன் நட்பு நாடுகளின் தூதுவர்களை அழைத்து ஒரு கூட்டத்தையும் நடத்தியுள்ளது. அதேநேரம் அமெரிக்கா தலிபான்களை நேரடியாக ஆதரிக்காத போதிலும் இதுவரை நேரடியாக நிராகரிக்காத சூழலே காணப்படுகிறது. அத்துடன் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் குறித்த திகதியில் வெளியேற்றப்பட்டமையானது அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையில் அதிகரிக்கும் மென் அதிகார போக்கின் விளைவினதாகவே அரசியல் பரப்பில் ஆராயப்படுகிறது. எனவே அமெரிக்கா மற்றும் சீனாவின் இணக்கத்துடனேயே ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் உள்ளக வன் அதிகார அரசியல் இடம்பெறுகின்றமை மறுக்க இயலாத விடயமாகவே காணப்படுகிறது.

இரண்டு:- 2021-பெப்ரவரி 01 ஆம் திகதி மியான்மர் இராணுவம், அந்நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி அடுத்த ஓராண்டு காலத்துக்கு அவசர நிலையை பிரகடனப்படுத்தியது. அப்போதிலிருந்து ஜனநாயகத்துக்கு ஆதரவாக மியான்மர் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். எனினும் ஆட்சி அதிகாரத்தில் தன் பிடியை அதிகரித்துக் கொள்ள மியான்மர் இராணுவம் அதிகப்படியான வன்முறையைக் கையில் எடுத்திருக்கிறது. மியான்மரில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு குழந்தைகள் பெரியவர்கள் என்ற பாரபட்சமின்றி 1,300க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக உள்ளூர் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. மியான்மாரின் இராணுவ ஆட்சியின் நிலைமை தொடர்பில் கருத்துரைத்த மக்கள் போராட்டத்தை ஒருங்கிணைக்கும் யே ஹடுட், "இது இனப்படுகொலை போன்றது. அவர்கள் ஒவ்வொரு நிழலையும் சுடுகிறார்கள்" எனக் கூறியதாக மியான்மர் நவ் செய்தி நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது. டிசம்பர்- 28 (2021) அன்றும் கிழக்கு மியான்மரில் கயா மாநிலத்தில் ஒரு நெடுஞ்சாலையில் பெண்கள், குழந்தைகள் உட்பட 30 க்கும் மேற்பட்ட மக்களினை இராணுவ துருப்புக்கள் எரியூட்டப்பட்ட படுகொலையில், சர்வதேச மனித உரிமைகள் நிறுவனமான Save the Children ஊழியர்கள் இருவர் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளது. மியான்மர் இராணுவ சதியில் சீனாவின் ஆதரவு, இராணுவ தரப்புக்கு நேரடியாக காணப்படுகின்றதுடன், மக்கள் போராட்டங்களுக்கு அமெரிக்க தலைமையிலான மேற்கு நாடுகள் ஆதரவளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மூன்று:- ஆபிரிக்க கண்டத்தில் நான்கு ஆட்சிக் கவிழ்ப்புகள் இராணுவ சதிப்புரட்சி மூலம் அரங்கேற்றப்பட்டுள்ளது. மத்திய ஆபிரிக்க நாடான சாட்டில் (Chad), ஏப்ரல் (2021)இல் ஜெனரல் மஹாமத் இட்ரிஸ் டெபி அதிகாரத்தைக் கைப்பற்றிய சில வாரங்களுக்குப் பிறகு, அவரது அரசியலமைப்பை இடைநிறுத்தி பாராளுமன்றத்தைக் கலைத்தார். மே மாதம் (2021), மாலி வீரர்கள் 10 மாத இடைவெளியில் இரண்டாவது சதிப்புரட்சியை நடத்தினர். சூடானின் இராணுவம் அக்டோபரில் (2021) நாட்டின் சிவிலியன் தலைவர்களை தடுத்து வைத்து அதிகாரத்தைக் கைப்பற்றியது. கினியாவின் செப்டம்பர்-5 (2021) அன்று அந்நாட்டின் இராணுவ தலைவர் கர்னல் மாமடி டூம்பூயா, நாட்டின் முதல் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியான அல்பா கொண்டேவைத் தடுத்து வைத்து ஆட்சியை கைப்பற்றினார். 2021 இல் ஆபிரிக்கக் கண்டம் முழுவதும் வெற்றிகரமான இராணுவ கையகப்படுத்தல்கள் நடைபெற்றுள்ளது. முன்னைய 2020 ஆம் ஆண்டில் மூன்று இராணுவக் கையகப்படுத்தல்கள் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

நான்கு, நேரடி ஆட்சிக்கவிழ்ப்புகளுக்கு புறத்தே ஒரு சில நாடுகளில் இராணுவ செல்வாக்கு அதிகரித்து கொண்டு செல்கிறது. குறிப்பாக இலங்கையில் சிவில் சேவை கட்டமைப்புக்களில் முன்னாள், இந்நாள் இராணுவ உயரதிகாரிகளின் செல்வாக்கு அதிகரித்து கொண்டு செல்கிறது. இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர், அஞ்சல் திணைக்கள ஆணையாளர் என சிவில் நிர்வாகத்தின் உயரடுக்குகளில் முன்னாள் இராணுவ உயரதிகாரிகளே காணப்படுகிறார்கள். அத்துடன், கோவிட்-19 சுகாதார செயலணியின் தலைவராகவும் இலங்கையில் இராணுவத்தளபதியே நியமிக்கப்பட்டுள்ளார். சிவில் நிர்வாக செயற்பாடுகளில் இராணுவ செல்வாக்கு அதிகரிப்பு என்பது எதிர்காலத்தில் இராணுவ ஆட்சிக்கு வழிவகுக்கக்கூடிய அபாயங்களும் காணப்படுகிறது. பாகிஸ்தான் அரசியல் வரலாற்றில் இவ் அனுபவங்களை உயரளவில் அவதானிக்கலாம். இவ்வாறாக சிவில் நிர்வாக செயற்பாடுகளில் இராணுவ பிரசன்ன அதிகரிப்பும் வன் அதிகார அடையாளமாகவே காணப்படுகிறது.

> **உலக அதிகாரத்திற்காக போட்டியிடும் அரசுகள் மென் அதிகாரத்தை நோக்கி நகருகையில் மறுதளத்தில் தேசிய அரசுகளில் குறிப்பாக வலுக்குன்றிய அரசுகளில் உள்ளக வன் அதிகார போக்குகள் அதிகரிக்கும் சூழல் கவனிக்கப்படுகிறது. இந்த இருவேறுபட்ட அதிகார பொறிமுறைக்குள்ளும் ஓர் ஒழுங்கு உலக அரசியலில் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. இதனை நுணுக்கமாக அவதானித்தல் அவசியமாகிறது.**

எனவே, கோவிட் பெருந்தொற்றுக்கு பின்னரான உலகில், வளர்ச்சியடைந்துவரும் மற்றும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார ஸ்திரமின்மையானது அரசியல் ஸ்திரமற்ற சூழலை உருவாக்குவதுடன் இராணுவம் சார்ந்த வன் அதிகார உள்ளக அரசியல் செயற்பாடுகளையும் உருவாக்கி வருகிறது. இவ்வாறாக தேசிய அரசுகளில் அதிகரிக்கும் வன் அதிகார போக்கினை ஊக்குவிக்கும் மென் அதிகாரப் போக்கினிலேயே உலக அதிகார போட்டியில் ஈடுபடும் அமெரிக்கா மற்றும் சீனா ஈடுபடுகின்றன. இராணுவ ஆட்சிகளுக்கு சீனாவின் ஆதரவு நேரடியாக காணப்படுகின்ற போதிலும், அமெரிக்காவும் மாறிவரும் புதிய உலக ஒழுங்கில் இராணுவ ஆட்சியை நிராகரிக்காத போக்கே காணப்படுகிறது. குறிப்பாக கினியாவில் இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சிக்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பும் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். டிசம்பர் இறுதியில் அமெரிக்காவினால் ஒருங்கிணைக்கப்பட்ட ஜனநாயக மாநாடானது அமெரிக்காவின் கூட்டு உருவாக்கத்துக்கான முன் முயற்சியே அன்றி, இதயசுத்தியுடன் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான முன்முயற்சியாக அவதானிக்க இயலாத சூழலே காணப்படுகிறது. உலகம் முழுவதும் ஜனநாயக நெறிமுறைகள் சிதைந்து கொண்டிருக்கும் நிலையில், தொடர்ச்சியாக போலியாக ஜனநாயகத்தை கட்டமைப்பது ஜனநாயகத்தை முடிவுறுத்தும் செயலாகவே அமைய வாய்ப்புள்ளது. ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL
தீம்புனல்

# வளமான எதிர் காலத்துக்காக வகை வகையான வாழ்த்துக்கள்

அனைவருக்கும் ஆங்கிலப் புது வருட வாழ்த்துகள். இன்று முழுவதும் வாழ்த்துக் கூறியே களைத்துப் போவார்கள். இனம், மதம், மொழி கடந்து கொண்டாடப்படும் நாள் இது. 2021 ஆம் ஆண்டு போய்விட்டது. 2022 ஆம் ஆண்டு பிறந்துள்ளது. 2020 ஆம் ஆண்டு கடந்து போகையில் புது வருடத்தில் புது மனிதராக இருப்போம். துன்பம், துயரம் எல்லாம் போய்விடும் என்றே அனைவரும் கருதினர். கொரோனாவின் கோரத்தாண்டவம் முடிவடையும். இனி எல்லாம் சுகமே என்ற நினைப்பில் இடி விழுந்தது.

கொரோனாத் தொற்றுகாரணமாக உலகப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இதற்கு இலங்கை விதிவிலக்கல்ல. இலங்கையின் வருமானம் பாதிக்கப்பட்டது. ஏற்றுமதி தடைப்பட்டது. இலங்கையை முன்னேற்றும் உறுதி மொழியுடன் ஆட்சி பீடம் ஏறிய அரசாங்கம் கையைப் பிசைகிறது. வட்டி கட்டுவதற்குக் கடன் வாங்க வேண்டிய நிலையில் இலங்கை அரசாங்கம் இருக்கிறது. இலங்கை அரசங்கத்தின் ஸ்திரத்தன்மையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அமைச்சர்கள் அரசாங்கத்தை விமர்சிக்கிறார்கள். பங்காளியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறப் போகிறேன் என மிரட்டுகிறது. வெளியேற விரும்புபவர்கள் வெளியேறலாம் என அரசாங்கத்தின் சார்பில் சவால் விடப்படுகிறது.

அரசியலில் தமது இருப்பை வெளிக்காட்டுவதில் தலைவர்கள் முனைப்பாக இருக்கிறார்கள். பொது மக்கள் அத்தியாவசியப் பொருட்களைத்தேடி அலைகிறார்கள். அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு உள்ளது. சில பொருட்களை வாங்குவதற்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.

எரிவாயு கிடைப்பதில்லை, உணவுப்பொருள் தட்டுப்பாடு, டொலர் கட்டுப்பாடு, மரக்கறிகளின் விலை அதிகரிப்பு, எரிபொருட்களின் விலை உயர்வு, பஸ் கட்டண அதிகரிப்பு, முச்சக்கர வண்டி கட்டண அதிகரிப்பு, திடீர் மின்வெட்டு, நீர் வெட்டு, வாகன இறக்குமதிகளுக்குத் தடை, பேக்கரிப் பொருட்கள் விலை உயர்வு, சீனி இல்லை, பால்மா இல்லை என பட்டியல் நாளாந்தம் நீண்டு கொண்டே செல்கின்றது. இப்படியான ஒரு இக்கட்டான சூழலில் தான் 2022 ஆம் ஆண்டு வரப்போகிறது.

புதிய வருடத்தை வரவேற்கும் மனநிலையில் மக்கள் இல்லை.

இதற்கமையவே, ஆங்காங்கே மக்கள் சில பொருட்களை வாங்குவதற்குபல மணி நேரம் காத்துக்கிடக்கும் வரிசைகளும் நீண்டு செல்கின்றது.

அண்மையில், இரசாயன உரம் மற்றும் கிருமி நாசினி இறக்குமதியை ஜனாதிபதி தடை செய்திருந்தார். இதற்கு எதிராகப் பல பகுதிகளில் விவசாயிகளினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இரசாயன உரப் பயன்பாட்டிலிருந்து நீங்கி, சேதனப் பசளையைப் பயன்படுத்துவதாக எடுத்த முடிவை நிராகரிக்கும் நோக்கம் அரசாங்கத்திடம் இல்லை எனவும் அறிவித்திருந்தது.

இந்நிலையில், பின்னர் செய்கை உர இறக்குமதிக்கு அனுமதி வழங்கிய அரசாங்கம், செய்கை உரத்திற்கு மானியம் வழங்கப்படாது என அறிவித்திருந்த நிலையில், டொலர் தட்டுப்பாடு காரணமாக உர இறக்குமதிகளை முன்னெடுக்க முடியாது இறக்குமதியாளர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அமெரிக்க டொலர் பற்றாக்குறையால், சீனி உட்பட்ட பொருட்கள் அடங்கிய 1,300 க்கும் மேற்பட்ட கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் நாட்டில் மக்களுக்கு தேவையான உணவுப்பொருட்கள் கையிருப்பில் போதியளவு உள்ளதாகவும், உணவு தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லையென்றும் அரசாங்கத் தரப்புகள் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

2020 மார்ச் 11 ஆம் திகதியன்று, உலக சுகாதார நிறுவனம் (WHO) கோவிட் 19 ஐ உலகளாவிய தொற்றுநோயாக அறிவித்தது. இலங்கையில் வளர்ந்து வரும் சுற்றுலாத் துறையினாலும், ஏராளமான வெளிநாட்டினராலும் வைரஸ் பரவலினால் மிகவும் பாதிக்கப்படக்கூடியதாக இருந்தது. இலங்கையில் முதல் தொற்றாளர் 2020 ஜனவரி 27 ஆம் திகதி இனங்காணப்பட்டதுடன் முதல் இலங்கை நாட்டவர் 2020 மார்ச் 10 ஆம் திகதியன்று கோவிட் 19 தொற்றாளராக இனங்காணப்பட்டார்.

நோய் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை விரைவாக அறிமுகப்படுத்தியதுடன் 2020 மார்ச் 16 ஆம் திகதி நாடளாவிய முடக்கத்தை நடைமுறைப்படுத்தியது. பாதிக்கப்பட்ட நோயாளிகள் பாதுகாப்பான சூழலில் சிகிச்சை பெற்றனர், சோதனை மற்றும் தொடர்பு கண்டுபிடிக்கும் முயற்சிகள் விரைவாக அதிகரித்தன, மேலும் ஆபத்து மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் பிரச்சாரங்கள் செயல்படுத்தப்பட்டன. ஏற்கெனவே நிதித் தடைகளை எதிர்கொண்டுள்ள வேளையில், இந்த தொற்றுநோய் நாட்டின் மீது மேலதிகமான அழுத்தத்தை முன் வைத்தது. தொற்றுநோயைக் கட்டுப்படுத்த நிதி, தொழில்நுட்ப மற்றும் கொள்முதல் உதவியைத் திரட்டுவதை விரைவாக ஒருங்கிணைப்பதே சவாலாக இருந்தது.

கொரோனா காரணமாக இலங்கையில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை. விஷேட நடைமுறைகள் போக்குவரத்து வசதி என்பனவற்றால் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. சில பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதே தவிர தட்டுப்பாடு இல்லாமல் சகல பொருட்களும் கிடைத்தன.

ஆனால், இன்றைய நிலைமை அப்படியில்லை. கண்ணுக்கெட்டிய தூரத்தில், துறைமுகத்தில் பொருட்கள் உள்ளன. அவற்றை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கு டொலர் கையிருப்பில் இல்லை. இது மக்களின் தவறு அல்ல. யாரோ தவறு செய்ததற்கான தண்டனையை மக்கள் அனுபவிக்கிறார்கள். பொருளாதாரப் பின்னடைவுதான் இத்தனைக்கும் காரணம். பொருளாதார நிபுணர்களும், எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களும் சொல்லும் ஆலோசனையைத்தான் அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்களும் சொல்கிறார்கள்.

வீம்பைக் கைவிட்டு, நிபந்தனைகளை ஆராய்ந்து கடன் வாங்கினால்தான் நாட்டை மீட்கலாம். மீட்பர்கள் மனம் வைப்பார்களா?


■

# கோவிட் சான்றிதழைப் பாதுகாக்க, உடலில் செலுத்திக்கொள்ளும் மைக்ரோ சிப்

ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு பயன்படுத்தும் இந்தப் புதிய மைக்ரோ சிப் முறையைச் சிலர் வரவேற்றிருக்கிறார்கள். ஆனால் சிலர் இந்த முறையின் மீதான தங்கள் அச்சத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

சுவீடனைச் சேர்ந்த DSruptive Subdermals என்ற ஒரு நிறுவனம் கோவிட் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான சான்றிதழை ஒரு மைக்ரோ சிப்பில் பதிந்து நம் உடலிலேயே அந்த மைக்ரோ சிப்பை வைத்துக் கொள்ளும் வசதியை உருவாக்கி உள்ளது. உலகம் முழுவதுமே தற்போது மால், தியேட்டர், ஹோட்டல் போன்ற பல இடங்களில் நுழைவதற்கு கோவிட் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான சான்றிதழ் கேட்கப்படுகிறது. இப்படி மைக்ரோ சிப்பில் அந்த சான்றிதழைப் பதிந்து வைத்துக்கொண்டால் தேவைப்படும் நேரத்தில் அந்த சிப்பை சப்போர்ட் செய்யும் எந்த டிவைஸ் மூலம் ஸ்கேன் செய்தாலும் சான்றிதழைக் காட்டிவிடுமாம். இந்தப் புதிய முறையைச் சிலர் வரவேற்றிருக்கிறார்கள். ஆனால் சிலர் தங்கள் அச்சத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த முறையில் ஆவணங்களை ஒரு மைக்ரோசிப்பில் வைத்து அதனை நம்முடைய உடலில் செலுத்திக் கொள்ளும் முறையை கோவிட் சான்றிதழுக்காக இந்த நிறுவனம் உருவாக்கவில்லை. இதனைக் கடந்த சில ஆண்டுகளாகவே சுவீடன் மக்களில் சிலர் தாங்களாகவே முன்வந்து பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். ஆவணங்களைச் சேமிக்க உடம்பில் மைக்ரோசிப்பை செலுத்திக் கொண்டவர்கள் சுவீடன் நாட்டில் பல்லாயிரக் கணக்கில் உள்ளனர். நம்முடைய அலுவலக ஐடி, பயண அட்டைகள், மெம்பர்ஷிப் கார்டுகள், டிஜிட்டல் பூட்டைத் திறப்பதற்கான அனுமதிச் சீட்டுகள் என எல்லா விதமான ஆவணங்களையும் இந்த மைக்ரோ சிப்பில் சேமித்து வைத்துக்



கொள்ளலாமாம். ஆவணங்கள் நமக்குத் தேவைப்படும் நேரத்தில் நம்முடைய மொபைல் மூலம் சிப்பை ஸ்கேன் செய்தால் சிப்பில் நாம் பதிந்து வைத்துள்ள ஆவணத்தை மொபைலில் பார்க்க முடியுமாம்.

இந்த, சிப்பை உடம்பில் பொருத்துவது மிக எளிது தானாம். அரிசி அளவே இருக்கும் மைக்ரோ சிப்பை ஒரு ஊசி மூலம் தோலுக்கு அடியில் செலுத்திவிடுவார்கள். ஒரு முறை உடலில் செலுத்திவிட்டால் இதில் ஆவணங்களைப் பதிவு செய்ய அல்லது அப்டேட் செய்ய, ஒரு மொபைல் செயலியைப் உபயோகித்து சிப்பில் தேவையான ஆவணங்களைப் பதிந்து கொள்ளலாம் என்று கூறுகிறார்கள்.

இந்த மைக்ரோ சிப் நம்முடைய தனிப்பட்ட தகவல்களான நம் இருப்பிடம் போன்றவற்றைக் கண்காணிக்க வாய்ப்பாக அமையும் எனவும் சிலர் கருதுகின்றனர். இது அவர்களின் தனியுரிமையைக் கெடுத்துவிடும் என அச்சப்படுகிறார்கள்.

இதுகுறித்து ஜோப்லெட் கூறுகையில், “நீங்கள் இந்த சிப் செயல்படும் முறையைப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு பற்றி என்ற ஒன்று கிடையாது. அது உங்கள் தோலுக்கு அடியில் செயல்பாடு எதுவுமின்றி அமைதியாகவே இருக்கும். நீங்கள் உங்கள் மொபைலை வைத்து ஸ்கேன் செய்யும் போது மட்டுமே பயன்பாட்டில் இருக்கும். இதன் மூலம் உங்களின் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ள வாய்ப்பே கிடையாது. அதுமட்டுமில்லாமல் இந்த சிப் முற்றி லும் சுய விருப்பத்தோடுதான் பொருத்தப்படுகிறது. வற்புறுத்தலின் பேரில் யாரும் இந்த சிப்பை செலுத்திக் கொள்ள நாங்கள் நிர்ப்பந்திக்கவில்லை. இந்தச் சிப்பைப் பொருத்திக் கொள்ளும் முடிவு அவரவரின் தனிப்பட்ட விருப்பமே” என்கிறார்.

■

# மக்களை அச்சுறுத்தும் பொருட்களின் விலை உயர்வு

செல்வின்

இந்தவாரம் நாங்கள் மிகவும் அவசரமான ஒரு விடயத்தைப் பற்றி பேசவேண்டியுள்ளது. இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரக் குளறுபடிகள் காரணமாக ஏற்பட்டுள்ள விலை ஏற்ற நெருக்கடி இந்த நாட்டின் மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது.

எதிர்வரும் மாதங்களில் மிகப்பெரிய உணவுப்பஞ்சம் ஏற்படும் என்றும் மக்கள் தங்கள் மூன்று வேளை உணவில் ஒன்றை இப்போதே தவிர்க்கவேண்டும் என்றும் ஒரு அமைச்சர் மக்களுக்கு ஆலோசனை வழங்குகின்றார். மற்றுமொருவர் பயறு, மரவள்ளிக்கிழங்கு போன்றவற்றை உண்ணுவதற்குத் தயாராகுமாறு அறிவுறுத்தியுள்ளார். காலை விடியும் போது இரவோடிரவாக என்ன என்ன பொருட்களுக்கு விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதனை அறிவதற்கு கூட அக்கறையற்றவர்களாக மக்கள் மாற்றப்பட்டுள்ளனர். அத்தியாவசிய உணவுப்பொருட்கள் எரிபொருட்களின் விலை உயர்வு பற்றி கவலைப்படுவதற்கோ அல்லது கடைகளில் பொருட்களை விலைகேட்டு வாங்கும் விருப்பு கொண்டவர்களாக இல்லாமல் மக்களின் உணர்வுகள் செயலிழந்து போயுள்ளது.

“ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று” பள்ளுப்பாடி ஆடுகின்றனர் பதுக்கல் வியாபாரிகளும் சந்தையின் தரகு முதலாளிகளும் எங்களது பாரம்பரிய உணவுகளான குரக்கன், சாமை, தினை, பயறு, உழுந்து, மரவள்ளிக்கிழங்கு என்ற சத்து மிகு உணவுப்பண்பாட்டைச் சிதைத்த மேற்கத்தைய குடியேற்றவாத ஆட்சிகளின் வழியிலிருந்து மக்களை மீட்டெடுக்கத்தவறிய அரசுகளும் சிந்தனையாளர்களும் மக்களைத் தொடர்ந்தும் கோதுமை மா, உருளைக் கிழங்கு, இறக்குமதி செய்யப்படும் பால்மா பொதிகள், தகரத்திலடைக்கப்பட்ட மீன்கள் ஆகியவற்றுக்கு அடிமையாக்கியதன் பலனை இந்த தீவின் தொன்மை மிக்க குடிமக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.

உணவு நெருக்கடியும் பற்றாக்குறையும் இந்தத் தீவிற்கும் மக்களுக்கும் புதியதே அல்ல. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கட்டாய மதிய உணவாக உணவுச்சாலைகளில் விற்கப்படவேண்டும் என்பது தேசத்தின் கட்டளையாகியது.

பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விநியோக மையங்களாகின. சங்கக்கடை மனேச்சர்கள் என்ற புதிய மதிப்பிற்குரிய வர்க்கம் ஒன்று சமூகத்தில் தானாகவே மேலேழுந்தது. யாழ்ப்பாணத்தில் சங்கக்கடை மனேச்சர் மாப்பிளைகளுக்கான சீதனம் வானத்தைத் தொட்டது. சங்கக்கடைகளில் உத்தியோகம் எடுப்பதும் அதனைப் பெற்றுக் கொடுத்து தங்கள் வாக்குவங்கியைத் தக்கவைப்பதும் என்பது புதிய அரசியல் கலாசாரமாகியது. ஒரு சிறிய சங்கக்கடையின் கிளை கூட ஆறு பேருக்குக் குறையாத பணியாட்களால் நிரம்பியது. என்ன பொருள் வேண்டும்? என்று கேட்க ஒருவர், பொருட்சிட்டையினை எழுத ஒருவர், காசு வாங்க மற்றுமொருவர், பொருட்களைப் பொதியிட இன்னுமொருவர் பொருளினையும் சிட்டையினையும் சரி பார்க்க வேறொருவர், இவர்களுக்கு உதவிக்கு பிறிதொருவர் என வேலைவாய்ப்பு பெருகியது. இவர்களுக்கு மேலாக ஊரின் பெரியவர்களும் இளைஞர்களும் சங்கக்கடை மனேச்சருக்கு உதவி செய்து மக்களை ஒழுங்குபடுத்தும் தொண்டு வேலைகளில் தங்களை அர்ப்பணித்திருந்தனர். சங்கக்கடைகள் உள்ளூர் அரசியலின் முதன்மைக் களமாக மட்டுமல்லாமல் ஊழல்களின் ஊற்றாகவும் மாறியது. தட்டுப்பாடான

> நாங்கள் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதற்குக் கிளர்ந்தெழுந்தவர்கள். ஒடுக்குமுறை யார்மேல் பிரயோகிக்கப்பட்டாலும் அதனை எதிர்த்து குரல்கொடுப்பதும் போராடுவதும் விடுதலை விரும்பிகளின் மரபு. நாங்கள் எதிரிகளின் துன்பத்தில் திருப்தி கொள்ளவோ மகிழ்ந்து கொண்டாடவோ முனையக்கூடாது. அது மானிட தர்மமுமல்ல: விடுதலைக்காகப் போராடுபவர்களின் மரபுமல்ல. சாதாரண சிங்கள மக்கள் எங்கள் எதிரிகளுமல்ல.

அந்தக் காலகட்டம் என்பது இலங்கையின் முதுபெரும் அரசியல் வித்தகர் கலாநிதி.என்.எம்.பெரேராவின் மிகவும் துல்லியமாகக் கணிப்பிடப்பட்ட நெருக்கடிகளை எதிர்கொள்ளும் தீட்சண்யம் மிக்க தீர்மானத்தின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரக்கட்டுப்பாடுகள் மூலம் நாட்டின் நிலையான சுபீட்சத்தைக் கருத்திற்கொண்டு முன் னெடுக்கப்பட்டது.

ஆனாலும், அரசியல் அதிகாரத்தில் அவாக் கொண்ட அரசியல் கட்சித்தலைவர்களுக்கு ஏற்பட்ட பயம் காரணமாக அந்த உன்னதமான புரட்சி இடைநடுவில் கைவிடப்பட்டு கலாநிதி.என்.எம். பெரேராவும் அமைச்சர் பதவியில் இருந்து விலக்கப்பட்டார்.

அதற்கு அடுத்ததாக இரண்டாவது தடவை இலங்கைத்தீவு அடங்கலான மக்கள் இம்முறை மிகநெருக்கடியான பொருளாதாரச் சூழலை எதிர்கொள்கின்றார்கள். இவை இரண்டிற்கும் இடையில் வடக்கு




அம்மையாரின் ஆட்சியின் கீழ் இத்தகைய நெருக்கடியினை இந்தத் தீவு எதிர்கொண்டது. அப்போது அந்த அரசின் நிதியமைச்சராக இருந்த இடதுசாரிச் சிந்தனையும் மக்கள் மீதும் நாட்டின் மீதும் ஆழ்ந்த கரிசனையும் கொண்டிருந்த கலாநிதி.என்.எம். பெரேரா அந்த அரசின் நிதியமைச்சராக இருந்தார். அவரது தொலைநோக்கான பார்வையும் கொள்கைகளும் காரணமாக அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் பல்வேறு இறுக்கமானதும் புதியதுமான அணுகுமுறைகள் கையாளப்பட்டன. இறக்குமதி கட்டுப்பாடும் பல பொருட்களுக்கு முற்றாக இறக்குமதித் தடையும் போடப்பட்டது. ஏற்றுமதி ஊக்குவிப்பு நாட்டின் முதன்மையான தெரிவுகளில் ஒன்றாகியது. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு மிகவும் இறுக்கமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

உள்ளூர் கைத்தொழிலும் உற்பத்திகளும் தன்னியல்பாகவே விரைந்து முளைவிட்டு தளைத்தன. இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் தரத்துடன் உள்ளூர் உற்பத்திப்பொருட்களை ஒப்பீடு செய்யாமலே வாங்குகின்ற உணர்வு மக்களிடம் பெருகியது. இரண்டு கொத்து அரிசியை மட்டுமே ஒருவர் கொண்டு செல்லலாம் எனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. பதுக்கல் வியாபாரிகளும் தரகு முதலாளிகளும் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டிவந்தது.

அதிகாலையிலே நான்கு மணிக்கு பேக்கரி வாசலிலே சென்று காத்திருந்தாலே மட்டும்தான் ஒரு இறாத்தல் பாணைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற விதிக்கு அனைவரும் தங்களை உட்படுத்திக்கொண்டனர். குலப்பெருமையும் குடும்பச்செருக்கும் குப்பை மேட்டுப் பொருட்களாகின. பயறும் ஏனைய உள்ளூர் தானியங்களும் வாரத்தின் சில நாட்களில் பொருட்களினைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் அங்கு நடைபெற்ற அத்தனை அடாவடித்தனங்களையும் சகித்துக்கொள்ளும் பக்குவம் கொண்டவர்களாக உயர்நிலை அடைந்தனர்.

இதன் மறுபக்கம் உள்ளூர் உணவு உற்பத்தியும் விவசாயமும் பெருகியது. உள்ளூரின் கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் மிகவும் மதிப்பிற்கும் நுகர்வுக்கும் உரியவைகளாக மாறின. பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினதும் சங்கானை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினதும் மின்துணி ஆலையின் மேல்சட்டை மற்றும் கால்சட்டைத் துண்டுகளை திருவிளச்சீட்டின் மூலம் கூட்டுறவுக்கிளைச்சங்கங்களூடாகப் பெற்றுக்கொள்வது என்பது கிராமத்தின் பேசுபொருளாகியது.

படித்த வாலிபர் விவசாயத்திட்டங்கள் மிளகாயையும் வெங்காயத்தையும் ஏனைய மரக்கறிகளையும் உற்பத்தி செய்து அமெரிக்கன் பெஷன் கல்வீடுகள், ரான்சிஸ்ரர் றேடியோக்கள், வொக்ஸவகன் கார் என அந்நாளின் ஆடம்பரப்பொருட்களின் உரிமையாளர்கள் ஆனார்கள். விவசாயம் செய்வது பெருமைக்குரிய பண்பாடாக மாறியது. யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்ட “வெளிக்கிடடி விசுவமடுவுக்கு” என்ற நாடகம் காலச்சூழ்நிலையினைக் கலையம்சமாக்கியது.

மாகாணத்தில் வாழும் மக்கள் இரண்டு தடவை உணவு, மருத்துவம், பாதுகாப்பு, நெருக்கடி என மிகப்பெரும் வாழ்வியல் நெருக்கடியினை இரண்டு வேறுபட்ட சூழல்களில் எதிர்கொண்டார்கள். அவற்றை வெறுமனே பொருளாதாரநெருக்கடி எனக்கூறிக்கடந்து சென்றுவிடமுடியாது. மிகவும் திட்டமிட்டு எம் மக்களைப் பட்டினிபோட்டு பணியவைப்பதற்கான ஒரு பெரும் முற்றுகையாகவே அது அமைந்தது. ஆனாலும் அது முற்றாக வெற்றிகொள்ளப்பட்டது வரலாறு.

தற்போது இலங்கைத்தீவு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி முன்பு ஸ்ரீமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டதிலிருந்து முற்றாக வேறுபட்டது. அன்றைய காலகட்டத்தில் நாட்டின் தற்சார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தொலைநோக்குடனும் அந்நியச் செலாவாணிச் சமநிலையைத் தக்கவைக்கும் உறுதியுடனும் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட ஆக்கபூர்வமான நெருக்கடியாகும்.

தற்போதைய நெருக்கடி மிகவும் மோசமாக நிர்வாகம் செய்யப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளினாலும் நாட்டின் வளங்களையும் நிதிமூலங்களையும் தரகு முதலாளித்துவத்தின் ஆளுகைக்குள்

(20 ஆம் பக்கம் பார்க்க...)

# வேண்டுதல்கள் நிறைவேற வேண்டும்

# மக்களும் அரசும் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

அவதானி

**“சிக்கல்களை நாடு எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில், ஒரே நாடு ஒரே சட்டம் செயலணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் ஞானசார தேரர், முழு நாட்டையும் இராணுவ மயமாக்கவேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். அன்பு மார்க்கத்தால் மக்களை வழிநடத்தவேண்டும் எனச்சொல்ல வேண்டிய பௌத்த தர்மபோதனையை உபதேசிக்க வேண்டிய ஒரு துறவி, ஆயுத மார்க்கத்தால் வழிநடத்தவேண்டும் என்று சொல்லியிருப்பதின் உள்நோக்கம் என்ன..?”**

“உனக்கும் கீழே வாழ்பவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு” என்ற ஒரு பாடல் வரியை எமது மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டிய காலம்தான் கடந்த இரண்டு வருடகாலமாக நீடித்துக்கொண்டிருக்கிறது.

2020 ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே கொரோனோப் பெருந்தொற்று முழு உலகையும் ஆட்டிப் படைக்கத் தொடங்கியவுடன், அந்தக் கண்ணுக்குத் தெரியாத எதிரி யான கிருமியை சீனாதான் பரப்பிவிட்டது என்று மேலைத்தேய அரசுகள், அதிலும் சீனாவை சகிக்க முடியாத நாட்டின் தலைவர்கள் குறிப்பாக அமெரிக் காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உட்பட சிலர் கருத்து தெரிவித்தனர்.

உலக நாடுகள், அந்தக்கிருமிக்கு “கோவிட் - கொரோனோ” என்று பெயர் சூட்டிக்கொண்டிருந்த போது, ட்ரம்ப், அதனைச் சீன வைரஸ் என்றே பகிரங்கமாகச் சொன்னார்.

சில மாதங்களில் அவரும் தேர்தலில் தோல்வியுற்று வீட்டுக்குச் சென்றார்.

இந்தப் பெருந்தொற்றிலிருந்த மக்கள் முற்றாக விடுபட வேண்டுமானால், வீடுகளில் முடங்கியிருக்க வேண்டும் என்று பல உலகநாடுகள் அறிவுறுத்தின.

மாநில எல்லைகள் மூடப்பட்டன. வெளிநாட்டுப் பயணங்களில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஏற்றுமதி - இறக்குமதிப் பொருளாதாரமும் வீழ்ச்சி கண்டது.

தடுப்பு ஊசிகள் பல்வேறு பெயர்களில் அறிமுகமாகின. ஒன்று - இரண்டு - மூன்று என அதன் எண்ணிக்கையும் கூடி யது. நான்காவது வந்தாலும் ஆச்சரியம் இல்லை.

இறந்தவர் எண்ணிக்கை - தொற்றாளர் எண்ணிக்கை பற்றி ஊடகங்கள் கணிப்புகளை வெளியிட்டன.

இத்தனை அமளிகளுக்கும் மத்தியில் இந்தக் கண்ணுக்குத் தெரியாத எதிரியான கிருமி திரிபடைந்து - திரிபடைந்து புதுப்புதுப் பெயர்களுடன் உலாவிக்கொண்டிருக் கிறது.

சாதாரண இருமல், காய்ச்சல், தடிமனையும் புறம் ஒதுக்காமல் உடனடி பரிசோதனைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது. மருத்துவமனைகள் தொற்றாளர்களினால் நிரம்பின.

எனினும் 24 மாதங்கள் கடந்த பின்னரும் எந்தவொரு நாடா வது இந்த நெருக்கடியிலிருந்து முழுமையாக விடுபட்டிருக்கிறதா..? என்ற கேள்விக்குத்தான் இன்னமும் தெளிவான - சரியான பதில் இல்லை.

எங்கள் இலங்கை தாயகத்தில் இந்தப் பெருந்தொற்று அபாயத்துடன் மற்றும் ஒரு நேரடி ஆபத்தும் சமகாலத்தில் வைரஸாகத் தொற்றியிருக்கிறது.

ஆனால், இது கண்ணுக்குத் தெரிந்த எதிரி. இவ்வளவு காலமும் வீட்டு சமையலறைகளில் அமைதியாக அமர்ந்திருந்த எதிரி.

எரிவாயு சிலிண்டர்களைக் கண்டாலே காத தூரம் ஓடவேண்டிய நிலைக்கு மக்கள் வந்திருப்பதுடன், பழைய நடைமுறையில் மூன்று செங்கல் வைத்து விறகு அடுப்பில் சமைக்கவேண்டிய காலம் மீண்டும் கனிந்திருக்கிறது.

அரசின் பொருளாதாரக் கொள்கையில் நேர்ந்திருக்கும் சிக்கல்களினால், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் படிப்படியாக எகிறிக் கொண்டிருக்கின்றன.

பொது மக்கள் நிலமுள்ள வீடுகளில் காய்கறித் தோட்டம் தொடங்க வேண்டும் என்று ஒரு சிரேஷ்ட அமைச்சர் பந்துல குணவர்தன சொல்கிறார்.

தலைநகரத்தில் அவ்வாறு நிலமற்று தொடர் மாடிக்குடியிருப்புகளில் வசிக்கும் இலட்சக்கணக்கான மக்கள் என்ன செய்யவேண்டும்..? என்று அவர் அறிவுறுத்தவில்லை. அந்த மாடிக்குடியிருப்புகளில் இருக்கும் பூந்தொட்டிகள், பூச்சாடிகளிலிருக்கும் பூமரங்களை அகற்றிவிட்டு, கத்தரி, தக்காளி, வெங்காயம், மிளகாய் பயிரிடவேண்டி வருமோ…?

“ காய்கறி பயிரிட வசதியற்றவர்கள் வீடுகளிலேயே எவ்வாறு மரணிக்கலாம் என்பதையும் சொல்லிக்கொடுங்கள்” என்கிறார் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்ன.


இத்தகைய அவலமான காலப்பகுதியில் 2022 புத்தாண்டு பிறந்துள்ளது.

அரசின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களினதும், மதபீடங்களினதும் புத்தாண்டு நற்செய்திகள் ஆக்கிரமித்துவிட்டன.

இது வழக்கமான நடைமுறைதான்.

கடந்த ஆண்டு மலரும்வேளையில் சொன்னது போன்று ஒரு சில வார்த்தைகளை மாத்திரம் மாற்றி, வாழ்த்து தெரிவிக்கலாம். சொல்பவர்களுக்கும் கேட்டு எழுதுபவர்களுக்கும் எந்தச் சிரமமும் இல்லை.

ஆனால், சிரமங்களை எதிர் கொள்ளவிருப்பவர்கள் மக்கள் தான் !



மலர்ந்திருக்கும் புத்தாண்டிலாவது இந்தப் பெருந்தொற்று முற்றாக மறைந்துவிடவேண்டும் என்பதுதான் ஒவ்வொரு பிரஜையின் வேண்டுதலாகவிருக்கும்.

2020 - 2021 ஆம் ஆண்டுகளில் அனுபவித்த இன்னல்கள் மீண்டும் தொடரக்கூடாது என்பதாகத்தான் பிரார்த்தனைகளாக அமையும்.

இது இவ்விதமிருக்க, நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்குத் தாமதமின்றி சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு அரசுக்கு அறிவுறுத்தல் விடுக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியார்.

நாடு மோசமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. அதனால் வரும் ஏப்ரல் மாதம் ஆட்சி மாற்றம் வரக்கூடும் என்று ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷவே ஆருடம் கூறுகிறார்.

சீனாவிடமிருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்குக் கடனுதவி கிடைக்கவிருக்கிறது என்று சொல்கிறார் திறைசேரி செயலாளர் ஆட்டிகல.

“தேசத்தின் வீழ்ச்சியை அரசாங்கத்தால் தடுத்து நிறுத்த முடியாதிருக்கிறது” என்று ஆளும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இத்தகைய கருத்துக்கள் யாவும் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டம் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்டு, மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்ட பின்னரே வெளியாகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரசியல் தலைவர்கள் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும்போது, உள்நாட்டில் போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகரித்திருப்பதாக மத்திய வங்கி பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இது வெறும் அறிவுறுத்தல் மட்டுமல்ல. அச்சுறுத்தலும்தான்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போன்று, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்வதற்கு பண மோசடிக்கும்பல்கள் புறப்படலாம். விலைவாசி உயர்வினால் அத்தியாவசியப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு நேர்வதற்கு பதுக்கல் முக்கிய காரணமாக விளங்கும்.

“ஒரு புறம் வேடன் - ஒரு புறம் நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்” என்பது போன்று மக்கள்தான் இரண்டு தரப்புக்கும் மத்தியில் மட்டுமல்ல, நான்கு தரப்புகளுக்கும் நடுவில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

மலர்ந்துள்ள புத்தாண்டு காலத்தில் ஆட்சியாளர்கள் ஊடகங்களில் விடுக்கும் வாழ்த்துச்செய்திகளுடன் மேற்குறிப்பிட்ட செய்திகளையும் மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

இவ்வளவு சிக்கல்களை நாடு எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில், ஒரே நாடு ஒரே சட்டம் செயலணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் ஞானசார தேரர், முழு நாட்டையும் இராணுவ மயமாக்கவேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

அன்பு மார்க்கத்தால் மக்களை வழிநடத்த வேண்டும் எனச் சொல்ல வேண்டிய பௌத்த தர்ம போதனையை உபதேசிக்க வேண்டிய ஒரு துறவி, ஆயுத மார்க்கத்தால் வழிநடத்தவேண்டும் என்று சொல்லியிருப்பதின் உள்நோக்கம் என்ன..?

நாடு பொருளாதாரத்தில் அதளபாதாளத்தை நோக்கிச் செல்லும் போது, இராணுவத்தைக் கொண்டாவது அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று சமிக்ஞை விடுக்கின்றாரா..?

இந்தப்பதிவில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டரம்ப் முதல், எங்கள் தேசத்து பௌத்த துறவி வரையில் சொன்ன கருத்துக்களை சுருக்கமாக இங்கே சொன்னோம்.

எமது மக்கள் என்ன சொல்லப்போகிறார்கள் ..? என்பதை பிறந்துள்ள 2022 புதிய ஆண்டில் பொறுத்திருந்து பார்ப்போம்.

■

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுமா?

பானு

> **ஐக்கிய நாடுகள் அமைப்பும் உலக வங்கியும் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் முல்லைத்தீவு மாவட்டம் மாற்றுதிறனாளிகள், விதவைகள் மற்றும் போசாக்கு குறைபாடு உள்ளவர்கள் அதிகமாக வாழும் மாவட்டமாக அடையாளம் கண்டது. வடக்குக் கிழக்கில் நடந்த யுத்தம் இறுதிக்கட்டம் வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் அதி உச்சம் பெற்று இடம் பெற்றதால் அதிகளவு ஆண்கள் கொல்லப்பட்டனர், காணாமல் ஆக்கப்பட்டனர், அங்கவீனர் ஆனார்கள் இதனால் குடும்பத் தலைமை இல்லாமல் வாழ்வாதாரத்தில் வறுமை நிலையை சந்திக்கும் சூழலை எதிர் கொள்கிறார்கள்.**

இலங்கையில் வடக்குக் கிழக்கு பகுதியில் இடம் பெற்ற போர் பல்வேறுபட்ட பொருளாதார, சமூக, சமய, அரசியல் பிரச்சினைகளை தோற்றுவித்தது வடக்குக் கிழக்கு பகுதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உளரீதியாகவும், உடல்ரீதியாகவும், பாதிப்பை ஏற்படுத்தி இன்றும் சரிசெய்ய முடியாத வடுக்களாகவே உள்ளன.

குடும்பத்தின் தலைவனை இழந்த ஆண் இல்லாமல் வாழ்கின்ற நிலமையை ஏற்படுத்தி உள்ளது. மற்றொரு பிரிவினர் விவாகரத்துச் செய்யப்பட்டதால் பெண் தலைமைத்துவத்துக்குத் தள்ளப்பட்டனர், இளம் வயதில் திருமணம் செய்து கைவிடப்பட்டோர், இந்த நிலமைகளை விட 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வரை ஏறக்குறைய 30 வருடங்களுக்கு மேல் இந் நாட்டில் நிலவிய கொடிய யுத்தம் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி, இயற்கை அனர்த்தம், இயற்கை மரணம் எனப் பல காரணங்களால் பெண் தலைமையில் குடும்பங்கள் உருவாகின.

உலகம் முழுவதும் கோடிக்கணக்கான பெண்கள் தமது கணவனை இழந்து குடும்பத்தின் முழுச்சுமையையும் தாமே நிர்வகிக்கும் கட்டாயத்தில் மிகவும் துன்பகரமான வாழ்க்கையை நடாத்தி வருகிறார்கள். உலகமே இன்று மிகவும் பெரும் சவாலை சந்திக்கும் ஒரு பிரச்சினையாக விதவைகளின் அன்றாட வாழ்வியல் காணப்படுகிறது.



இன்று உலகளாவிய ரீதியில் 245 மில்லியன் பெண்கள் கணவனை இழந்து வாழ்கின்றார்கள் என்றால் நாம் சற்றுச் சிந்திக்க வேண்டிய விடயம்தான். எமது நாட்டின் அயல் நாடான இந்தியாவில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 121 கோடி உள்ள நாட்டில் 5 கோடியே 55லட்சம் பேர் கணவனை இழந்துள்ளனர்.அத்தோடு அந் நாட்டில் உழைக்கும் வர்க்கம் உள்ள இளைஞர் படை இல்லாததாலும் பெண்தலைமை குடும்பங்களின் வறுமையாலும் அந்நாடு பொருளாதார பாதிப்புக்களை சந்திக்கும் நிலையை எதிர் கொள்கிறது.

எமது நாட்டில் மொத்த சனத் தொகையில் 53 வீதமானோர் பெண்களாவார் இவர்களில் 25 மாவட்டங்கள் அடங்கலாக நான்கு லட்சத்துக்கு மேற்பட்டோர் கணவனை இழந்த பெண்களாவர். அதில் தமிழர்கள் வாழும் வடக்கு கிழக்கு பகுதியில் சுமார் 90 000 ஆயிரத்துக்கு மேல் உள்ளதாக புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. 30 வருட கொடூர யுத்தமே வடக்கு கிழக்கு மாகாண பெண்களின் இந்த நிலைக்கு காரணம்.

இவற்றை விட வடக்குக் கிழக்கில் உள்ள ஆண்களில் பலர் யுத்த காலத்திலும் அதன் பின்னரும் காணாமல் ஆக்கப்பட்டு அவர் உயிருடன் இருக்கிறாரோ இல்லையோ என்று எந்த முடிவுமற்ற நிலையில் வாழும் பெண்களும் அதிகம் உள்ளனர். இவர்களில் பலர் தனிமையிலும், பலர் குழந்தைகளுடனும், பெற்றோருடனும், இல்லங்களிலும் வாழ்ந்து வருகிறார்கள் கணவனை இழந்ததால் குடும்பத்தினை தலைமையேற்கும் நிலையில் வேலையில்லாத் திண்டாட்டத்தை சந்தித்து பணம் படைத்தவர்களின் ஆதிக்கத்துக் கீழ் வாழும் ஒரு துர்பார்க்கிய நிலையில் வாழும் சமூகமாக உள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பும் உலக வங்கியும் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் முல்லைத்தீவு மாவட்டம் மாற்றுத்திறனாளிகள், விதவைகள் மற்றும் போசாக்கு குறைபாடு உள்ளவர்கள் அதிகமாக வாழும் மாவட்டமாக அடையாளம் கண்டது. வடக்கு கிழக்கில் நடந்த யுத்தம் இறுதிக்கட்டம் வரை முல்லைத்ததீவு மாவட்டத்தில் அதி உச்சம் பெற்று இடம் பெற்றதால் அதிகளவு ஆண்கள் கொல்லப்பட்டனர், காணாமல் ஆக்கப்பட்டனர், அங்கவீனர் ஆனார்கள் இதனால் குடும்பத் தலைமை இல்லாமல் வாழ்வாதாரத்தில் வறுமை நிலையை சந்திக்கும் சூழலை எதிர் கொள்கிறார்கள்.



பல்வேறு துயரங்களை இன்றைய காலத்தில் இப் பெண்கள் சந்திப்பர் மிகவும் வேதனையான விடயம். பல வருடங் களுக்கு முதல் முல்லைத்தீவில் உள்ள மூங்கிலாறு பகுதியில் யுத்தத்தில் கணவனை இழந்து மூன்று பிள்ளைகளுடன் வசித்து வந்த பெண் இரவு வேளையில் வீட்டில் தனித்திருக்க முடியாத அச்சமான சூழலால் அவரது உறவினர் வீடு விஷமிகளால் தீயிட்டு கொழுத்தப் பட்டது. இதனால் அவரது அனைத்து உடைமைகளும் எரிந்து நாசமாக்கப்பட்டது. இவ்வாறு வடக்குக் கிழக்கில் பல அராஜகங்கள் இன்றும் நடந்தேறிக் கொண்டேயிருக்கின்றன. சொந்த நிலங்களிற்காக முல்லை மாவட்டத்தின் கோப்ப பிரிவில் அண்மையில் போராடியவர்களில் 84 குடும்பங்களில் 30 குடும்பங்கள் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் அவர்கள் சொந்த இடங்களில் போராட மழை, வெயில், பனி எனப் பாராது போராடினார்கள் பல நெருக்கடிகளை கூடச் சந்தித்திருந்தமை சுட்டிக்காட்ட வேண்டிய விடயம்

வடக்குக் கிழக்கு பகுதியின் கட்டமைப்பு வளர்ச்சிக்காக அரசாங்கம் பல பில்லியன் டொலர்களை கொண்டு குவித்த போதிலும் யுத்தத்தில் கணவரை, தந்தையரை, சகோதரரை, உறவினரை மற்றும் 90 000க்கு மேற்பட்ட பெண் தலமை குடும்பங்களிற்காக வழங்கப்பட்ட உதவி மிகவும் குறைவு என்பது சமூக ஆர்வலர்களின் கருத்து. இலங்கையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் கூற்றுப்படி இலங்கையில் வடபகுதியில் இருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் இவர்களில் பலரும் பெண்களை குடும்பத் தலைவர்களாக கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் வளைகுடா நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாக வேலை தேடுகின்றனர். 2011 ஆம் ஆண்டில் இத்தகைய பெண்களின் எண்ணிக்கை 300 ஆக மட்டுமே இருந்தது இது பின்னர் அதிகரித்தது. என மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலான விதவைகள் தொழில் வாய்ப் பின்மை, பாதுகாப்பின்மை, வறுமை, வன்முறைக்கு உள்ளாகுதல், பொருளாதார சிக்கல், மோசமான சமூகப் பார்வை, அவர்களுக்கு குழந்தைகள் இருந்தால் கல்வி, போசாக்கு, சுகாதாரம் போன்ற விடயங்களில் பொருளாதாரப் பிரச்சினையால் கவனிக்க முடியாது, உறவினர், பிறரின் உதவியை பல விடயங்களுக்கு நாட வேண்டிய சூழல் எனப் பல சிக்கல்களை எதிர் நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள். இவர்கள் காலம் பூராகவும் கண் கலங்கி சமுதாயத்தால் அடக்கி, ஒடுக்கப்படுபவர்களாகவும் சில ஆண்கள் தமது தவறான நோக்கத்துக்குப் பயன்படுத்திக் கை கழுவி விடும் நிலைக்குத் தள்ளப்படும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகிறார்கள்.

சுப காரியங்களிலும் நல்ல நிகழ்வுகளிலும் கூட அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவது குறைவு. இதனால் அவர்கள் சமூகத்தில் பயமும் விரக்தியிலும் தமது பிள்ளைகளின் எதிர் காலத்தினை கருத்தில் கொண்டு வாழ்க்கையை பல போராட்டங்களுக்கு மத்தியில் முன்னெடுத்து செல்கிறார்கள்.

இவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மறு வாழ்வு பற்றியும் அவர்களுக்கான வழ்வாதார உதவிகள் புரிவதிலும் சமூகங்களின் மத்தியில் உள்ள ஒரு சிலர் சிந்தித்து அதற்காகச் செயற்படுகின்றனர். பலர் சமூகத்தின் மத்தியில் வாழும் விதவைகள் தொடர்பில் அவர்கள் எதிர் நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து கவனம் கொள்ளாமல் சுய நலவாதிகளாகவே உள்ளனர். அவர்களின் பிரச்சினை அரசாங்கத்தினதோ, தனி நபரினதோ என்னெண்ணி சமூக பொறுப்பிலிருந்து ஒதுங்கிக் கொள்பவர்களாகவே சமூகத்தில் மத்தியிலுள்ள கற்றோரும் பணம் உள்ளோரும் காணப்படுகின்றனர். இந்த நிலை மாற வேண்டும். பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அவர்களை ஏமாற்றி வாக்குகளை வாங்குகிறார்கள். சிறிய உதவியை செய்து ஊடகங்களில் தம்மை பெரியதாக விளம்பரப்படுத்துகிறார்களே தவிர அவர்களின் நிகழ்கால, எதிர்கால வாழ்விற்கும் பாதுகாப்பிற்கும் ஒரு வழிகாட்டியாக எந்த ஒரு விடியலையும் ஏற்படுத்தி உதவி செய்வதாக தெரியவில்லை.

ஒவ்வொரு சமூகத்தின் மத்தியிலும் வாழும் விதவைகள் எதிர் நோக்கும் சமூக, பொருளாதார, உளவியல் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அவர்கள் சமூகங்களின் மத்தியில் கௌரமாகவும் பொருளாதாரத்துடனும் உளவியல் ஆரோக்கியத்துடனும் வாழ வேண்டுமாயின் அவர்களுக்கு சமூகங்களின் மத்தியிலிருந்து உதவிக்கரம் தீட்டப்படுவது அவசியமான தாகும். ■



# வெகுமதி.....

வேதநாயகம் தபேந்திரன்

பொறுத்தார் அரசாள்வார். இந்தப் பழமொழிக்கு மிகச் சிறந்த உதாரணம் எனக் கூறக் கூடிய உலகத் தலைவர் யார் ?

நெல்சன் மண்டேலாவுக்காகத்தான் முதல் விரலை மடிக்கலாம். தனது கறுப்பின மக்களின் உரிமைக்காகப் போராடி 1953 ஆம் ஆண்டில் சிறை சென்றார். 1990 ஆம் ஆண்டில் விடுதலை பெற்றார். உலக அரசியலின் மாற்றம் அவரது விடுதலையை மட்டும் தீர்மானிக்கவில்லை. தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்ற பெருமையையும் அவருக்கு அளித்தது.

மண்டெலா 27 வருடங்கள் தொடர்ந்து சிறையில் பொறுமையாக இருந்தார். மாறி வரும் உலகச் சூழலுக்காகக் காத்திருந்தார். எடுத்த எடுப்பிலேயே எதுவும் கிடைக்காது. பொறுமையின் மூலமாக நன்மைகள் அடைந்தோர் பலர்.

எம்.ஜி.ஆர் 1977 இல் தமிழக முதல்வரானார். 1987 இல் காலமானார். கலைஞர் கருணாநிதி அந்தப் பத்து வருடங்களும் எதிர்க் கட்சியிலேயே இருக்க நேரிட்டது.

ஒரு மாபெரும் கட்சியை அதன் தொண்டர்களைப் பத்து வருடங்கள் குலையாமல் காத்திருப்பது என்பது இலகுவான விடயமல்ல.

1990 இல் கருணாநிதி தலைமையிலான திராவிடர் முன்னேற்றக் கழகம் வென்று அவர் முதல்வரானார். ஆனால் துரதிஸ்டவசமாக 1991 மே மாதச் சம்பவங்களால் அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. ஜெயலலிதா முதல்வரானார். இதனால் கருணாநிதி மீண்டும் 05 வருடங்கள் எதிர்க்கட்சியில் அமர வேண்டி வந்தது.

பொறுத்தார் அரசாள்வார் என்பது போல அவர் 1996 இல் மீண்டும் முதல்வரானார். எமது நாட்டின் பக்கம் வருவோம்.

1970 இல் கூட்டணி அமைத்துப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஸ்ரீமாவோ அம்மையார் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தார். அது மட்டுமல்ல 1972 ஆம் ஆண்டில் சோசலிச ஜனநாயகக் குடியரசு யாப்பை நிறுவி பிரித்தானியாவின் முடிக்குரிய நாடு என்ற நிலையையும் மாற்றி அமைத்தார்.

உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்கும் அவரது கொள்கைகள் காரணமாக ஏற்பட்ட பசி பஞ்சம் காரணமாக 1977 இல் அவரது கட்சி வெறும் 6 ஆசனங்களைப் பெற்றுத் தோற்றுப் போனது.

அது மட்டுமல்ல ஜே.ஆர் 1980 இல் குடியுரிமைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார். 1970 தேர்தலில் ஸ்ரீமாவுக்கு மக்கள் ஆணை 05 வருடங்களே கிடைத்தது. ஏழு வருடங்கள் பிரதமர் பதவி வகித்தது தவறு. இதனைக் காரணம் காட்டி அவரது குடியுரிமையைப் பறித்தார்.

இலங்கையில் ஒரு ஆட்சித் தலைவரே குடியுரிமை பறிக்கப்பட்ட முதலாவது வரலாறாகப் பதிவாகியது. விளைவு 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீமா அம்மையாரால் போட்டியிட முடியவில்லை.

ஹெக்ரர் கொப்பேகடுவ சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டார்.

1994 ஆம் ஆண்டு காலம் கனிந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஏகபோகம் முடிவுக்கு வந்தது. மகள் சந்திரிகா ஜனாதிபதியாகவும், தாய் ஸ்ரீமா பிரதமராகவும் பதவி ஏற்றனர். பொறுத்தனர். அரசாண்டனர்.

பொறுமையின் வடிவம் கொண்டவர்களே சிறந்த தலைவர்களாக இருப்பார்கள்.பொறுத்தார் அரசாள்வார்.பொங்கினார் காடாழ்வார். பொறுமை இல்லாதவர்களுக்கு எதுவுமே கிடைக்காது. இது எமது முன்னோர்கள் தந்த அனுபவமொழி. ஒரு தென்னம் பிள்ளை நடுகின்றோம். வளர்ந்து பலன் தர 3 முதல் 5 வருடங்கள் வரையில் செல்லும். சீராகப் பராமரித்தால் தொடர்ந்து பலன் தரும். பொறுமையின் பரிசு அது.

பிள்ளைகளை நற்பண்புடன் கல்வி,கேள்விகளில் சிறந்தவர்களாக வளர்க்கின்றோம். கைக் குழந்தைப் பருவத்திலிருந்து இளைஞர் பருவம் வரையில் எம்மைத் தியாகம் செய்து வளர்க்க வேண்டும். பாலன் பஞ்சம் பத்து வருசம். பிள்ளைகள் வளரும் காலத்தில் வரும் பொருளாதாரக் கஸ்டத்தைப் பொறுக்க வேண்டும். ஒழுங்காக வளர்ந்த பிள்ளை ஒழுங்காகப் பெற்றோரைச் சகோதரர்களை உற்றோரைப் பார்க்கும். இது பொறுமையின் பலன்.

நல்ல நிலையில் வியாபாரம் செய்து வசதியாக வாழ்ந்த ஒருவர் திடீரென வந்த மாற்றத்தால் நொடிந்து போகின்றார். வாழ்வின் கீழ் மட்டத்திலிருந்து மீண்டும் போராடுகின்றார். படிப்படியாக முன்னேறிச் சில வருடங்களில் பழைய உயர் நிலையை அடைகின்றார். இதுவும் பொறுமையின் பரிசு.

எடுக்கும் முயற்சிகள் யாவும் வெற்றி பெற்றால் வெற்றிகளும் கசந்து போகும். வாழ்வும் கசந்து போகும். எமது முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தால் உழைப்பதற்கான ஊக்கம் அற்றுப் போய் விடும்.

வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தால்தான் எமது உழைப்பின் பெறுமதி விளங்கும். வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு. தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு என்ற உண்மை புரியும்.

வெற்றிக்கு நூறு தந்தைகள் உண்டு. தோல்வி என்பது ஒரு அனாதைக் குழந்தை. இதுவும் எமது வாழ்வியல் உண்மை. அதாவது வெற்றியைக் கொண்டாடப் பலர் வருவார்கள். தோற்ற மனிதர்களை யாரும் திரும்பிப் பார்க்காமல் விலகி ஓடுவார்கள். தோற்ற மனிதனைக் கொண்டாட யாருமில்லை. சுயநலத்தின் அடிப்படையில் மட்டும் பெருமளவில் கட்டப்பட்டதுதான் மனிதர்களின் உலகம்.

ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை. புதிய ஆண்டில் இன்று புகுந்துள்ளோம். பொறுத்தார் அரசாள்வார். உழைப்பவர்க்கே உலகம் சொந்தம். இதை உணர்ந்து வெற்றிநடை போடுங்கள். அனைவருக்கும் புது வருட வாழ்த்துகள்.

**“ பிள்ளைகளை நற்பண்புடன் கல்வி, கேள்விகளில் சிறந்தவர்களாக வளர்க்கின்றோம். கைக் குழந்தைப் பருவத்திலிருந்து இளைஞர் பருவம் வரையில் எம்மைத் தியாகம் செய்து வளர்க்க வேண்டும். பாலன் பஞ்சம் பத்து வருசம். பிள்ளைகள் வளரும் காலத்தில் வரும் பொருளாதாரக் கஸ்டத்தைப் பொறுக்க வேண்டும். ஒழுங்காக வளர்ந்த பிள்ளை ஒழுங்காகப் பெற்றோரைச் சகோதரர்களை உற்றோரைப் பார்க்கும். இது பொறுமையின் பலன். ”**



# 35 என்ன உலகமடா பரமானந்தா?

தமிழ்க்கவி



“ஊரான் ஊரான் தோட்டத்தில ஒருத்தன் போட்டானாம் கத்திரிக்கா காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி காயிதம் போட்டானாம் வெள்ளக்காரன்”

ஞ... பாடுபட்டு தோட்டஞ்செய்த கமக்காரனுக்கு கத்தரிக்காய்க்கு விலை போடத் தெரியாதே அதுக்கு ஆட்சியில இருந்த வெள்ளக்காரன் காயிதம் போடுறான். எல்லாம் நேரந்தான். அவனவன் உற்பத்தி செய்யிறதை அவனவன் எண்டைக்கு விக்கிறானோ அவங்களுக்கு அண்டைக்குத்தான் நீதி ஞாயங் கிடைக்கும் இதென்னடா இடையில கடையளப் போட்டு அந்தக்கடையளக் குத்தகைக்கு விட்டு அதிகாரம் சம்பாதிக்கிது. அந்தக் குத்தகையக் காட்டி தரகன் சம்பாதிக்கிறான்

இவங்களுக்கெல்லாம் வாய்க்கட்டை போட்டு மிஞ்சுறதைத்தானே கமக்காறனோ உற்பத்தியாளனோ கொண்டு போக வேண்டியிருக்கு. கத்தரிக்காய் என்ன விலை தெரியுமோ?

எடெய் பொறடா பொறு என்ன கத்தரிக்காயோ? இப்ப கத்தரிக்காய் பயித்தங்காய் போட்டவைக்குப் பாதுகாப்புக் குடுக்க வேண்டிய காலமடா.. பயித்தங்காய் கத்தரிக்காய் அந்தவிலை. அதுசரி தோட்டம் போட்டவன் என்னத்தைக் கண்டதுநா... பெஞ்ச மழையில இருந்த கண்டெல்லாம் விறைச்சுப் போச்சடா... சிலபேற்ற கண்டுகள் வேரழுகி தூங்கிற்றுது பின்ன விக்குந்தானே. இதுக்க வீட்டுத் தோட்டம் பயளை இயற்கையாத்தான் போடுகினம் மருந்தெண்ட சாமான் கிடையாது. பூச்சி புழு ஒண்டுமில்லாம விவசாயம் செய்யிறவை கெட்டிக்காறர்தான். ஆனா உது பெரிய ஏக்கர் கணக்கில செய்யிறவைக்குக் கட்டாது கண்டியோ. விவசாயமெண்டா பயிர்பச்சை மட்டுமே ஆடு, மாடு, கோழி, தாரா எண்டு எத்தினை கிடக்கு.

கோழி அந்த விலை. முட்டை அந்த விலை. மீன்? அட கடவுளே நாலுநாளா ஐசுக்க கிடந்து அழுகின மீன் ஆகாசத்தில நிண்டு விலை சொல்லுறாங்கள். . என்னத்தச் சொல்லுறதடா அந்த நேரம் புத்தியா நாலு கத்தரிக்கண்ட ரெண்டு பயத்தங்கொடிய, கீரைய கொச்சிய நட்டனோ இப்ப சவடாலா திரியிறன். எட பயிர் பச்சைய விடு கோழிக்குஞ்சுகளுக்கு என்னடா வந்தது. நல்லாத் துள்ளி விளையாடுதுகள் விடியப்பாத்தா தலைகுப்பறக் கிடக்குதுகள். கண்ணூறடா நானும் முண்டக்கண்ணி அம்மனுக்கு நேத்தி வச்சுத்தான் இருக்கிறன். உந்த கருநாக்க வச்சுக் கொண்டு சும்மா கிடவாம போற போக்கில ‘வித்தாரக்கள்ளி விறகுக்குப் போனாளாம் கத்தாள முள்ளு கொப்போட ஏறிச்சாம்’ எண்டமாதிரி நாங்களுந்தான கோழி வளக்கிறம் அது முட்டை இடுதில்ல எண்டாளடா உருக்குமணி. பங்கார் நல்ல கொழுத்த சேவல். கள்ளன் கையில குடுத்தாலும், ரண்டாயிரங் குறையாம வித்துப் போடுவான். போச்சே! உவள் குஞ்சுவின்ர நாய்க்கடுவன் வேலிப் பொட்டுக்கால வந்து அதின்ர குரவளையக் கடிச்சுப் போட்டுதடா. பாழ்படுவாற்ற கொள்ளிக்கண். நாய் என்னடா செய்யும் வாயில்லாத சீவன் வேட்டையாடித் தின்னிறது அதின்ர வாழ்க்க முறை. அதத்தானே அது செய்தது. நான் அந்த வேலிப்பொட்டை அடைக்காம வச்சிருந்தது என்ர பிழை.

எட விடுடா இப்ப நாய்க்குப் பேய்க்குத்தப்பி உயிர் வாண்ட ஒரு காலம் இருந்தது. இப்ப ஊர்வழிய ஒரு காரியமும் செய்யேலாதுடா. சனம் எரியிற வீட்டில பிடுங்கிறது லாவமெண்டுதானே திரியுதுகள். நீ சொல்லுறாயடா உந்தப் பலசரக்கு கடையில முந்தநாள் காக்கிலோ செத்தல்மிளகாய் நூத்திநாப்பது ரூவாக்கு வாங்கினனா... கேள் கதைய அப்பவே கடைக்குள்ள நாலு சாக்கு செத்தல் பார்வைக்கு வச்சிருந்தவங்கள். விடிய செத்தல் ஆயிரந்ரூவாயாமடா. குருச்சந்திர யோகம். உதென்னடா குருப்பெயர்ச்சி உந்த மாதிரி கொண்டு வந்து கொட்டுதேயடா. இப்பன்ன சொல்லுறாய் கிடக்கிற சாமான் முடியட்டும் வாங்குவம் எண்டிருக்கிறது ரொம்பத் தப்புடா. காசை வச்சுப் பாத்துக் கொண்டிராம... கிடைச்ச சாமானெல்லாம் வாங்கிக் கொண்டே வீட்டில அடுக்கிறதுதான் புத்தியடா. எடேய் இஞ்ச கிட்டவா கதை சொல்ல. அரசாங்கம் சனத்திட்ட காசு வாங்கிற திட்டமொண்டும் வருதாங் கண்டியோ... உவன் ராசன் சொன்னவன். எட அவன் சும்மா சொல்லுறானே நாலெழுத்து படிச்சவன் ஏதோ அசுமாத்தங் கண்டுதானே பறையிறான். வங்கி வழிய காசு கிடக்கிறத கண்டிட்டாங்களடா. அப்ப வீட்டில வைக்கிறதோ. பேயா அவன் ஆற்றா நீ தடுக்கில பூந்தா அவன் கோலத்துக்க பூருவான்.

திடீரெண்டு பெரிய சின்ன நோட்டுகள் செல்லாதெண்டு சட்டம் போட்டா அப்ப மாட்டிருவியே

ஏதோ அவிவிருத்தி உற்பத்திய பெருக்கப்போறமெண்டு ஏதோ குத்தி முறிஞ்சாங்கள் இப்ப ‘நல்ல வாயன் பாடுபட நாறல்வாயன் திண்டழிக்கிறான்’ எண்டமாதிரி போயிற்றுது. இப்பென்ன திரு வோடு ஏந்திக்கொண்டு நாடுநாடாப் போயிருக்கினயாம் உதெல்லாம் பெரிய இடத்து விவகாரம் என்னவோ சொல்லுவினமே “மாமியாற்ற சீலை விலத்தினா கையாலுங் காட்டேலாது வாயாலுஞ் சொல்லேலாது” எண்டு. அந்த நிலைமைதான்ரா எங்களுக்கும். விடுடா... ‘நாய்க்கு நடுக்கடலுக்க போனாலும் நக்குத்தண்ணியே நக்குத்தண்ணிதான்ரா’ சிறீமான் பொதுசனமும் அப்படித்தான். ஏதோ காலம் இழுத்த இழுப்பில போக வேண்டியதுதான் எல்லாத்துக்கும் ஒரு சாட்டு வச்சிருக்கிறாங்களடா.. என்ன கொரோனா... கொரோனா வந்ததாலதான் இப்பிடிப் பஞ்சமாம். பின்ன காலங்காலமா கிடந்த நடைமுறையள மாத்திறமே... இதால ஏதும் பாதகம் வந்திட்டா என்ன செய்யிறது எண்டதெல்லாம் ஆர் யோசிக்கிறது.


சலங்கை கட்டினமாதிரி கோர்வையாக்காய்க்கிற மரங்கள் ஒருகாய் ரெண்டுகாயும் காய்க்கமாட்டாம திணறுது. அதுக்கும் ஆமான சாப்பாடு இல்லை. நெல்லு வயலுகளப் போய்ப் பாக்கப்போறியோ வரம்பவிட்டு மேல வர மாட்டாம பயிருகள் விரலளவு கதிர் கக்கிக்கொண்டு நிக்குதடா...’ செட்டிக்கு வெள்ளாம சென்மத்துப் பகைடா..” பின்ன அரசாங்கத்தில போடுற திட்டங்களில ஏதென் அனுபவப்பட்டவன் போடுறானே. எட எந்த நாட்டில கடன வாங்கலாம் எந்த நாட்டுக்கு காணிய விக்கலாம் எண்டு யோசிக்கிறாங்களே தவிர இருக்கிற சனத்தை மேடேத்திறமாதிரி ஏதும் திட்டமிருக்கே.

நா... இப்ப கிடக்கிறதெல்லாங் கிடக்கட்டும் கிழவனத்தூக்கி மடியில வை’ எண்டமாதிரி சேதுவில அணைகட்ட போறமாம் எண்டு கிளம்பியிருக்கிறாங்களடா இப்ப என்ன செய்வீங்க இப்ப என்ன செய்வீங்க. என்ன... மன்னார் களப்பில தொடங்கி தமிழ் பகுதியள்ள வாழுற மீனவர்களை இனிக் கடவுள்தான் காப்பத்த வேணும் என்னவோ கிட்டவரட்டும் திட்டமிருக்கு எண்ட மாதிரி முன்ன சேதுவுக்கு அணைகட்ட போனவைய தமிழ் நாட்டுக்காறர் தடுத்திட்டினயாம் இப்ப இலங்கைக் காறர் விரலுக்கு மிஞ்சி வீங்கப்போகினயாம் பின்ன ‘.வீட்டுக்கு வழியில்லாட்டியும் தீட்டிப் போட்டாக் கடி’ எண்டமாதிரி சனம் சாப்பாட்டுக்கு அல்லாடப்போகுது அதை விட்டிட்டு...

மெய்யேடா உதை விட்டிட்டு உவன் கந்தையன்ர கடையில அங்கர் கிடக்காமடா... பையப் போய் எனக்கெண்டு சொல்லி ஒரு பக்கற்று வாங்கிக் கொண்டாவன். அவர் தருவரடா ஆக்கள் இருக்கிற நேரமாப் போகாம பார்த்துப்போ.

■

> “கோழி அந்த விலை. முட்டை அந்த விலை. மீன்? அட கடவுளே நாலுநாளா ஐசுக்க கிடந்து அழுகின மீன் ஆகாசத்தில நிண்டு விலை சொல்லுறாங்கள்... என்னத்தச் சொல்லுறதடா அந்த நேரம் புத்தியா நாலு கத்தரிக்கண்ட ரெண்டு பயத்தங் கொடிய, கீரைய கொச்சிய நட்டனோ இப்ப சவடாலா திரியிறன். எட பயிர் பச்சைய விடு கோழிக் குஞ்சுகளுக்கு என்னடா வந்துது. நல்லாத் துள்ளி விளையாடுதுகள் விடியப்பாத்தா தலைகுப்பறக் கிடக்குதுகள்.”



# போதைப் பொருள் பாவனையால் சீர்கெடும் சமூகம்



சந்திரமதி போல்ராஜ்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மக்கள் சமுதாயத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் எதிராக உலகளாவிய ரீதியில் எழுந்திருக்கும் பிரச்சினைதான் இந்த போதைப்பொருட்கள். போதை என்பது தன்னிலை மறக்கச் செய்து உடல்-உள பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகும். இது தனிமனிதனை மட்டும் பாதிக்கும் பழக்கம் அல்ல. இதனால் அவரைச் சுற்றியுள்ள சமுதாய மும் பாதிப்படைகிறது. போதைப்பொருள் பழக் கமா-னது இன்று உலகில் சமூக, சுகாதார மற்றும் பொருளாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது.

இத்தகைய போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை, சமுதாய அந்தஸ்து, அலுவலக வேலை, நட்பு, உறவினர்கள் மற்றும் தொடர்புகள் என எல்லாவற்றிலும் விரி சல் ஏற்பட்டுவிடுகிறது. போதைக்கு அடிமையாகி இளமையிலேயே இறந்துவிடும் குடும்பத் தலைவனால் அக்குடும்பமே சிதைந்து சீரழிந்து விடுகின்றது. குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற் றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாகிவிடுகின்றது.

தன் சிந்தனையை போதையில் புதைத்து மன மயக்கத்தையும் குழப்பத்தையும் மனிதன் ஏற்படுத்திக் கொள்கின்றான். எல்லோருக்கும் எளிமையாகவும் பரவலாகவும் கிடைத்துவிடும் போதைப் பொருள்தான் சாராயம் மற்றும் அதைச் சார்ந்த மது வகைகள்.

இவை தவிர போதைப் பொருட்களில் மது, ஹெராயின், பெத்தனால் ஊசி, கஞ்சா, புகையிலை, பான் மசாலா, போதை தரும் இன்ஹேலர்கள் இன்னும் பல வகைகள் அடங்கும். தற்போது மேற்கத்திய நாடுகளில் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை சதவிகிதத்தின் அடிப்படையில் குறையத் தொடங்கியுள்ளது. ஆனால், ஆசிய நாடுகளில் போதைப்பொருள் அடிமைகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் மேலை நாடுகளில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுகள் நம் நாட்டில் இல்லாமல் போனதுமாகும். 1987 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வொரு வருடமும் ஜூன் 26 ஆம் திகதி போதைப் பொருள் மற்றும் சட்ட விரோதக் கடத்தல் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இலங்கையில் போதைப் பொருட்கள் 1980களில் பரவ ஆரம்பித்தது. இதனடிப்படையில் 13-15 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களில் 11 விகிதத்தினர் புகைத்தல் பழக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக உலக சுகாதார திணைக்களம் தெரிவிக்கின்றது. இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணிகள் நவீன போதைப் பொருட்கள் நாட்டினுள் பிரவேசிக்க வழிவகுத்தன.

இன்று வர்த்தக ரீதியில் போதைப் பொருட்கள் சந்தைப் படுத்தப் படுகின்றன. அநேகமாக சட்ட விரோதமான கடத்தல் போன்ற வழிகளிலேயே இவ் வர்த்தகம் நடைபெறுகின்றது. மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் இத்தகைய நட வடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாலும் இதற்கு உடந்தையாக வரு மானத்தைப் பெற்று கொள்ளும் நோக்கில் சில பெரும் புள்ளிகள் இருப்பதினாலும் இதனை இல்லா தொழிப்பது ஒரு கடினமான செயற்பாடாகவே மாறி வருகின்றது.

இளவயதில் தந்தையை இழந்து தாயின் பராமரிப்பில் வளர்வோர், தாய் தந்தையரை இழந்து அநாதரவாக்கப்பட்டோர், சமூக அந்தஸ்தில் குறைந் தவர்களாகத் தங்களை எண்ணுகின்றவர்கள், இளம் வயதில் தொழில்களில் ஈடுபட்டு சம்பாத்தியம் பெறுபவர்கள் எனப் பலதரப்பட்டவர்களே இக் குற்றத்திற்கு ஆளாகின்றனர்.

பள்ளிப் பருவத்திலோ அல்லது கல்லூரிகளிலோ படிக்கும் போது தீய நண்பர்களோடு ஏற்பட்ட பழக் கங்களினாலும் மற்றும் பொழுது போக்காகவும் பழ கிக் கொண்ட பழக்கத்தை இன்று வரை விட்டு மீளமுடியவில்லை என வருத்தப்பட்டுக் கொள்ப வர்களும் இருக்கிறார்கள். பலமுறை இத் தீய பழக் கங்களை விட்டொழிக்க வேண்டும் என முயற்சி எடுத்து தோற்றுப் போனவர்களும் இருக்கிறார்கள். ஒன்றைத் தவிர்க்க மற்றொன்றைப் பயன்படுத்தி அதையும் சேர்த்து அடிமை யாகிக் கொண்டவர்களும் இருக்கின்றனர். கடின வேலை செய்பவர்கள் தங்கள் உடல் வலி மறந்து இருக்கவும் போதையைப் பயன்படுத்துவதாகக் கூறுகிறார்கள்.

கல்முனை நீதவான் நீதி மன்றில் குற்றவாளிகளாகக் இனங் காணப்பட்டவர்களில் 14 வயது முதல் உயர்தரம் படிக்கின்ற மாண வர்கள் உள்ளடங்கியிருப்பதாக ஆவணக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. படிக்க வேண்டிய வயதில் போதைக்கு அடிமையான இவர்கள் சாதா ரண மக்களிலிருந்து ஒதுங்கி வாழவே தலைப்படு கின்றனர். இப்பழக்கத்திற்கு ஆளாகின்றவர்கள் அப்பழக்கத்தை ஒத்த நண்பர்களுடன் உறவு கொள்வதால் ஏனையோரால் கைவிடப்பட்டு அவர்களா கவே ஒதுங்கிக் கொள்ளுகின்ற போக்கும் உருவாகின்றது.

வாகனம் ஓட்டுபவர்கள் போதையைப் பயன்படுத்துவதால் கவனம் சிதைந்து விபத்துக்களுக்கு உள்ளாகி உயிர் இழப்புகளை ஏற்படுத்துவது, திருடுதல், பொய் பேசுதல் மற்றும் மானக்கேடான விஷயமாக இருந்தாலும் அதைச் செய்யத் துணிந்து விடும் நிலை ஏற்பட்டுவிடுகின்றது. போதையின் கோரப்பிடியில் அகப்பட்டவர்கள் அஞ்சாமல் பாலியல் குற்றங்களிலும் ஈடுபட்டு அதன் மூலம் பல நோய்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

இலங்கை அரசாங்கம் 2015 ஆம் ஆண்டை போதைப் பொருள்கள் அற்ற ஆண்டாக மாற்றி யமைக்க வேண்டும் என்று பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதேநேரம் இன்று இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பொறுத்த வரை இந்நடவடிக்கைக்கு அவை போதி யதாக இல்லை. போதைப் பொருள் பாவனைக்கு எதிரான சட்டம் இறுக்கமானதாக இல்லாமையால், இக் குற்றம் சாதாரணமாக மாறி செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்தும் வருகின்றது. தண்டப்பணம் அறவிடலும் விளக்கமறியலும் போதாமையாக இருப்பதே இதற்குக் காரணம்.

> **இன்று வர்த்தக ரீதியில் போதைப் பொருட்கள் சந்தைப் படுத்தப்படுகின்றன. அநேகமாக சட்ட விரோதமான கடத்தல் போன்ற வழிகளிலேயே இவ் வர்த்தகம் நடைபெறுகின்றது. மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாலும் இதற்கு உடந்தையாக வருமானத்தைப் பெற்று கொள்ளும் நோக்கில் சில பெரும்புள்ளிகள் இருப்பதினாலும் இதனை இல்லாதொழிப்பது ஒரு கடினமான செயற்பாடாகவே மாறி வருகின்றது.**

போதைக்கு எதிராக பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளன. நம் உடல் ஆரோக்கியத்திற்கு நாமே தீங்கிழைத்துக் கொள்வது பாவமான செயலாகும். நாம் செய்ய வேண்டியது இது போன்ற போதைப் பழக்கங்களிலிருந்து விலகி இருப்பது மற்றும் இது குறித்த விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் ஆகும். போதை என்பது தனிமனிதனை மட்டும் பாதிக்கும் பழக்கம் என எண்ணிவிட இயலாது. இதனால் அவரைச் சுற்றியுள்ள சமுதாயமும் பாதிப்படைகின்றது. படிக்கும் வயதில் போதையைப் பயன்படுத்தினால் தம்முடைய படிப்பும் கெட்டு, தன்னோடு பழகும் சக நண்பர்களின் படிப்பையும் கெடுத்துவிடும்.

எனவே போதைப் பொருள் பாவனை என்பது அதனை பயன்படுத்துபவர்களுக்கு மட்டுமன்றி அவர்களின் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் சேர்த்தே கெடுதலை ஏற்படுத்துகின்றது. இந்த போதைப் பழக்கத்தைக் கைவிடுவதன் மூலம் ஓர் மனிதன் பொருளாதாரரீதியாக முன்னேற்றமடைய லாம், உடல் ஆரோக்கியத்துடன் வாழலாம், மேலும் சமூகத்திலும் நன் மதிப்புடன் வாழலாம். இவ்வாறாக மகிழ்ச்சியான வாழ்க்கையை பெற்றிட போதையை ஒழிப்பதுதான் ஒரே வழியாகும்.



வைத்திலிங்கம் ரஜனிகாந்தன்
B.com, PGED(Distinction),
Dip.in Child Protection

# பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் அலகும் அதன் முக்கியத்துவமும்

பாடசாலைக் கல்விக்குப் பின்பு உயர்கல்விக்கோ அல்லது ஏதேனுமொரு தொழிலுக்கோ பிரவேசிப்பதற்கு எதிர்பார்ப்புடன் இருக்கும் எந்தவொரு மாணவருக்கும் தெரிவு செய்யக்கூடிய தொழில் தொடர்பான அறிவை விருத்தி செய்து கொள்வதே தொழில் வழிகாட்டலின் இன்றைய நோக்காக வுள்ளது. அதாவது ஒருவர் தனது வாழ்நாளில் மேற்கொள்ளும் சகல தொழில்களும் "தொழில் வாழ்க்கை" எனப்படும். எனவே மாணவர்களை அவர்களின் எதிர்காலத் தொழில் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது பாடசாலைகளின் பிரதான கடமையாகும். இந்தவகையில் ஒருவர் தனக்கு பொருத்தமான தொழிலை தனது ஆற்றல், உளசார்பு, ஆர்வம் ஆகிய பண்புகளினதும் தொழிலை பெறக்கூடிய வாய்ப்பின் அடிப்படையில் தெரிவு செய்து அதைப்பெற்று தொழில் வாழ்க்கையில் முன்னேற வழங்கப்படும் உதவியே தொழில் வழிகாட்டல் எனப்படும்.

தொழில் வழிகாட்டல் என்பது சாமுவேல் பிராங் பார்ஸன் (Samuvel frank Parson) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அவரால் 1908 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் பாடசாலையில் இருந்து விடுபட்ட பிள்ளைகளுக்காக ஆலோசனை சேவையை தொடங்கியிருந்தார். அவரின் நோக்கமாக மாணவர்களுக்கு தொழில் பற்றிய சிறந்த வழிகாட்டல்களை மேற்கொள்வதே ஆகும். எனவே தொழில் வழிகாட்டல் என்பது ஒருவர் தன் தொழிலை தேர்ந்தெடுப்பதற்கும் அதற்கு தயாராகுவதற்கும், தொழில் பிரவேசிப்பதற்கும் அத்துடன் தொடர்பான அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்வதற்குமான செயற்பாடு ஆகும்.

இலங்கையில் ஏற்பட்டு வரும் சமூக, பொருளாதார மாற்றங்களை அடிப்படையாக வைத்து மாணவர்களை பொருத்தமான தொழில்களுக்கு ஈடுபடுத்துவதற்காக முதன் முதல் 1957/10 ஆம் இலக்கம் கொண்ட சுற்று நிருபம் மூலம் தொழில் வழிகாட்டலை பாடசாலை முகாமைக்குள் அறிமுகப்படுத்தி இருந்தனர். ஆனாலும் பல்வேறான நடைமுறைச் சிக்கல்களையும் அத்தோடு அடிக்கடி கலைத்திட்ட மாற்றங்களையும் சந்தித்தமையினால் இச்செயற்பாடு பாடசாலை முறைக்குள் நீண்டகாலம் தடைப்பட்டிருந்தது. இதன் பிறகு 6/2003, 6/2006 சுற்று நிருபங்களுக்கு அமைய பாடசாலையில் வழிகாட்டல் ஆலோசனை அலகுகள் ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் தற்போது தொழில் வழிகாட்டல் அலகு தனித்துவமாகி இயங்குவதற்கான தேவை உணரப்பட்டுள்ளது.

தற்போது 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வித்திட்டத்திற்காக வெளியிடப்பட்ட 37/2017 ஆம் சுற்று நிருபத்தின் படி உயர்தர பாடநெறிகளின் கீழ் தொழில் வழிகாட்டலை ஒரு பாடமாக கற்பிக்கப்படுகின்றது. இருப்பினும் பாடசாலைக்குச் சமூகமளிக்கும் அனைத்து மாணவர்களையும் ஒரு சந்தர்ப்பத்தில் தமக்குப் பொருத்தமான தொழிலை தேடிக்கொள்ள உதவியளிப்பது அவசியமாகின்றது. இத்தகைய தொழில் வழிகாட்டல் அலகு தொடர்பாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகம் என்பன விழிப்பூட்டப்பட வேண்டும். இதன் மூலமே தொழில் வழிகாட்டலின் முக்கியத்துவத்தை அனைவரும் உணரச்செய்ய முடியும்.

இன்று மாணவர்கள் பாடசாலை செல்வதற்கான அமையச் செலவு உயர்வடைகின்றது. அதனால் பல மாணவர்கள் இடைவிலகி, பருவகால தொழில்களையோ அல்லது ஏதாவதொரு தொழிலை செய்வதற்கு முனைகின்றனர். இந்தவகையிலே தொழில் வழிகாட்டல் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கு மிகவும் கவனிக்கப்படக் கூடிய விடயம் என்னவென்றால் பாடசாலைகளின் சித்தி அடைகின்ற மற்றும் சித்தி அடையத் தவறுகின்ற இருவருக்குமே தொழில் வழிகாட்டல் முக்கியம் பெறுகின்றது. இந்தவகையில் மாணவர்களுக்கு சிறப்பாக வழிகாட்டவேண்டியது ஒரு ஆசிரியரின் கடமையாகும். தொழில் தெரிவு என்பது ஒருவரின் வாழ்க்கையில் முக்கிய அம்சமாக விளங்குகின்றது. அதனால் அத்தகைய தொழில் வாய்ப்புக்களைப் பற்றி மாணவர்கள் ஆராய்வது முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. நாளைய தொழில் உலகிற்கு அனைவரையும் வழிகாட்ட வேண்டியதும் ஆசிரியர்களினதும் பாடசாலைகளினதும் கடமையாகின்றது.

**பாடசாலை தொழில் வழிகாட்டல் அலகின் முக்கியத்துவம்.**

இலங்கையின் பாடசாலை அனைத்திலும் தொழில் வழிகாட்டல் இருக்க வேண்டியது அவசியமாகும். தொழில் பற்றிய அடிப்படை அறிவினை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. மாணவர்களுக்கு தொழிற்சந்தை பற்றிய அறிமுகத்தை சிறுபராயத்தில் இருந்தே வழங்கவேண்டியுள்ளது. தொழிற்சந்தைகளில் எவ்வாறான வகைகள் உண்டு, எவற்றை வேலையுலகிற்காக எதிர்பார்க்கின்றார்கள் போன்ற பல்வேறு கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டியுள்ளது. இந்தவகையிலேயே பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் அவசியம் பெறுகின்றது.

பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் அலகின் முக்கியத்துவம்.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் தொழில் மேம்பாட்டு வேலைத்திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

மாணவர்களின் திறன்களை இணங்கண்டு முறையான வழிகாட்டல்.

தொழில் உலகின் தன்மையை மாணவர்களுக்கு வெளிப்படுத்தி சிரமமின்றி தொழில் உலகிற்குள் நுழைவதற்கு வழிகாட்டல்.

கல்வி மற்றும் தொழிலுக்கு இடையே உள்ள தொடர்பினை மாணவர்களுக்கு புரிய வைத்தல்.

தொழில் தகவல்களை சேகரித்து வழங்குதல்.

திறன், விருப்பு, முனைதல் ஆகியவற்றை இனம் கண்டு மாணவர்களின் பாடத்துறைகளைத் தெரிவு செய்ய வழிகாட்டல்.

சுயவிருப்பத்திற்கு அமைவாக தொழில் தகவல்களைச் சேகரித்து கொள்பவருக்கான தூண்டுதல்களை வழங்குதல்.

வாழ்க்கை மற்றும் சமூகப் பொறுப்பினை மாணவர்களுக்கு உணர்த்துதல்.

தொழில் வழிகாட்டல் தொடர்பாக ஆசிரியர்களின் கடமைகளும் பொறுப்புக்களும்.

தொழில் வழிகாட்டல் ஒன்றை பாடசாலையினுள் ஆரம்பித்து நடத்திச் செல்லுதல்.

மாணவர்களின் ஆற்றல்களையும் பலங்களையும் இனங்கண்டு தொழில் உலகு பற்றி வழிகாட்டல்களை வழங்கல்.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் பாடசாலை தொழில் வழிகாட்டல் தொடர்பான வேலைத்திட்டத்தை மேற்கொள்ளல்.

கல்வி மற்றும் தொழில் தகவல்களை சேகரித்தல், இற்றைப்படுத்தல், வகைப்படுத்தல், பகிர்தல் மற்றும் காட்சிப்படுத்தல்களைச் செய்தல்.

பாடசாலையில் மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் சிறந்த ஆளிடைத்தொடர்பை கட்டியெழுப்புதல்.

மாணவர்களுக்கு பின்னூட்டுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் ஆய்வு என்பவற்றில் ஈடுபட்டு தமது தொழிலை இற்றைப்படுத்துதல் போன்றனவாகும்.

மாணவர்களில் முன்னேற்றத்தினை கொண்டு வர வேண்டுமெனின் இலங்கையின் தொழிற்சந்தை பற்றிய பூரண அறிவு தேவைப்படுகின்றது. இலங்கையின் தொழிற்சந்தையை பொறுத்தவரை தொழிலாளர்களை 04 வகையாகப் பிரித்துள்ளனர்.

1. பயிற்சி பெறாதவர்கள் (Un Skilled)
2. முழுமை பெறாத பயிற்சி (Semi Skilled)
3. பயிற்சி பெற்றவர்கள். (Skilled)
4. நிபுணத்துவம் பெற்றவர்கள் (Professional)

இதன் அடிப்படையிலேயே தொழிலாளர்களை தொழிற்சந்தைக்கு உள்வாங்குகின்றனர். இதனைவிட தொழில்களை 02 வகையாக வகைப்படுத்தலாம்.

1. உள்நாட்டு தொழில்கள் - Local Jobs
2. வெளிநாட்டு தொழில்கள் - Foreign Jobs

இந்த வகையிலேயே மாணவர்களை நாம் வழிகாட்ட வேண்டும் உள்நாட்டுத் தொழில்களை பொறுத்தவரை அரச தொழில்கள், முழுமையற்ற அரச தொழில்கள் (Semi Government Jobs) தனியார் தொழில்கள், சுயதொழில்கள் அல்லது முயற்சியாண்மைகள் என தொழில்களை பிரித்து நோக்கலாம். இவ்வாறு பிரித்து விளக்கமாக மாணவர்களுக்கு தெரியப்படுத்தல் சிறப்பானதாகும்.

வெளிநாடுகளை பொறுத்தவரை திறனுள்ள, நிபுணத்துவம் வாய்ந்த தொழிலாளர்களையே விரும்புகின்றார்கள். எனவே பொருத்தமான திறன், மனப்பாங்கு, பெறுமானங்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். வேலைவாய்ப்பு பற்றிய தகவல்களை அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் வேறு முறைகள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும், தொழிற்சந்தையில் திறனுள்ள மற்றும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களையே தேடுவதால் மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி தொடர்பாக வழிப்படுத்தல் வேண்டும். எந்தத் தொழிற்பயிற்சிகளை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பதனையும் இதன்மூலம் எவ்வாறு தொழில் வாழ்க்கையைக் கொண்டு செல்வது பற்றியும் பூரணமான அறிவை மேம்படுத்துவதுடன் மாணவர்களின் மென்திறன்கள் மற்றும் வன்திறன்களை வளர்க்கவேண்டும். இதன் மூலம் தொழில் உலகில் பிரவேசிப்பது சுலபமாகும்.

- **மென்திறன்களாக,**
  1. மொழித்திறன்
  2. தொடர்பாடல் திறன்
  3. வலையத்தளங்களைக் கையாளும் திறன்
  4. குழுவேலைத் திறன்
  5. சுயபெறுமதி திறன்
  6. துடிப்பான செவிமடுத்தல் திறன்
  7. சிறந்த தீர்மானத்தை எடுக்கும் திறன்
  8. நேர முகாமைத்துவத் திறன்
- **வன்திறன்களாக,**
  1. கணணியை இயக்குதல்
  2. கணணியைப் பயன்படுத்தல்
  3. வாகனங்கள் / இயந்திரங்களை இயக்குதல்
  4. அடிப்படைத் தொழில்நுட்ப அறிவுகள்
  5. பதிவுகளை மேற்கொள்ளல்
  6. கைத்தொழில் திறன் போன்றவற்றைக் கூறலாம்.

2016 ஆம் ஆண்டின் இலங்கையின் செயற்பாட்டிலிருந்த சம்பளச் சபைகளின் பட்டியலில் 44 தொழில்கள் காணப்படுகின்றன. இவை பற்றிய அறிவினையும் தொழில் அலகு ஊடாக மாணவர்களுக்கு வழங்குவது அவசியம். பூகோளமயமாக்கலின் விளைவால் ஏற்பட்ட சர்வதேசமயமாக்கல் மூலம் நாளாந்தம் பல்வேறு தொழில்கள் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை பற்றிய அறிவையும் மாணவர்களுக்கு வழங்கவேண்டும் சில வேளைகளில் தொழிற்சாலைகளில் காணப்படும் தொழில்வாய்ப்புக்கள் மிக விரைவாக மாற்றமடைந்து போகலாம். சில தொழில்கள் மறைந்து போகின்றன. இவை போன்ற தகவல்களையும் மாணவர்களுக்கு வழங்கல் அவசியம்.

ஒரு மாணவனுக்குச் சட்டத்தரணியாக வரவேண்டும் என்பது தான் இலட்சியம். அவன் சிறப்பாக உயர்தரம் கற்று 03 பாடங்களிலும் A சித்தி பெற்றுவிட்டான். ஆனால் இப்போதுதான் அவனால் அவனது இலட்சியத்தை அடைய முடியாது என்பது தெரியவருகின்றது. காரணம் அவன் சாதாரண தர பரீட்சையில் ஆங்கிலத்தில் S தர சித்தியே பெற்றிருந்தான். எனவே தான் மாணவர் பற்றிய சரியான விபரங்களுடன் மாணவர்களுக்கு வேண்டிய அத்தகைய தகைமைகளையும் பெற வழிகாட்ட வேண்டும். சட்டத்தரணியாக வருவது தான் அவனது இலட்சியம் என்றால் உயர்தரம் கற்கும் இடையில் அவனை வழிப்படுத்தி சாதாரண தர பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமை சித்தி பெற வழிகாட்டமுடியும். இதனை விட வேலை வாய்ப்பு விண்ணப்பங்களை தயாரித்தல், சுயவிபரங்களை தயாரித்தல் போன்ற பல்வேறு வழிகளில் வழிகாட்டல்களை வழங்கி, மாணவர்கள் எதிர்காலத்தில் சிறப்பாக தொழில் உலகில் பிரவேசிக்க வைக்க முடியும். எனவே தான் தொழில் வழிகாட்டலை தற்போதைய காலத்தில் பரவலாக்குவது தேவையாகவுள்ளது. அந்த வகையில் தற்போது பாடசாலைகளில் பரவலாக்கப்படுகின்றது. தொழில் வழிகாட்டலற்ற கல்வியானது முழுமையடையாது. அந்த வகையில் தொழில் வாழ்க்கைக்குத் தடம் பதிக்க மாணவர்களுக்கு உதவுவது தொழில் வழிகாட்டல் அலகின் குறிக்கோளாகக் காணப்படுகின்றது. ■

# பன்முக ஆற்றல் கொண்ட பவள விழா நாயகர் யேசுராசாவின் அங்குமிங்குமாய்... தொகுப்புக் குறித்த அறிமுகப் பார்வை


**புலோலியூர் வேல்நந்தன்**

ஈழத்து நவீன தமிழ் இலக்கியம் ஆற்றல் வாய்ந்த பல தனிமனித ஆளுமைகளால் செழுமை பெற்று வந்துள்ளது. அதிலும் குறிப்பாக படைப்பிலக்கியம், விமர்சனம் சார்ந்தும் பலரது பங்களிப்புக்கள் முக்கியமானவை. அந்த வகையில் பலர் வாழ்ந்து மறைந்து விட்ட போதும் இன்னும் சிலர் வாழும் வரலாறுகளாக எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பது அவர் வாழும் காலத்தில் நாமும் படைப்பிலக்கியத் துறையில் இயங்கிக் கொண்டிருப்பது பெருமை தரக்கூடிய விடயங்களாக அமைகின்றன. அந்த வகையில் மிக அண்மையில் பவள விழா கண்டு எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் பன்முக ஆளுமை கொண்ட ஒரு படைப்பாளியாக, விமர்சகராக விளங்குபவர் அ.யேசுராசா.

1960 களில் ஈழத்துப் படைப்பிலக்கியத் துறையுள் நுழைந்த அவர் 1946 டிசம்பர் 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் குருநகரில் பிறந்தவர். சிறுகதையாளர், கவிஞர், இதழாசிரியர், விமர்சகர், பத்தி எழுத்தாளர், சினிமா விமர்சகர், பதிப்பாளர் எனப் பன்முகங்களுக்குச் சொந்தக்காரராக அவர் விளங்கினாலும் எப்போதும் தன்னை ஒரு வாசகர் என்று சொல்லிக் கொள்வதிலேயே பெருமைப்பட்டுக் கொள்பவர். இவரோடு உரையாடுவது ஒரு வரலாற்றோடு உரையாடுவது போன்ற உணர்வைத் தரவல்லது. அன்றிலிருந்து இன்றுவரை தான் வரித்துக் கொண்ட இலக்கியக் கொள்கையின் தடம்மாறாப் பயணியாக விளங்குகிறார். இவரது விமர்சனங்கள் நெற்றிக்கண் விமர்சனங்கள், எதற்காகவும் யாருக்காகவும் தன் விமர்சனத்தில் சமரசம் செய்து கொள்ளாதவர் இவர். இதனால்தான் இவருக்கு இலக்கிய உலகில் கருத்து முரணானவர்களும் உள்ளனர் என்று கூறலாம்.

ஊடகங்களிலும் படைப்புகளிலும் வருகின்ற தமிழ்ப் பிழைகளையும் தமிழ்க் கொலைகளையும் துணிந்து கண்டிக்கும் இயல்பு இவருடையது. இவரது கடந்தகாலப் படைப்பிலக்கியப் பங்களிப்புக்களாக தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும் (சிறுகதைத் தொகுப்பு 1974 மார்கழி) அறியப்படாதவர் நினைவாக கவிதை (1984), காலம் எழுதிய வரிகள் (கவிதை), தூவானம் (பத்தி), பனிமழை (மொழிபெயர்ப்பு கவிதைகள்), பதிவுகள் (பத்தி), குறிப்பேட்டில் இருந்து (பத்தி), திரையும் அரங்கும் கலைவெளியில் ஒரு பயணம் (சினிமாக் கட்டுரைகள்) நிழல், அங்குமிங்குமாய் (கட்டுரைத் தொகுப்பு) ஆகிய நூல்களைக் குறிப்பிடலாம். இதே வேளையில் பதினொரு ஈழத்துக் கவிஞர்கள், மரணத்துள் வாழ்வோம், தேடலும் படைப்புலகமும் ஆகிய நூல்களின் தொகுப்பு முயற்சிகளிலும் இவரது பங்களிப்பு முக்கியமானதாகும். இவற்றுக்கு அப்பால் 1975 இல் தொடக்கப்பட்ட அலை சஞ்சிகை ஆசிரியர் குழுவில் ஒருவராக, பின்னர் அதன் நிர்வாக ஆசிரியராக இருந்து 35 இதழ்களை வெளியிட்ட சிறப்பும் கவிதை, தெரிதல் என்ற பெயர்களில் வெளிவந்த இளையோருக்கான இதழ்களின் ஆசிரியராக விளங்கிய சிறப்பும் இவருக்குரியது. இத்தகைய பல சிறப்புகளைக் கொண்ட மூத்த பன்முக இலக்கிய ஆளுமை அ.யேசுராசாவின் “அங்குமிங்குமாய்..” தொகுப்பு நூலை அவரது பவள விழாவையொட்டி அறிமுகம் செய்வதில் தீம்புனலின் புதுப்புனல் அக மகிழ்கிறது. அண்மையில் ஜீவநதி இதழ் கூட அவரது பவளவிழாச் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டதும் ஆர்வம் குழுமம் காணொளி வடிவில் அவரது படைப்புகள் குறித்த பார்வைகளைத் தந்தமையும் குறிப்பிடத்தக்கனவாகும்.

அங்குமிங்குமாய் தொகுப்பு அழகிய அட்டைப்பட வடிவமைப்புடன் இதுவரை வெளிவந்த யேசுராசாவின் நூல்களிலிருந்து, சஞ்சிகைக் கட்டுரைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 75 கட்டுரைகளின் பெருந்தொகுப்பாக 402 பக்கங்களில் அலை வெளியீடாக ஜீவநதி பதிப்பகத்தின் அச்சுப் பதிப்பில் வெளிவந்துள்ளது. இதன் வெளியீடு மிக அண்மையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது. முற்போக்கு அணியினரும் ஆத்மார்த்த வாதிகளும் ஓரங்கட்ட முயன்ற போது தனது படைப்பாற்றலாலும் திமிர்ந்த ஞானச் செருக்கினாலும் அதனை எதிர் கொண்டு வரலாற்றில் வாழும் எஸ்.பொ க்கு இந்நூல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. என்னுரையில் நூலாசிரியர் அவர்கள் தனது பவளவிழாவை ஒட்டி இந்நூலை வெளியிட வேண்டும் என்பதில் தனக்கு ஆர்வமூட்டிய ஜீவநதி ஆசிரியர் பரணீதரன் மற்றும் றொசான் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதுடன் யாரையும் தாக்க வேண்டும் என்றோ இழிவுபடுத்த வேண்டும் என்றோ ஒருபோதும் நான் எழுதியதில்லை. ஆனால் பலர் கவனிக்கத் தவறியதை அல்லது கவனித்தும் சொல்லத் தயங்கியதை நான் வெளிப்படுத்தியுள்ளேன். இத்தகைய எனது வெளிப்படைக் கருத்துக்களால் பலர் என் மீது கசப்படைந்துள்ளனர் சிலர் வன்மமுங் கொண்டுள்ளனர். பொறுப்பான எதிர் வினைகளைத்தான் முக்கியமாக பரீசலிக்க வேண்டும் என தன்னுடைய விமர்சன போக்கு குறித்தும் தன் மீதான தவறான எதிர் வினைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தனது புனைபெயர்கள் படைப்புக்கள் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றையும் பட்டியற்படுத்தித் தந்துள்ளார்.




## புதுப்புனல் - 24

அங்குமிங்குமாய்.. என்ற இந்தப் பெருந் தொகுப்பை முழுமையாக ஆய்வுக்குட்படுத்துவது இப் பத்தியின் நோக்கமல்ல. அது குறித்த ஒரு அறிமுகத்தை படைப்பாளியின் அறிமுகம் வழி வழங்குவதே நோக்கம் என்பதால் இத் தொகுப்பில் அங்குமிங்குமாய் உள்ள சில விடயங்களைப் பகிர்ந்து இக் கட்டுரையை நிறைவு செய்யலாம் என எண்ணுகிறேன். சென் ஜோன்ஸ் கல்லூரி நூலக தினம் பற்றிய கட்டுரையுடன் இத் தொகுப்பு ஆரம்பிக்கிறது. இது 2014 ஆம் ஆண்டு எழுதப்பட்ட இக் கட்டுரையில் வாசிப்பு, நூல்களைப் பேணுதல் என்பவற்றின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் யேசுராசாவின் வீட்டில் அவர் பேணி வருகின்ற வீட்டு நூலகம் கூட பல அரிய நூல்களின் சேகரமாய் பல ஆய்வு மாணவர்கள் தேடலாளர்களுக்கும் உதவும் பெட்டகமாய் விளங்கி வருவதும் சிறப்புக்குரியதாகும். “புத்தகத் திருவிழாவும் தமிழகப் பயணமும்” என்ற கட்டுரையில் காலச்சுவடு வெளியீடாக தமிழக புத்தகத் திருவிழாவில் வெளியிடப்பட்ட தனது “திரையும் அரங்கும் காலவெளியில் ஒரு பயணம்” என்ற நூல் வெளியீட்டு அனுபவங்களைப் பேசியுள்ளார். மொழிபெயர்ப்பும் கவிதையும் என்ற கட்டுரை வழி மொழிபெயர்ப்புக் கவிதைகள் குறித்த பல்வேறு அறிஞர்களது சிந்தனைகளைக் குறிப்பிட்டு பல மொழிபெயர்ப்புக் கவிதைகளை ஆதாரமாகக் கொண்டு தமிழகத்திலும், ஈழத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ள மொழி பெயர்ப்புக் கவிதைகளைப் பட்டியற்படுத்தியுள்ளதுடன் தனது பனிமழை மொழிபெயர்ப்புக் கவிதை அனுபவங்களையும் பகிர்ந்துள்ளார். “நானும் எனது படைப்புலகமும்..” என்ற கட்டுரை மறுகா இதழில் வெளிவந்தது. அதில் தனது படைப்பிலக்கிய பிரவேசம், அக் காலச் சூழல், தன்னை பாதித்த விடயங்கள், தனக்குக் களம் தந்த விடயங்கள் போன்ற பல விடயங்களைப் பகிர்ந்துள்ளார். எம். எல். எம். மன்சூரின் சிறுகதைகள் என்ற கட்டுரை முக்கியமானது. வெளி உலகில் அறியப்படாது போன தனது கலை இலக்கிய நண்பர் மன்சூரின் சிறந்த சிறுகதைகள் பற்றிய அறிமுகமாக இக்கட்டுரை அமைகிறது. அங்குமிங்குமாய் இணையும் கதைகள் என்ற கட்டுரை ஒரே சாயல் கொண்ட கதைகளை இரு வேறுபட்ட படைப்பாளிகள் படைக்கும் தன்மையை பல்வேறுபட்ட கதை உதாரணங்கள் வழி விளங்குவதாக அமைகிறது. ஒரு தேர்ந்த, தேடலும், வாசிப்பும் மிக்க வாசகரால்தான் இத்தகைய கட்டுரைகளை எழுதமுடியும் என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும். இவற்றை விட இத் தொகுப்பில் பல்வேறுபட்ட படைப்பாளிகள் பற்றிய பல்வேறுபட்ட படைப்பிலக்கியங்கள் பற்றிய அறிமுகக் குறிப்புக்கள், சிங்கள படைப்பிலக்கியங்கள் பற்றிய, அறிமுகங்கள், பயணிகள் குறிப்புக்கள் உள் வெளி என்ற தலைப்புகளில் அமையும் தொடர் கட்டுரைகள் விருது குழறுபடிகள் இருட்டடிப்புக்கள் பற்றிய விமர்சனம் எனப் பல்வேறுபட்ட கட்டுரைகள் வேறுபட்ட இலக்கிய வாசிப்பு அனுபவத்தை எமக்குத் தருவதுடன் மூத்த எழுத்தாளர் யேசுராசாவுடைய படைப்பிலக்கிய, விமர்சன உலகை புரிந்த கொள்ளவும் உதவுகின்றன. அண்மையில் மறைந்த கி.ராஜ நாராயணனுக்கான அஞ்சலிக் குறிப்புடன் இந்நூல் நிறைவு பெறுகின்றது.

பவளவிழா கண்டு வாழும் கொள்கை மாறா மூத்த படைப்பாளியான இவரது காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்ற பெருமையுடன் இவரது இலக்கிய பயணம் இன்னும் பல்லாண்டு சிறக்க தீம்புனலின் புதுப்புனல் வாழ்த்தி மகிழ்கிறது.

■



# கல்யாணக்கனவு

கனவு 04

யாழ் சத்யா

> “இந்த கரிய இரவைக் கண்டு நாமொன்றும் கலங்கித்தவித்து விடுவதில்லையே. இரவுக்குப் பின் விடியப் போகும் பகல் பொழுதை நம்பிக்கையோடு எதிர் நோக்கித் தானே ராத்திரியில் தூங்கச் செல்கிறோம். வாழ்க்கையில் பிரச்சினைகளும் இந்த இரவைப் போலத்தான். நாம்தான் விடியும் என்ற நம்பிக்கையின்றி, விடியலுக்காகப் பொறுமையாய்க் காத்திராது இரவுக்குள்ளேயே தட்டுத் தடுமாறித் துழாவிக் கொண்டிருப்பது.”

கைபேசியில் அலாரம் அடித்து நேரம் மாலை ஐந்து ஐம்பது என்று அறிவித்தது. எவ்வளவு வேலையிருந்தாலும் வைஷாலி ஆறு மணிக்கு மேல் அலுவலகத்தில் இருக்க மாட்டாள். வைஷாலி வீட்டுக்குப் புறப்படுவதை வைத்தே மற்றவர்கள் மாலை ஆறு மணி என்று புரிந்து கொள்ளும் அளவுக்கு அவள் இந்த விடயத்தில் கவனமாகவும் மிகக் கச்சிதமாகவும் இருந்தாள்.

அவள் என்னதான் எல்லோருடனும் நன்றாகப் பழகினாலும் அவளிடம் யாராலும் ஒரு கட்டத்திற்கு மேல் நெருங்க முடியாது. முகத்துக்கு நேரே பேசி விடுவதும், பிடிக்காத விடயத்தை நேராக மறுத்து விடுவதும் அவளது அடிப்படைக் குணம். அதனால்தான் என்னவோ எல்லோரும் அவளோடு அளவாகத்தான் பழகினார்கள். தனியாக இந்த ஊருக்கு வாழ வந்த புதிதிலேயே வைஷாலி தனக்கென சில கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டாள். அவளைச் சுற்றி அவளே எழுப்பிக் கொண்ட வேலியொன்று அவளை இன்றுவரை பாதுகாப்பாகவே வைத்திருந்தது.

அவள் அதிர்ஷ்டம், அந்த ஊரும் மிகவும் அருமையான இடம் என்றுதான் சொல்ல வேண்டும். இலங்கையில் தேயிலை விளைச்சலுக்குப் பேர் போன இடம் அது. தேயிலைத் தோட்டங்களோடு அழகுக்கு குறைச்சலாகவா இருக்கப் போகிறது? ஏற்ற இறக்கங்களோடு வளைந்து நெளிந்து செல்லும் மலைப்பாதையும், அதிலே முதுகில் கூடையோடு வெற்றிலை, புகையிலை அதக்கிய வாயோடு பேசிச் சிரித்துக் கொண்டு செல்லும் கொழுந்து கொய்யும் பெண்களும் அத்தனை அழகு. பச்சைப் பசேலென்று கண் முன்னே பரந்து விரிந்து கிடக்கும் அழகைக் கண்டதும் மனக் கவலைகள் எல்லாம் பறந்தோடிப் போய் விடும் என்பது மிகையல்ல.

வைஷாலி தனது சொந்தப் பிரச்சினைகளிலிருந்து இவ்வளவு தூரம் மீண்டெழுந்ததில் தலவாக்கலைப் பிரதேசத்தின் அழகும் சுத்தமும் கூடப் பிரதான பங்கு வகித்தது என்றுதான் சொல்ல வேண்டும். வங்கியிலிருந்து இருபது நிமிடங்கள் நடந்தால் வைஷாலி வசிக்கும் வீடு. பேருந்து, முச்சக்கர வண்டி வசதி இருந்தாலும் இவள் ஏதும் அவசரமான வேலைகள் இல்லை என்றால் நடந்துதான் வீட்டுக்குச் செல்வாள்.

மாலை மயங்கி மலைகளின் பின்னே கதிரவன் ஓடி ஒளியும் முயற்சியில் ஈடுபட்டிருக்க, காலையில் பச்சைக் கம்பளம் விரித்தது போன்றிருந்த மலைப்பகுதிகள் எல்லாம் இப்போது கரும் போர்வை போர்த்த ஆரம்பிக்கும். இவளுக்கு எப்போதும் இரவு சூழும் காட்சியை ரசிப்பதில் ஒரு அலாதிப் பிரியம்.

இந்தக் கரிய இரவைக் கண்டு நாமொன்றும் கலங்கித் தவித்து விடுவதில்லையே. இரவுக்குப் பின் விடியப் போகும் பகல் பொழுதை நம்பிக்கையோடு எதிர் நோக்கித்தானே ராத்திரியில் தூங்கச் செல்கிறோம். வாழ்க்கையில் பிரச்சினைகளும் இந்த இரவைப் போலத்தான். நாம்தான் விடியும் என்ற நம்பிக்கையின்றி, விடியலுக்காகப் பொறுமையாய்க் காத்திராது இரவுக்குள்ளேயே தட்டுத் தடுமாறித் துழாவிக் கொண்டிருப்பது.

அன்றும் வழக்கம் போல ஆறு மணிக்கே வங்கியை விட்டுப் புறப்பட்டு இயற்கையை ரசித்தவாறே வீட்டையடைந்தாள் வைஷாலி. அன்றைய தினத்தின் அதிக வேலை உடலை அசதியாக்க ஒரு வெந்நீர்க் குளியலைப் போட்டுவிட்டு சமையலறைக்குள் சென்று புட்டவிக்க ஆரம்பித்தாள்.

இவள் இருப்பது இரண்டு படுக்கையறைகளோடு கூடிய சிறு தனி வீடொன்று. இவளும் அதுல்யாவும்தான் ஒன்றாகத் தங்கியிருந்தனர். அதுல்யா இன்னமும் வேலை முடித்து வரவில்லை. வைத்தியர் என்றால் சும்மாவா... நேரம் கெட்ட நேரமெல்லாம் வேலைக்கு ஓட வேண்டியிருக்கும். அவள் வீட்டுக்கு வரும் நேரம் கண்டு கொள்ள வேண்டியதுதான். வைஷாலி எப்போதும் அதுல்யாவுக்கும் சேர்த்தேதான் இரவு உணவு சமைப்பாள். அவள் வராவிட்டால் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விட்டு அடுத்த நாள் பயன்படுத்திக் கொள்வாள். இன்றும் புட்டும் அவித்து கத்தரிக்காய் பிரட்டலும் வைத்தவள், ஒரு முட்டையையும் பொரித்து வைத்து விட்டு வரவேற்பறைக்கு வந்து மடிக்கணணியை உயிர்ப்பித்தாள். வைஷாலி சின்ன வயதிலிருந்தே கதைப் புத்தகப் பிரியை. பாடப் புத்தகங்கள் படிக்கிறாளோ இல்லையோ, கதைப்புத்தகம் வாசிக்காமல் தூங்கப் போகமாட்டாள். இப்போது பல இணையத் தளங்களில் பல எழுத்தாளர்கள் எழுதுவது இவளுக்குப் பெரும் வரப்பிர சாதமாகப் போய் விட்டது.

வேலை முடித்து வந்து கணணியை உயிர்ப்பித்தாள் என்றால் அனைத்து இணையத்தளங்களுக்கும் ஒரு சுற்றுச் சென்று யார் யார் அன்று பதிவிட்டிருந்தார்களோ அவர்கள் பதிவுகள் முழுவதும் வாசித்துத் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வாள்.

ஷாலினி என்ற பெயரில்தான் அவள் எல்லோருக்கும் கமெண்ட் செய்வது. ஒரு முகநூல் கணக்கும் ஷாலினி என்ற பெயரில் வைத்திருக்கிறாள். எங்கே சொந்தப் பெயரில் இவள் முகப்புத்தகத்தில் கமெண்ட்ஸ் போட, அதைப் பார்க்கும் இவள் சொந்த பந்தங்கள் இவளைக் கழுவி ஊற்ற, ஏன் இந்த தேவையற்ற தலைவலியென்றுதான் அவள் புனைபெயரில் வாசகியாக இருப்பது. இந்த முகப்புத்த கத்தில் நட்பு வட்டத்தில் இருப்பது எழுத்தாளர்களும் வாசக நண்பர்களும் மட்டுமே. முகமறியாது விட்டாலும் அன்பாய்ப் பேசும் கூட்டமிது.

இன்றைய இணைய உலகில் அனைத்து செய்திகளும் இந்த முகப் புத்தகத்தில்தானே உடனுக்குடன் தெரிய வருகிறது. அவ்வாறிருக்க எழுத்துலகம் மட்டும் இதற்கென்ன விதிவிலக்கா? முகப்புத்தகத்திற்குச் சென்றால் தெரிந்து விடும். அன்றைக்கு கதை பதிவிட்டிருப்பவர் யார் எனப் பார்ப்பாள் என்று. அங்கே கதை விவாதங்களுக்கென்று பல்வேறு குழுக்கள் வேறு. அங்கே அவ்வப்போது நடக்கும் சில சலசலப்புகள் கூட சுவாரஸ்யமானவையே.

அமேசான் கின்டிலிலும் தனக்கொரு கணக்கைத் தொடங்கியவளுக்கு வேலை முடித்து வீடு வந்தால் கதைகள்தான் உலகம். இன்னார் இன்னார் என்று வேற்றுமை பாராது அனைத்து எழுத்தாளர்களது கதைகளையும் வாசித்து விடுவாள்.

அதுல்யா கூட இவளைப் பார்த்து வியப்பாய்க் கேட்பாள், “எப்படி வைஷு- எல்லாக் கதையையும் ஞாபகம் வைத்திருக்கிறாய்? ஒரு நாளைக்கு ஏழெட்டு கதைக்குக் குறையாமல் வேறு வேறு கதைகளிலிருந்து ஒவ்வொரு அத்தியாயம் வாசிக்கிறாய். அது குழப்பமாக இருக்காதா? நானென்றால் இந்த ஹீரோயின் அந்த ஹீரோ என்று குழப்பியடித்து விடுவேன்...”

“ஹா... ஹா... வாசிக்கும் போது அந்தக் குழப்பமெல்லாம் வராது அதுல்யா...” இவளும் புன்னகையோடே பதிலளிப்பாள். இன்றும் முகப்புத்தகத்திற்குச் சென்றவள், ஒரு கதை பற்றி அங்கு காரசாரமாக நடந்து கொண்டிருந்த விவாதத்தில் தன்னையும் இணைத்துக் கொள்ள நேரம் போவது தெரியாமல் உட்கார்ந்திருந்தாள். கைபேசி சிணுங்கவும்தான் சுய நிலைக்கு வந்தவள் எடுத்துப் பார்த்தாள்.

அவசரகேஸ் ஒன்று வந்து விட்டதால் இரவு வைத்தியசாலையிலேயே தங்குவதாக அதுல்யாதான் வாட்ஸ் அப்பில் அனுப்பியிருந்தாள். இவளும் சரியென்று பதிலளித்து விட்டு நேரத்தைப் பார்க்க இரவு ஒன்பது மணி காட்டியது சுவர்க்கடிகாரம். மடிக்கணணியை அணைத்து விட்டு சமையலறைக்குச் சென்றாள்.

புட்டையும் கறியையும் மைக்ரோவேவ் அவனில் சூடாக்கிச் சாப்பிட்டவள் பாத்திரங்களைக் கழுவி, சமையலறையைச் சுத்தம் செய்து விட்டுத் தனது படுக்கையில் வீழ்ந்தாள். உடல் அலுத்திருந்தும் தூக்கம் வர மாட்டேன் என்றது.

கைபேசியை எடுத்து கின்டிலை திறந்தவள் அதிலே ஒரு கதையை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள். அவள் துரதிர்ஷ்டம், அந்தக் கதையோ ரொம்ப இழுவையாக இருந்தது. அதை வாசித்து தன்னைக் கொடுமைப்படுத்திக் கொள்ள விரும்பாதவள் கைப்பேசியியை அருகே வைத்து விட்டுக் கண்களை மூடித் தூங்க முயன்றாள்.

திடீரென மூடிய கண்களிடையே சஞ்சயன் வந்து நின்றான். ‘அட ஆளே மாறி விட்டானே... படிக்கும் போது எவ்வளவு ஒல்லியாக இருப்பான்... தாடியும் ஆளும்... அடையாளமே கண்டுபிடிக்க முடியலையே... நான் இவன் எங்கேயோ வெளி நாட்டில இருக்கிறான் என்று நினைக்க, ஐயா இங்கதான் இருக்கிறார் போல... அது சரி... எதுக்கு என்னை அடையாளம் தெரிந்தும் தெரியாத மாதிரி போனான்... நகை எடுக்க வரும் போது என்ன செய்யிறான் பாப்பம்...’

என்று எண்ணமிட்டுக் கொண்டே நித்ராதேவியின் வசமானாள்.

பேசிக் கொள்வார்களா இருவரும்?

**கனவு நனவாகுமா?**

# சித்தாந்தன் கவிதைகளில் நகரம்

த.அபிநாத்

ஈழத்தின் விஸ்தீரணமான கவிதைப் பரப்பில் போர்ச்சூழல் கனதியான தாக்கத்தினைச் செலுத்தியுள்ளது. யுத்த கால கட்டத்தில் மக்கள் எதிர் கொண்ட நெருக்கடிகள் மற்றும் அவலங்கள் நிறைந்த கவிதைகளாக சபாபதி உதயணன் எனும் இயற் பெயருடைய சித்தாந்தனின் கவிதைகள் அமைகின் றன. தனிமையில் துயரப்படும் எல்லோரையும் அல் லது துயரங்களால் தனிமைப்படும் எல்லோரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாய் அமையும் இவரின் கவிதைகள் வாசகர்களுக்கு தனித்துவமான அனுப வத்தைத் தரவல்லதாய் அமைகின்றன. சித்தாந்த னின் துரத்தும் நிழல்களின் யுகம் என்ற கவிதைத் தொகுப்பில் நகரத்தின் மீதான பார்வையானது பல வாறு மாறுபட்டமைகின்றது.

“துரத்தும் நிழல்களின் யுகம்”

என்ற தொகுப்பிலுள்ள “கடவுளர்களின் நகரங்க ளின் வாழுதல்” எனும் கவிதை இராணுவத்தினரால் பாதிக்கப்பட்ட மக்களை தத்ரூபமாக இனங்காட்டி நிற்கின்றது. கடவுளராகச் சுட்டப்படும் இராணு வத்தினர் மக்களுக்கு இழைக்கும் தீங்கினை வெளிப் படுத்தி இராணுவப் பிடிக்குள் வாழும் நகரம் மீதான பார்வை பிரசன்னமாகிறது.

“எல்லாப் பிரார்த்தனையும் கடவுளர்க்கானது இல்லை
எல்லாக் கடவுளர்களும் சனங்களுக் கானவையும் அல்ல
இருந்த போதும்
பிரார்த்தனைகளாய் நிறைகிறது நகரம்...”

போரினால் மக்கள் மீது அடக்கு முறையும் வன்முறையும் நிகழ்த்தப் பட்டு இருப்பதை “நாக்குகளில் ஏற்றப்பட்டிருக்கிறது தூண்டில்” என்ற கவிதை காட்டி நிற்கிறது.

“சிலுவையில் அறையப்பட்ட
கனவுகள் மீது
கொடிகள்
ஏற்றப்பட்டிருக்கின்றன
அவர்களின் சகோதரர்களை
அவர்கள் கொன்று புதைத்த போதும்
இந்த நகரத்தின் மனிதர்கள்
மௌனமாகவே
அழுதார்கள்”


மக்கள் போரினால் வஞ்சிக்கப்பட்டு அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு இருப்பதுடன் நகரத்தில் வாழும் இவர்கள்



துகிறது.

“வெளிவரமுடியாப் பாதைக ளில்
கனவுகள் குலைந்த விம்ம லின் குரலை
பெரும் மூச்சுக்களால்
எழுத வேண்டி இருக்கின்றது
நம் சந்திப்புக்கான
தெருக்கள் அடைத் துள்ளன
வீட்டின் கதவையும்
பூட்டி விட்டேன்
அதன் முன்னிருந்த குழந் தையின்
பாதணிகளைக் கூட
ஒளித்து வைத்து
விட்டேன்”

இத் திறம் இவர் கவிதை கள் நகரம் நரகமான




தம் சகோதரர்களின் அவல மரணத்திற்குக் கூட அலறி அழ முடியாமல் மௌனித்துப் போன தன் மையை உணர்த்துவதூடாக கவிஞரின் பார்வை யில் சுதந்திரமற்ற நகரத்தை நம்மாலும் காணமுடிகி றது. இக்கவிதையில் இறுதிபகுதியிலே

“குழந்தையின் தூண்டிக்கப்பட்ட கைவிரல்க ளாய்
விரிந்திருக்கும் நகரத்தில் வாழும்
சிலுவையில் அறையப்பட்ட மனிதர்களின்
நிர்வாணத்தின் மீது
கொடிகள் ஏற்றப்பட்டு இருக்கின்றன”

என அமையும் வரிகளானவை நகரவாசிகளின் வாழ்க்கை துண்டிக்கப்பட்டு இருப்பதையும் துயர மான அவர்கள் வாழ்வியல் இராணுவத்தின் கண் காணிப்போடு கழிகின்ற தன்மையினையும் எடுத் துரைக்கின்றன.

“மூடுண்ட நகரத்தில் வாழ்பவனின் நாட்குறிப்பு”

என்ற கவிதையானது முன்பு சொல்லப் பெற் றவை கொண்டிராத அவலச் சுவையைக் கொண் டிருக்கிறது. இக் கவிதை நகரங்களில் மக்கள் வீடு களில் முடங்கி இருந்தமையை வெளிப்படுத் தன்மையினை இயம்பி நிற்கிறன்றன. புதிய நகரத் திற்கு செல்பவனின் அவலத்தையும் அவன் அல்லலு றும் தன்மையினையும் துயர் பயணக் குறிப்புகள் 1-2 ஆகிய கவிதைகளில் வெளிப்படுத்துகிறார்.

“என்னைப் போலேவே
இன்னும் சில மனிதர்கள்
இங்கு அலைவுறலாம்
பஸ் இலக்கங்களை மறந்து போய்
அவர்களுக்குத் தெரிந்த
தொலைபேசி இலக்கங்களை தவறவிட்டு
அலையலாம்
இங்கு வாழப்பழகிவிட்ட
வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட
எல்லா மனிதர்களுக்கும்
எனது அனுதாபங்கள்
நண்பனே
எந்த இயல்பும் நிரந்திரமில்லை
இயல்பில்லாமலும் போய்விடும்”

மேற் கூறப்பட்ட விடயங்கள் ஊடாக துரத்தும் நிழல்களின் யுகம் என்ற சித்தாந்தனின் கவிதைத் தொகுப்பில் நகரம் மீதான பார்வையானது தனித்து வமாக இருப்பது புலனாகிறது. ■





புலோலியூர் வைத்திய கலாநிதி பஞ்ச கல்யாணி சிந்தனை செய் சிறுவர் கதை நூல்வெளியீட்டு விழா அவரது இல்லத்தில் சுகாதார நடைமுறைகளுக்கமைய அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. ஜீவநதி இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் கலாமணி பரணீதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மங்கள விளக்கினை நூராசிரியரின் பெற்றோர், வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன், ஆங்கில விரிவுரையாளர் எஸ். சுந்தரேசன், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி செல்லமலர் சுந்தரேசன் ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைத்தனர். தமிழ்த்தாய் வாழ்த்தினை தொடர்ந்து திருமதி. ஜேயகலா வரவேற்புரை நிகழ்த்தினார். வாழ்த்துரையை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பதில் பணிப்பாளர் வே. கமலநாதனும், வெளியீட்டுரையை எழுத்தாளர் பரா. ரதீஸ்சும் வழங்கினார்கள். முதல் பிரதியை செல்வி எஸ். புராதனி பெற்றுக் கொண்டார். நயப்புரைகளை எழுத்தாளர்களான அ.பௌநந்தி, புலோலியூர் வேல்.நந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தினார்கள். ஏற்புரை, நன்றி உரை களை நூலாசிரியர் வழங்கினார்.

# நம்பிக்கையூட்டும் ஈழச் சினிமாவின் நகர்வுகள்;
## “அண்மிய இரு திரைப்படங்களை முன்வைத்து”

வெற்றி துஷ்யந்தன்




போருக்குப் பின்னைய ஈழத்துக் கலை வெளியில் மிக முக்கியமானதாக உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்ற கலைவடிவம் ஈழத்துச் சினிமாவாகும். ஈழத்துச் சினிமாவிற்கென பல வரலாற்றுச் சிறப்புக்கள் நம்முன்னே இருந்து வந்திருக்கின்றன இன்னமும் இருக்கின்றன. போருக்குப் பின்னரான கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக நம் மண்ணின் ஒரு இளையோர் பட்டாளமே சினிமாவை முழுநேர தொழில்த் துறையாக்கி வருமான ரீதியின் பின்னடைவைச் சந்தித்தாலும் சினிமா மீதான தீராக் காதலோடு இயங்கிக் கொண்டிருக்கின்றது.

பன்னிரண்டு ஆண்டுகளாகப் பல குறும்படங்கள், முழு நீளத் திரைப்படங்கள், காணொளிப் பாடல்கள் என ஒவ்வொன்றினூடாகவும் பல இளைய படைப்பாளிகள் முகிழ்ந்து வந்திருக்கின்றனர். ஆயினும் ஈழச் சினிமா எதிர் நோக்கி வருகின்ற பிரதான பிரச்சினை வணிக மயப்படுத்துதல் ஆகும். ஈழச் சினிமாவை வர்த்தக ரீதியாக அடுத்த தளத்திற்கு எப்படிக் கொண்டு செல்வது என்பது எல்லோருக்கும் மிகப் பிரதான பிரச்சினையாகும். சந்தைப்படுத்தல், வர்த்தக மயமாக்கல் என்பதில் உள்ள பிரச்சினைகள் காரணமாக வருமானம் ஈட்டக்கூடிய தொழில்த் துறையாக ஈழச் சினிமாவைக் கொண்டு செல்லுதல் மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து வருகின்றது.

ஆயினும் அண்மிய நாட்களாக இரண்டு திரைப்படங்கள் ஈழச் சினிமாவைத் திரும்பிப் பார்க்க வைக்கின்ற அளவிற்கு மாறியிருக்கின்றது. அவற்றில் ஒன்று “புத்திகெட்ட மனிதரெல்லாம்” என்கின்ற திரைப்படம். இன்னொன்று மதிசுதாவின் “வெந்து தணிந்தது காடு”.

வணிக ரீதியாக எமது படைப்பை முன்னிறுத்த முடியும் என்கின்ற முனைப்போடு மிகத்தரமான விளம்பரப்படுத்தல்களோடும், திரைப்படம் குறித்த சரியான புரிதல்களோடும் மக்கள் மத்தியில் இரண்டு மூன்று வார கால கடின விளம்பரப்படுத்தலோடு கடந்த வாரம் மூன்று தினங்கள் யாழில் மூன்று திரையரங்குகளிலும் அரங்கு நிறைந்த காட்சிகளோடு வெளியாகி மிக நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது “புத்தி கெட்ட மனிதரெல்லாம்” திரைப்படம். மக்களின் நாடித்துடிப்பைப் பிடித்துப் பார்த்து அதற்கூடாக அவர்கள் சமூக வலைத்தளங்களின் உதவியோடு மேற்கொண்ட உத்திகள் தனிச்சிறப்பு மிக்கவை.

ஒட்டு மொத்தத் தமிழ் படைப்புச் சூழலும் இத் திரைப்படத்தை திரையரங்கில் சென்று பார்வையிட்டு இன்று கொண்டாடி வருகின்றமையை நாம் கண்டு வருகிறோம். வணிக ரீதியான மிகப்பெரிய பலாபலன் ஒன்று இத் திரைப்படத்திற்குக் கிடைத்திருக்குமென்பது அநேகர் கருத்து. வணிக ரீதியான எதிர்கால நமது ஈழச் சினிமா முயற்சிக்கு இவர்கள் கையாண்ட அத்தனை உத்திகளும் இன்னும் பிறருக்கும் வலுச் சேர்க்குமென்பது வெளிப்படை.

மற்றுமொரு படைப்பு இன்னும் வெளியானமையே தென்இந்திய திரைத்துறை வரை அவர்களின் எதிர்பார்ப்பை உண்டு பண்ணியுள்ள இயக்குநர் மதிசுதாவின் “வெந்து தணிந்தது காடு” திரைப்படம். ஒரு குழு முயற்சியிலான தயாரிப்பு பாணியைப் புதிதாய் நிறுவியிருக்கும் மதிசுதாவின் நம்பிக்கைக்குரிய புதிய அத்தியாயமாக இதனை பார்க்க முடியும். தனியொருத்தரை நம்பியிராது பலரை அவர்கள் விருப்பின் படி தயாரிப்பாளர்களாக்கி அவர் வகுத்த இந்த புதிய யுக்தியும் பேசப்பட வேண்டியதே.

கௌதம் வாசுதேவ் மேனனின் திரைப்படப் பெயரும் மதிசுதாவின் திரைப்பட பெயரும் ஒன்றான அந்தச் சம்பவம் மதிசுதாவின் கனதியையும் விட்டுக் கொடுக்கா அறச்சீற்றத்தையும் பலருக்கும் காட்டியிருந்தது. இற்றை வரை திரைப்படம் வெளியாகாமலேயே பதினாறுக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றிருக்கின்றது, உண்மையில் இந்தத் திரைப்படமும் வணிகரீதியாக ஈழ சினிமாவின் அடுத்த கட்ட பாய்ச்சலுக்கு வலுச் சேர்க்கின்றதாக அமையும் என்பது பலர் நம்பிக்கை.

சமகால ஈழ சினிமாவின் போக்கில் பல பிரச்சினைகள் காணப்பட்டாலும் “புத்தி கெட்ட மனிதரெல்லாம்” திரைப்படம் அதன் வெளியீட்டில் கையாண்ட உத்திகளும் அதன் போக்கும் மக்கள் மத்தியில் எங்கட சினிமாவை மக்கள் கொண்டாட தயாராகி விட்டார்கள் என்ற நம்பிக்கையையும் இனி எல்லோரும் அப்படியான படைப்புக்களை தர வேண்டும் என்கின்ற எச்சரிக்கை மணியையும் அடித்திருக்கின்றது.

அது போலவே அடுத்த பெரும் எதிர்பார்ப்பில்




மதிசுதாவின் “வெந்து தணிந்தது காடு” திரைப்படமும் மக்கள் மத்தியில் மிகப்பெரிய எதிர் பார்ப்பை உருவாக்கியிருக்கின்றது.

எது எப்படியே சமகால பார்வையின் அடிப்படையில் ஈழ சினிமாவின் போக்கு இனி வர்த்தக ரீதியான போக்கில் மிகச் சிறப்பாகச் செல்லும் என்பதற்கு சான்று பகிர்கின்ற வகையில் இரண்டு திரைப்படங்களும் அவை எடுத்துக் கொண்ட உத்திகளின் ஊடாக புலப்படுத்தி நிற்கின்றன. ■



ஆலவாய் அமுதன்

# தற்காலிக முகவரியும் நிரந்தர முகவரியும்

புவியீர்ப்பின் நிரந்தர முகவரி நியூட்டன் என எண்ணியிருந்தேன் ஆனால் அவர் தற்காலிக முகவரி என்பதையும் ஐன்ஸ்டீனே நிரந்தர முகவரி என்பதையும் இ.சு முரளிதரனின் “திருவள்ளுவர் தெருவில் நியூட்டன்” நூலைப் படித்த பிறகு அறிந்து கொண்டேன். மீளுகை 2 இன் வெளியீடாக 64 பக்கங்களுடன் விளக்கப்படங்களோடும் 40 சிறு கட்டுரைகளோடும், அறிவியல் சார்ந்த அரூப ஓவியத்தை அட்டைப் படமாகக் கொண்டிருக்கும் இந் நூல் திருக்குறளை அறிவியலோடு இணைத்து எழுதப்பட்டுள்ளது. சந்தன மரம் ஒட்டுண்ணியாக அமைதல், பல்லியின் பாதத்தில் நனோ தொழில்நுட்பம் காணப்படுதல், கடலானது உப்பின் சமநிலையைப் பேணுதல், அப்பிள் விதைகள் நச்சுத் தன்மையோடு அமைதல், அல்பிரட் நோபல் இறப்பதற்கு முன்னரே அவர் குறித்த மரணச் செய்தி வெளியானமை போன்ற பல்வேறு விடயங்கள் புதிய தகவலாய் அமைந்துள்ளன. விமானத் தொழில்நுட்பம், காலப்பயணம், ஒழுங்கின்மை கோட்பாடு, சதிக் கோட்பாடு, சுரோடிங்கரின் பூனைக் கோட்பாடு, கனவுக் கோட்பாடு, மரபணு மருத்துவம் போன்ற பல அறிவியல் விடயங்கள் திருக்குறளோடு சேர்ந்து பேசப்படுகின்றன. சில குறட்பாட்களுக்கு புதிய உரைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

“திருவள்ளுவர் தெருவில் நியூட்டன்” நூலின் முதற் கட்டுரையானது தலைப்பையொட்டியும் நியூட்டனின் மூன்றாம் விதியை விளக்குவதாயும் எளிய முறையில் கனகச்சிதமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

“சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கை பிழையாதற்று” என்னும்

குறள் கையினை நிலத்திலே மோதும் போது நிலம் மறு தாக்கத்தினைச் செலுத்தி வலியினைத் தருமாற்போல் சினமும் ஒருவனுக்கு துன்பத்தைத் தரும் என்பதை வெளிப்படுத்துவதனூடாய் நியூட்டனை வள்ளுவர் சிந்திக்க வைத்துள்ளமை தொடர்பில் காட்டி நிற்கிறது.

அறிவியலை பாடு பொருளாய்க் கொண்ட இந்நூலானது காலப்பயணம் பற்றியும் விபரிக்கிறது. தாத்தா முரண் கோட்பாட்டின் மூலம் காலப் பயணக் கோட்பாடுகள் நிலைகுலையும் தன்மையை

“நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்ற
பெருமை உடைத்து இவ்வுலகு”

திருக்குறளில் 336 ஆவது குறளும் நேற்றைய காலத்திலே சென்று ஒருவன் இருந்தான் எனில் இன்று என்னும் காலம் பொய்யாக்கி விடும் பெருமையை இவ்வுலகு கொண்டுள்ளது எனும் கருத்தோடு அமைவதால் பௌதிகவியலின் கோட்பாடாய் திகழும் காலப் பயணம் உண்மையில் நிகழ்தல் சாத்தியமற்றது என்பதை நிரூபித்துள்ளது.

சுரோடிங்கரின் பூனைக் கோட்பாட்டையும் விருந்தோம்பலையும் இணைத்துள்ளமையும் இந்நூலிற்கு அணி சேர்க்கிறது. இருப்பும், இன்மையும் கலந்த இருமைப் பண்பை வெளிப்படுத்தும் வண்ணம் சுரோடிங்கரனால் முன்வைக்கப்பட்டுள்ள கோட்பாடானது ஒரு இரும்புப் பெட்டியில் பூனையை வைத்து பூட்டி அதனோடு (HCN) எனும் ஐதரே சயனைற்குடுவை, சுத்தியலை வைத்தால் கதிரியக்கத் தன்மையுள்ள பொருளில் ஒரு அணு சீர்குலைந்தாலும் சுத்தியல் குடுவையைத் தாக்கி ஐதரே சயனைசற் வெளிப்பட்டு பூனை இறந்து விடும் இருப்பினும் குவாண்டம் நேரடுக்கு பண்பின் படி பூனை உயிரற்றும் உயிருடனும் என இருமைநிலை இருப்பை வெளிப்படுத்துகிறது. இத் தன்மை

“உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு” என விருந்தோம்பலை செய்யாதவனின் செல்வம் இருப்பும் இன்மையும் கலந்த இருநிலையில் அமைவதானது சுரோடிங்கரின் பூனையோடு ஒப்பிடப்படுகிறது. பிற அங்கிகளில் தங்கி வாழும் அங்கியான ஒட்டுண்ணி தாவரமாக சந்தனமரம் இருப்பதையும் இந்நூல் காட்டி நிற்கிறது. சந்தனமரங்கள் மண்ணிலிருந்து நேரடியாக ஊட்டச்சத்தினை பெற முடியாமையால் வேம்பு போன்றவற்றோடு ஓம்புயிரியாக வளர்க்கப்படுவதாகவும் சந்தன மரத்தின் வேரிலிருந்து வளர்கின்ற உறிஞ்சுறுப்பான கௌஸ்ரோரியா வேம்பின் வேர்களில் நுழைந்து தனக்கான ஊட்டச்சத்தினை பெறுவதன் மூலம் ஒட்டுண்ணி வகையில் உள்வாங்கப்படும். சந்தனமரம் அரை நூற்றாண்டின் பின்னரே வெட்டப்படும் தகுதியை பெறுவதால் வேம்பை தன் வாழ் நாள் முழுதும் உறிஞ்சி வாழ்ந்து அதற்கு துன்பமிழைக்கினும் வேம்போ

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்நயம் செய்து விடல்” என வருந்திடினும் சந்தன மரத்திற்கு வாழ்வாதாரமாகவே அமைகிறது.

நளதமயந்தி, கலையுருக்காட்டி, கம்பராமாயணத்தில் அறிவியல் போன்ற நூல்களின் ஊடாக அறிவியல் எழுத் தின் தற்காலிக முகவரி என அறியப்பட்ட இ.சு.முரளிதரன் இந்நூல் மூலம் நிரந்தர முகவரியாகின்றார். சுஜாதா, ராஜ் சிவா வரிசையில் பயணிக்கும் தகுதியை பெறுவதற்கான அடையாளங்களை இந்நூல் இனங்காட்டி நிற்கின்ற தன்மை சாஸ்வதமாயுள்ளது. ■

# அடிபணியாத நாடுகளுக்கு எதிரான அமெரிக்காவின் அரசியல் ஆயுதம்

உ.ரமணி



உலகின் பெரியண்ணன் என வர்ணிக்கப்படும் அமெரிக்கா தன் விருப்பத்துக்கு மாறாக நடக்கும் நாடுகளுக்கு எதிராக "தடை" எனும் அரசியல் ஆயுதத்தைப் பிரயோகித்து அடிபணிய வைப்பதில் கில்லாடியாக விளங்குகிறது. அமெரிக்கா விதிக்கும் தடைகள் இரண்டு வகைப்படும். ஒன்று பொருளாதாரத்தடை. இரண்டாவது பயணத்தடை.

பொருளாதாரத்தடை விதிக்கப்படும் நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதி பாதிக்கப்படுவதால் அந்த நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். ஏற்றுமதி இல்லை என்றால் வருமானம் பாதிக்கப்படும். இறக்குமதி இல்லை என்றால் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு உண்டாகும். இதனால், அந்த நாட்டில் கிளர்ச்சி ஏற்படும். அந்த நாடு இறங்கி வந்து அமெரிக்காவுடன் சமரசம் பேசி பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடும்.

ஒரு நாட்டின் செல்வாக்கு மிக்க ஒருவருக்கு விதிக்கப்படும் பயணத்தடை அந்த நாட்டை தன்வசம் ஈர்க்கும் முதல் கட்ட வேலைத்திட்டம்.

மனித உரிமை நாள் அன்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கை இலங்கைக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை இராணுவ அதிகாரிகள் இருவர் உட்பட ஆறு நாடுகளின் இராணுவ மற்றும் அரசியல் அதிகாரிகள் பன்னிரெண்டு பேருக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது நாட்டை நோக்கிய பயணத் தடைவிதித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. இராணுவ அரசியல் அதிகாரிகளுக்கு அப்பால் மேலும் சிலரையும் உள்ளடக்கி, மொத்தம் 15 பேருக்கும் 10 கட்டமைப்புகளுக்கும், திறைசேரி ஊடாகவும் பயணத்தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்ட பன்னிரெண்டு அதிகாரிகளும் முழுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் என்ற தகவல்களின் அடிப்படையில், அந்த நபர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்குமான பொறுப்புக் கூறலுக்கு ஏற்ற வகையில் அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கையே இந்த இரு இராணுவ அதிகாரிகளுக்கான பயணத் தடை என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி ஜே பிளிங்கென் அறிவித்திருக்கிறார்.

**"இலங்கை இராணுவ அதிகாரிகள் இருவர் உட்பட ஆறு நாடுகளின் இராணுவ மற்றும் அரசியல் அதிகாரிகள் பன்னிரெண்டு பேருக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது நாட்டை நோக்கிய பயணத் தடைவிதித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. இராணுவ அரசியல் அதிகாரிகளுக்கு அப்பால் மேலும் சிலரையும் உள்ளடக்கி, மொத்தம் 15 பேருக்கும் 10 கட்டமைப்புகளுக்கும் திறைசேரி ஊடாகவும் பயணத்தடை அறிவிக்கப்பட்டுள்ளது."**

உகண்டாவைச் சேர்ந்த ஒருவர், சீனாவைச் சேர்ந்த நால்வர், வெள்ளை ரஷ்யா எனப்படும் பெலரஸ் நாட்டைச் சேர்ந்த இருவர், பங்களாதேஷைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவரும் இராணுவ லெப்ரினன்ட் கேணல் ஒருவரும் மெக்சிகோவில் ஒருவருமாக மொத்தம் பன்னிருவருக்கு அமெரிக்காவுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் உள்ள உய்குர் முஸ்லிம்கள் இன அழிப்புக்கு உள்ளாவதாக அமெரிக்க, மற்றும் கனடாத் தரப்புகள் பகிரங்கமாகவே குற்றஞ்சுமத்தும் நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அறிக்கையில் சீனாவின் மோசமான மனித உரிமை மீறல் என்று மாத்திரமே குற்றம் சுமத்தப்பட்டுத் தடைப் பட்டியலில் சீன இராணுவ அதிகாரிகள் நால்வர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு அதிகாரிகள் மனித உரிமை மீறல்கள் அல்லது குறிப்பிடத்தக்க ஊழல்கள் இடம்பெற்றுள்ளமை குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளருக்கு நம்பகரமான தகவல்கள் கிடைத்திருப்பதனால், அந்த நபர்களும், அவர்களின் உறுப்பினர்களும் அமெரிக்காவிற்குள் நுழையத் தகுதி அற்றவர்கள் என அமெரிக்கா கூறியுள்ளது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கும் தண்டனை விதிக்கப்படுவது குறித்து தமது அக்கறை, பொறுப்புணர்வை ஊக்குவிப்பதற்கான தமது ஆதரவு மனித உரிமைகளை ஊக்குவித்தல், பொறுப்புணர்வை ஊக்குவித்தல், மனித உரிமைகளை ஊக்குவித்தல், பாதுகாப்புத்துறை சீர்திருத்தல், நீதி மற்றும் நல்லிணக்கம் மற்றும் அதன் பிற கடமைகளை ஆதரித்தல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தை தாம் கேட்டுக்கொள்கின்றோம் என அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துடனான தமது கூட்டாண்மை மற்றும் இலங்கை மக்களுடனான தாம் பகிர்ந்து கொள்ளும் நீண்ட கால ஜனநாயக பாரம்பரியத்தை மதிப்பதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.

இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும், வளர்ந்துவரும் அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதற்கும் அதன் பாதுகாப்பு படைகளை மாற்றியமைப்பதற்கும் தாம் உறுதியுடன் உள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பாதுகாப்பு ஒத்துழைப்பு, பயிற்சி, உதவி மற்றும் ஈடுபாடுகளின் அடிப்படை அங்கமான மனித உரிமைக்கான மரியாதை குறித்து தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக திணைக்களத்தின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை ராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா, அவரது குடும்பத்திற்கு தமது நாட்டிற்குள் பிரவேசிக்க அமெரிக்கா கடந்த ஆண்டு விதித்த தடையுத்தரவிற்கு இலங்கை அரசாங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. ஷவேந்திர சில்வாவுக்கு இலங்கையில் வழக்கு எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. போரின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதவியும் வகித்தார். இலங்கை கடற்படை புலனாய்வு அதிகாரி சந்தன ஹெட்டியாராச்சி, சுனில் ரத்நாயக்க ஆகியோர் அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. மேலும், அவர்களது குடும்பத்தினரும் அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. பீல்ட் மர்ஷல் சரத் பொன்சேகாவுக்கு அமெரிக்கா பல முறை விஸா வழங்க மறுத்துவிட்டது.

மேஜர் ஜெனரல் உதய பெரேரா குடும்பத்துடன் அமெரிக்காவுக்குச் செல்வதற்கு விமான நிலையத்துக்குச் சென்ற போது அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அவரது ம்னைவியும் மகனும் திட்டமிட்டபடி புறப்பட்டுச் சென்றனர். இலங்கையின் பிரதி உயர் ஸ்தானிகராக மேஜர் ஜெனரல் உதய பெரேரா [2009/2011] கடமையாற்றினார். பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன, மேஜர் ஜெனரல் சகி கால்லகே ஆகியோருக்கு அவுஸ்திரேலியா பயணத்தடை விதித்துள்ளது. அமெரிக்காவால் பயணத்தடை விதிக்கப்பட்ட அனைவரும் ஜனாதிபதி கோத்தபாயவுக்கு நெருக்கமான இராணுவ உயர் அதிகாரிகள். யுத்த காலத்தில் இராணுவ அதிகாரிகளை வழி நடத்தியவருக்கு எந்த நாடும் பயணத் தடை விதிக்கவில்லை.

அமெரிக்காவுடன் இணங்கிப் போனால் இந்தப் பயணத்தடைகள் அனைத்தும் உடைக்கப்படும். அமெரிக்காவின் சொல்லுக்குக் கட்டுபட இலங்கை தயாராக இல்லை.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைக்கு உலக நாடுகள் பல கீழ்ப்படிந்தன. கியூபா, வட கொரியா, வெலுசுவேனியா ஆகிய குட்டி நாடுகள் அடிபணியாது நிமிர்ந்து நிற்கின்றன. அமெரிக்காவுக்கு 90 மைல் தூரத்தில் உள்ள கியூபா 60 ஆண்டுகால பொருளாதாரத் தடையை மீறி தலை நிமிர்ந்து நிற்கிறது. கியூபா என்றதுமே நினைவுக்கு வருவது கம்யூனிசம்தான். அதற்கு அடையாளமாக இருந்தவர்கள் ஃபிடல் காஸ்ட்ரோவும், சே குவேராவும்.

1962 ஆம் ஆண்டு முதல் கியூபா மீது பல்வேறு தடைகளைக் கொண்டுவந்தது அமெரிக்கா.

60 ஆண்டுகளைத் தாண்டியும் அமெரிக்காவின் பல்வேறு சதி வேலைகளைத் தகர்த்தெறிந்து தனி ஒரு நாடக நிலைத்து நிற்கிறது கியூபா. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கப்பலில் பல நூறு பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். அந்தக் கப்பல் நுழைய எந்த நாட்டிலும் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு ஆதரவு கரம் நீட்டி, அவர்களுக்கு இடமும், மருத்துவ உதவியும் தந்தது கியூபா மட்டுமே. கல்வி, மருத்துவம் என்று பல்வேறு பிரிவுகளில் கியூபா தனித்துவம் மிக்க நாடக இருக்கிறது. அந்த நாட்டில் எந்த சர்வாதிகாரமும் என்றுமே எடுபடாது' என் கிறார்கள் கம்யூனிஸ்ட்டுகள்.

■



# ஏக்கம்

உ.மானஷா

காலைப் பொழுதின் கதிர்கள் மணிக் கோபுரத்தை மினுங்க வைத்துக் கொண்டிருந்தன. முதுகில் கனவு மூட்டைகளைச் சுமந்த படி சிறு கால்கள் பாடசாலை நுழைவாயிலை நோக்கிப் பயணித்தன. கோபுர மணிகள் அகன்றொலிக்க நடந்த கால்கள் விரைந்து ஓடத் தொடங்கின. இவற்றையெல்லாம் வீதியின் மறுபுறத்தில் பலவிதமான ஏக்கங்களுடனும் ஏமாற்றங்களுடனும் மழலையின் இரு விழிகள் நீர் நிரம்பியபடி பார்த்துக் கொண்டிருந்தன. பறட்டைத் தலை, கிழிந்த ஆடை, கால்களில் செருப்பு கூட அற்ற நிலையில் நின்று கொண்டிருந்தான். சரவணனுக்குப் படிப்பதற்கு மிகவும் ஆசை. ஆனால், அவனது தந்தையின் வருமானம் மூன்று வேளை உணவிற்கே போதுமானதாக இருந்தது. சரவண னுக்கு எட்டு வயதாகியும் ஆரம்பக் கல்வி கூடப் பயிலவில்லை. குடும்ப வறுமையால் தனது படிப்பை பொருட்படுத்தாத சரவணன் அன்று ஒருநாள் அவனின் தந்தையிடம் தன் கள்ளங்கபடமற்ற மனக் கதவைத் திறந்து தனக்குப் படிப் பதற்கு ஆசையாக உள்ளது. மற்றையவர்களைப் போல் நானும் பள்ளி செல்ல ஆசைப்படுகிறேன் என்றான்.

இந்த உலகில் எந்தப் பெற்றோர்தான் தன் பிள்ளை பள்ளி சென்று படிக்க ஆசையாக உள்ளதென்றுகூறும் போது சந்தோசப்பட மாட்டார்கள். சரவணனின் தந்தைக்கு சரவணன் படிக்க ஆசையாய் உள்ளதெனக் கூறியதும் மட்டற்ற மகிழ்ச்சி. உடனடியாக சரவணனைப் பள்ளியில் சேர்த்து தன்னால் இயன்ற வரை படிப்பித்தார். இதனால், சரவணனின் வீட்டில் இரண்டு வேளை மட்டுமே அடுப்பு எரியத் தொடங்கியது. காலப் போக்கில் அவனது தாயும் நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையில் கிடந்தாள். இதனால் குடும்ப வருமானம் போதுமானதாக இருக்கவில்லை. தாயின் மருத் துவச் செலவிற்கே போதுமாயிருந்தது. தாயின் இயலாமையையும் குடும்ப வறுமையையும் நினைத்தபடி பாடங்களில் கவனமற்று யோசித்தபடியும் கண் கலங்கியபடியும் இருப்பான். இதனால் முதலாம் தவணைப் பரீட்சையில் அவ்வளவு அதிக புள்ளிகளை அவன் பெறவில்லை. அவனின் மன அழுத்தம் பன் மடங்காகப் பெருத்தது. மறுநாள் காலை புலர்ந்தது... அன்றோ ஐப்பசி இருபத் தொன்பதாம் திகதி. அன்று சரவணின் பிறந்த நாள். வழமை போலவே அவனும் பாடசாலை சென் றான். ஆனால், அவனை யாரும் கண்டு கொள்ள வில்லை. வகுப்பாசிரியர் வரவு இடாப்பை பதிவு செய்யும் போது இன்று சரவணின் பிறந்தநாள் என் பதை அவதானித்தார். வரவு இடாப்பு பதிவு செய்த பின்பு சரவணனை அழைத்து வாழ்த்துத் தெரி வித்தார்.



வகுப்பாசிரியர் சரவணனை நோக்கி "சரவணா உன் நிலைமை எனக்குப் புரிகிறது. நானும் உன்னைப் போல் மிகவும் வறிய குடும்பத்தில்தான் பிறந்தேன். ஓலையால் வேயப்பட்ட கூரை, மட்டைகளால் வரியப்பட்ட சுவர், படுத்துறங்கப் பாய் கூட இல்லை. மழைக் காலங்களில் எமக்கு உதவுபவர் யாரும் இல்லை. எங்கள் குடும்பத்திற்கும் என் தந்தை ஒருவரின் வருமானம் மட்டுமே. பல தடவைகள் அவமானங்களை நான் சந்தித்தேன். ஊரில் உள்ளவர்கள் பலர் பலவாறாகப் பேசினார்கள் இதற்கெல்லாம் ஒரே வழி... இவர்களின் வாயை அடக்குவதற்குக் கல்வி ஒன்றினால்தான் முடியும். என் மன வைராக்கியத்துடன் பள்ளி சென்றேன். தந்தை ஒருவரின் வருமானம் போதாமையால் படிக்கும் நேரம் தவிர விளையாடும் நேரத்தை வேலை செய்வதற்காக ஒதுக்கினேன். படிக்கும் நேரம் வேலை சென்று என்னால் முடிந்த வரை முயற்சி செய்தேன்..

முயற்சியும் கை கொடுத்தது. பள்ளிப் படிப்பை தொடர்ந்து பல்கலைக்கழகம் சென்று தற்போது ஒரு ஆசிரியர் பதவியில் உள்ளேன். எங்களைப் பற்றி பேசின வாய்கள் ஓய்ந்தன. கல்வி ஒன்றே கைகொடுக்கும். காசு பணம் இருந்தாலும் கல்வியறிவு இல்லையேல் பயனும் இல்லை மதிப்புமில்லை" என்று ஆசிரியர் கூறி முடித்தார். ஆசிரியரின் வார்த்தைகளைக் கேட்ட சரவணனின் கண்களில் நம்பிக்கை பிறந்தது. சரவணன் தானும் தன் குடும்பமும் சமூகத்தில் மதிப்புடன் வாழ வேண்டுமெனின் கல்வி ஒன்றே தீர்வு எனத் தீர்மானம் எடுத்தான். சரவணனும் தன் ஆசிரியரைப் போலவே முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் காலடி எடுத்து வைத்தான். காலச் சக்கரம் உருண்டோடியது.

***

வைத்தியர் சரவணன் காரிலே வந்து இறங்கினார். மாளிகை வீட்டின் கூடத்திலே தொங்கிய தந்தையின் புகைப்படத்தை நோக்கி நடந்தார். கையிலிருந்த மாலையைப் புகைப்படத்திற்குப் போட்டார். சொகுசான புகழ் மிகுந்த உன்னத வாழ்வினை அனுபவித்தாலும் தன் தாய் தந்தையரை இவ்வாறு வாழ வைப்பதற்குக் காலம் உதவவில்லையே என்ற எண்ணம் அவரிடம் வெளிப்பட்டபோது விழிநீர் கசிந்தது. தந்தையின் புகைப்படத்தினை ஏக்கத்தோடு பார்த்தபடி நின்றார். ■



எழுத்தாளர் சாந்தன் எழுதிய சித்தன் சரிதம் நாவல் அறிமுக அரங்கு கடந்த வாரம் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் கவிஞர் த. ஜெயசீலன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. எழுத்தாளர் மு. அனாதரட்சகனின் வரவேற்புரையுடன் விழா ஆரம்பமாகியது. எழுத்தாளர் சு. ஸ்ரீகுமரன் (இயல்வாணன்), சி. விமலன், சி. ரமேஷ் ஆகியோர் உரையாற்றினார்கள். எழுத்தாளர் சாந்தன் பதிலுரையாற்றினார்.

# அரசாங்கத்திலிருந்து விலகுமா இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்?

பிதாமகன்



ஆசியாவின் மிகப்பழமையான தொழிற்சங்கம் என்ற பெருமையுடன் விளங்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸானது கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் ஸ்தாபகரான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்தில், மலையகப் பிரதேசங்கள் அனைத்துக்கும் ஒரே கட்சியாகவும் தொழிற்சங்கமாகவும் இ.தொ.கா விளங்கியது.

காலமாற்றத்தால் இன்று மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள், தொழிற்சங்கங்கள் உருவாகி, அதன் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் உள்ளனர். 1977 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 44 வருடங்கள் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப்பதவிகளையும் , பிரதி அமைச்சுப் பதவிகளையும் கொண்டிருந்த இ.தொ.கா, ஒரு கட்டத்தில் பாராளுமன்றில் 11 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம் எப்போது எழுச்சி பெற்றதோ அதிலிருந்த இ.தொ.காவின் தேய்வு ஆரம்பமாகியது. 1960 களில் சௌமியமூர்த்தி தொண்டமானின் செயற்பாடுகள் பிடிக்காது இ.தொ.காவிலிருந்து விலகிச்சென்ற தொழிற்சங்க துறவி வி.கே.வெள்ளையன் என்பவரால் உருவாக்கப்பட்டதுதான் தொழிலாளர் தேசிய சங்கம். மலையகத்தின் தொழிற்சங்கம் ஒன்றுக்கு ஒரு தோட்டத்தொழிலாளியே தலைவராக இருக்க வேண்டும் என்ற கொள்கைப் பிடிப்பு கொண்டவர் வி.கே.வெள்ளையன்.

அதே போன்று தற்போது அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரம் ஒரு தோட்டத் தொழிலாளியின் மகனாவார். தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தை சீரமைத்து அனைவரையும் ஒன்றிணைத்து இன்று நுவரெலியா மாவட்டத்தில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை தன்வசம் கொண்டிருக்கிறார்.

2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிவாகை சூடிய நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சராக திகாம்பரம் தெரிவு செய்யப்பட, சுமார் 38 வருடங்களுக்குப்பிறகு முதல் தடவையாக இ.தொ.கா வெறும் இரண்டு எம்.பி பதவிகளை மட்டும் கொண்டு எதிரணி வரிசையில் அமர்ந்தது. இந்த காலகட்டத்திலேயே அமரர் ஆறுமுகன் தொண்டமான், தனது சமூகத்துக்கு என்ன செய்தோம் என்பதை திரும்பிப்பார்க்க ஆரம்பித்தார். 38 வருடங்களில் இ.தொ.கா செய்யாத சில அபிவிருத்தித்திட்டங்களை நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் முற்போக்குக்கூட்டணியில் அங்கம் வகித்த தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் முன்னெடுத்த காரணத்தினால் இ.தொ.காவை பெருந்தோட்டச் சமூகம் கிட்டத்தட்ட மறந்து போயினர் என்றே கூற வேண்டும். ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தின் 4 வருட காலத்தின் இடையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளை பயன்படுத்திக் கொண்டு குறுகிய காலத்தில் அமைச்சரான அமரர் ஆறுமுகன் அதற்குப்பிறகு இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களை பயன்படுத்திக் கொண்டார். ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்கி வெற்றிக் கனியை பறிக்கலாம் என்று நினைத்திருந்த நேரத்திலேயே அவர் திடீரென மரணத்தைத் தழுவினார்.

அவ்வெற்றிடத்தை நிரப்ப அரசியல் அனுபவங்கள் இல்லாத 26 வயதான அவரது மகன் ஜீவன் தொண்டமான் தேர்தலில் வெற்றி பெற்றுத் தற்போது இராஜாங்க அமைச்சராக உள்ளார். ஆனால் தனது தந்தை மற்றும் பூட்டனாரின் அரசியல் செயற்பாடுகளையும் அணுகு முறைகளையும் அவரால் தொடர முடியாதுள்ளது. அதற்கு காலமாற்றமும் ஒரு காரணம். தனக்கருகில் இளைஞர் பட்டாளத்தை வைத்திருக்கும் அவர் கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்களின் ஆலோசனைகளை கவனத்தில் கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டு தற்போது பரவலாக எழுந்து வருகின்றது.

மலையகத்துக்கு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப்பதவி, முதல் தடவையாக இழக்கப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அமைச்சுப் பொறுப்பை பிரதமரே கொண்டிருக்கிறார். அவர் அமரர் ஆறுமுகனுடன் நெருக்கமான நட்பை கொண்டிருந்த காரணத்தினால் ஜீவனை தனதருகில் வைத்திருக்கிறார். ஆனால் ஜீவனுக்கு அனைத்து விடயங்களிலும் தன்னிச்சையான முடிவுகளை எடுக்க முடியாதென்பது முக்கிய விடயம்.

> **“38 வருடங்களில் இ.தொ.கா செய்யாத சில அபிவிருத்தித்திட்டங்களை நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகித்த தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் முன்னெடுத்த காரணத்தினால் இ.தொ.காவைப் பெருந்தோட்ட சமூகம் கிட்டத்தட்ட மறந்து போயினர் என்றே கூற வேண்டும். ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தின் 4 வருட காலத்தின் இடையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளை பயன்படுத்திக் கொண்டு ஆறுமுகன் அதற்குப்பிறகு இடம் பெற்ற உள்ளூராட்சி தேர்தல்களை பயன் படுத்திக் கொண்டார்.”**

புதிய அரசாங்கம் இரண்டு வருடங்களை நிறைவு செய்துள்ள வேளையில், மலையக மக்களுக்கென புதிய அபிவிருத்தித் திட்டங்கள் எதுவுமே ஆரம்பிக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. நல்லாட்சி அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட மலையக அதிகார சபை மற்றும் புதிய பிரதேச செயலக அமுலாக்கம் என்பன கிடப்பில் போடப்பட்டுள்ளன. மலையகப் பல்கலைக்கழகம் கிட்டத்தட்ட மறக்கப்பட்டு விட்டது.

பிரதேச செயலகங்களுக்குப்பதிலாக உப பிரதேச செயலக காரியாலயம் ஒன்றே கடந்த வாரமளவில் தலவாக்கலையில் திறந்து வைக்கப்பட்டது. அதே வேளை காலி மாவட்டத்தில் மேலதிகமாக மூன்று பிரதேச செயலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இது குறித்து ஊடகங்களில் இ.தொ.காவின் கையாலாகத் தனம் என பலத்த விமர்சனங்கள் தற்போது வெளிக்கிளம்பியுள்ளன.

அரசாங்கத்தின் போக்குகளால் கடும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ள பெருந்தோட்ட மக்கள், தற்போது அரசாங்கத்தின் பக்கமிருக்கும் இ.தொ.காவையும் பகிரங்கமாக விமர்சித்து வருகின்றனர். 2022 ஆம் ஆண்டு ஏதாவதொரு தேர்தல் வருமிடத்து, அரசாங்கத்தின் பக்கமிருந்தும் தமது பிரச்சினைகளை கண்டு கொள்ளாத இ.தொ.காவுக்கு எவ்விதத்திலும் ஆதரவு தரப்போவதில்லையென தோட்டத்தலைவர்கள் கூறி வருகின்றனர்.

மேலும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் முன்னாள் மாகாண சபை அங்கத்தவர்களும் கூட, தம்மால் மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலைமைகள் உள்ளதாக ஜீவனிடம் எடுத்துக்கூறியுள்ளனர். இதே வேளை பாராளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் அரசாங்கம், இ.தொ.காவின் இரண்டு உறுப்பினர்களை இழப்பதால் எந்த இழப்பையும் சந்திக்கப்போவதில்லை. மாறாக மலையக சமூகத்துக்குப் பெற்றக்கொடுப்போம் என்று வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் போகலாம். ஆனால் மலையகப் பெருந்தோட்டச் சமூகத்துக்கு குறிப்பிடத்தக்க வாக்குறுதிகள் எதையுமே இந்த அரசாங்கம் வழங்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் கூட, மலையக வீடமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி 500 கோடி ரூபாய் மட்டுமே. இதன் மூலம் 300 வீடுகளை மாத்திரமே அமைக்க முடியும். ஆனால் மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் இன்னும் 1 இலட்சத்து 30 ஆயிரம் லயன் குடியிருப்புகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் அண்மைக்காலமாக ஜீவன் தொண்டமான் கூறி வரும் கருத்துக்கள், அரசாங்கத்துக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக்கொள்வதாகவே உள்ளது. தொழிலாளர்களின் காணி உரிமை தொடர்பான போராட்டத்துக்கு களமிறங்கத் தயார் என்றும் அனைத்து தமிழ்ப்பேசும் கட்சிகளின் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்தால் பரிசீலிக்கலாம் என்றும் அவர் அறிக்கை விடுத்திருந்தார்.

மேலும் அரசாங்கத்தின் போக்கால் நெருக்கடிகளில் இருக்கும் தொழிலாளர்களில் கனிசமானோர் எதிர்த்தரப்பு மலையக பிரதிநிதிகளைப் பற்றி தற்போது பேச ஆரம்பித்துள்ளனர். நான்கு வருடங்களில் அவர்கள் முன்னெடுத்த அபிவிருத்தித் திட்டங்களை மெச்சி வருகின்றனர். இதில் தற்போது இ.தொ.கா ஆதரவாளர்களும் இணைந்து கொண்டுள்ளனர் என்பது முக்கிய விடயம். 2022 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெற சாத்தியங்கள் இல்லை, ஆனால் உள்ளூராட்சி தேர்தல்கள் இடம்பெற வாய்ப்புகள் உள்ளன. ஆகவே அத்தருணத்தில் தனித்துவத்தை பேண இ.தொ.கா தனது சேவல் சின்னத்தில் களமிறங்குமா? அல்லது அரசாங்கத்துடன் இணைந்து பொது சின்னத்தில் போட்டியிடுமா? என்பது தெரியவில்லை. எது எப்படியானாலும் அதிரடியான முடிவுகளை எடுப்பதில் தனது தந்தை ஆறுமுகனை நெருங்க முடியாதளவுக்கு, மலையக அரசியல் களத்தின் பாலகனாகவே இன்னும் இருக்கிறார் ஜீவன் தொண்டமான். ■

# மலையகக் கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

இக்பால் அலி

மலையகக் கவிதை இலக்கிய ஆய்வுத் துறையில் கலாநிதி ஸாதியா பௌஸர் எழுதிய ‘மலையகக் கவிதைகளும் மக்களும், எனும் ஆய்வு நூலின் வரவின் மூலம் துறைசார்ந்த சாதனையாளராகவும் தமது புலமைத் தடத்தினை ஆழப் பதித்த பெருமைக்குரியவர். தான் பிறந்த மலையக மண்ணின் மீது கொண்டுள்ள பாசமும் அறிவு அனுபவங்களுடன் மலையகத்தில் துன்பப்படும் மக்கள் மீது பரிவுடன் தமது பார்வையைச் செலுத்தி அம்மக்கள் பற்றி பாடுபொருளாகக் கொண்டு படைத்த கவிஞர்களுடைய பாடல் வரிகளையும் வலிகளையும் எடுத்தாய்வு செய்து மலையகக் கவிதை இலக்கியத்திற்கென ஒரு காத்திரமான நூலை வெளிக்கொணர்ந்துள்ளார் கலாநிதி ஸாதியா பௌஸர். இதன் பயனாக இதுவரையிலும் கிடைக்கப்பெறாத மலையகப் படைப்பாளிகளுக்கு முக்கியத்துவமும் அங்கீகாரமும் வழங்கப்படுகின்ற ஆரோக்கியமான சூழல் இன்று எழுந்துள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவி கலாநிதி ஸாதியா பௌஸர் மலையகம் பற்றி ஆய்வு மேற்கொண்டு வெளியிட்ட இந்நூலானது மலையகக் கவிஞர்கள் மனித குலத்தை நேசிக்கும் பண்பையும் மக்கள் படும் துயரத்தையும் அவர்களது வாழ்க்கைக் கோலத்தையும் பல கோணங்களில் ஆராய்ந்து மலையக மக்கள் பற்றிய கூர்மையான மதிப்பீடொன்றைத் திறன்படச் செய்துள்ளார். இதற்கும் மேலாக தமிழ் இலக்கியத் துறையில் பல்வேறு ஆற்றல் படைத்த ஒரு சிறந்த ஆய்வாளர் என்பது நாமறிந்ததே!

இந்நூலாசிரியர் தமது முன்னுரையில் ‘தமிழ் இலக்கியத்தை யாழ்ப்பாணம் தமிழ் இலக்கியம், கிழக்கிலங்கை தமிழ் இலக்கியம், தென்னிலங்கைத் தமிழ் இலக்கியம் என்பது போல், பிரதேச ரீதியிலான இலக்கியமாக நோக்குவதை விட அடக்கப்பட்ட சமூகத்தின் குரலாக நோக்குவதே பொருந்தும். இவ்வாய்வில் மலையக மக்கள், மலையக இலக்கியம் முதலிய பதங்கள், பிரதேச அடிப்படையிலின்றி, இந்தியாவில் இருந்து பெருந்தோட்டச் செய்கைக்காக அழைத்து வரப்பட்ட மக்களையும் அவர்களது பிரச்சினைகளைப் பிரதிபலிப்பனவாக அமைந்த இலக்கியங்களையுமே குறித்து நிற்கின்றன. மலையகத்தைச் சேர்ந்தவர்களால் அவர்களது பிரச்சினைகள், வாழ்வியல் அம்சங்கள் முதலியவற்றைப் பற்றி எழுதப்பட்ட கவிதைகள், மலையகம் சார்ந்தோரால் மலையகம் தொடர்பாக எழுதப்பட்ட கவிதைகள் ஆகிய இரண்டையும் மலையகக் கவிதைகள் உள்ளடக்கப் பட்டுள்ளன’ என்று நூல் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இந்த ஆய்வு நூல் நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றினதும் உட்பிரிவுகளில் பல உப தலைப்புக்களில் நிறைய விடயங்கள் எழுதப்பட்டுள்ளன. முதல் பொருளடக்கத்தில் 1838 களில் “மலையக மக்களின் வரவும் ஆரம்ப காலகட்டப் பிரச்சினைகளும்” என்ற தலைப்பில் நூலாசிரியர் கலாநிதி ஸாதியா பௌஸர் இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கோப்பி பயிர்ச் செய்கைக்காக அழைத்து வரப்பட்ட ஆரம்ப வரலாற்றை எடுத்துக் கூறி பிழைப்புக்காகத் தொழில் தேடிவந்த மக்கள் படுந்துயரத்தையும் அவர்கள் எழுப்புகின்ற அவலக் குரலையும் மலையகக் கவிஞர்கள் தம் குருதி கலந்து எழுத்துக்களால் வடித்துள்ள கவிதைகளை எடுத்தாராய்ந்து நேர்மைத் தன்மையோடு ஆழமான விரிவான வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நூலாசிரியர் தெளிவாக விளக்கியுள்ளார்.

காலம் காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இலக்கியம் மறுக்கப்பட்டு வந்துள்ளது. இதுவே ஏடறிந்த இலக்கிய மரபு எனப் பேராசிரியர் கைலாசதிபதி கூறுவது போல் இத்தனை காலமும் துன்பப்பட்ட மலையக மக்களுடைய வாழ்வியல் துயரங்களைக் கவிவரிகளுக்குள் சிறைபிடித்து வடித்துள்ள மலையகக் கவிஞர்களின் அடையாளத்தை யாரும் சரியாகப் பதிவு செய்யவில்லை. இந்நூலாசிரியர் செய்நேர்த்தியுடன் மதிப்பீடு செய்து பதிவு செய்துள்ளார். குறிப்பாக அல் அஸூமத், நாவண்ணன், சி. வே. ராமையா ஆகியோர் சித்திரித்துள்ள கவிதைகளைப் பல இடங்களில் எடுத்துக் காட்டி தம் ஆய்வு நூலுக்கு வலிமை சேர்த்துள்ளார்.

“மலையகக் கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்” என்ற தலைப்பின் உப தலைப்புக்களாக ஆரம்ப காலம் (1825-1920) விழிப்புணர்ச்சிக் காலம் (1920- 1950 களின் இறுதிவரை) எழுச்சிக்காலம் (1960 தொடக்கம் இன்று வரை) இதில் நூலாசிரியர் ‘மலையக இலக்கியம் எனும் போது அதனைப் பிரதேச ரீதியிலான ஓர் இலக்கியமாகவன்றி, அடக்கப்பட்ட ஒரு சமூகத்தின் குரல் அல்லது இந்தியாவில் இருந்து இலங்கை பெருந்தோட்டங்களுக்கு அழைத்து வரப்பட்ட பாட்டாளி மக்களின் குரல்கள் என்றே கொள்ள வேண்டும்’ என்று மிகவும் தெளிவுபடக் கூறுகிறார்.

‘வாய் மொழிப் பாடல்கள் மூலம் மலையக மக்களின் வரவு தோட்டங்களில் இடம்பெறும் கொடுமைகள், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள், ஏக்கங்கள், அவலங்கள், தொழில் நிலைமைகள் முதலிய இன்னோரன்ன அம்சங்களையும் அறிந்து கொள்ள முடியும்’ என்று நூலாசிரியர் தமது நூலில் சான்றுகளுடன் முன்வைத்துள்ளார். ஆசிரியரின் பார்வைத் தளத்தில் எம்மையும் ஏற்றி அப்பாடல்களைத் தேடிப்படிக்க வேண்டும் என்ற தூண்டுதலைத் தரக் கூடியதாக உள்ளன.




இந்நூலில் மக்கள் கவிஞர்களை பல வண்ணங்களில் கோர்வை செய்துள்ளார் நூலாசிரியர். நமது பார்வையில் படாத நாம் கண்டுகொள்ளாத கவிஞர்களின் படைப்புக்கள், நமது செவிக்கு எட்டியும் அதை கவனத்திற்கொள்ளாமல் இருட்டிடப்புச் செய்யப்பட்ட கவிஞர்களின் படைப்புக்கள், புதுமுகக் கவிஞர்கள் இப்படி பற்பல. அவற்றை எல்லாம் தேடிப் பிடித்து அறிமுகம் செய்துள்ளார் நூலாசிரியர் கலாநிதி ஸாதியா பௌஸர். இது மிகவும் கடிமான ஒரு முயற்சியாகும். ஆனாலும் 1990 களில் மவனல்லைப் பிரதேசத்தில் நூராணியா ஹசன், ரிஷ்கி ஷரீப், ரீசா யூசுப், பாரா தாஹிர், கண்டியில் இஸ்லாமியச் செல்வி அரபா ஆகியவர்கள் தேசிய பத்திரிகைகளில் கவிதைகள் எழுதினார்கள். ஆனால், இவர்களது ஆக்கங்கள் எவையும் நூலாகவில்லை. இவர்கள் பற்றியும் எதிர்காலங்களில் நூலாசிரியர் தேடிப் பார்க்கலாம் என்பது எனது பணிவான கருத்தாகும்

“மலையக மக்களின் அரசியல் பிரச்சினைகள்” என்ற தலைப்பின் கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட சட்டதிட்டங்களும் ஒப்பந்தங்களும் இனக்கலவரங்களும் அவற்றினால் ஏற்பட்ட விளைவுகளும் அரசியல் தலைவர்களின் நிலை முதலிய உப தலைப்புக்களில் மக்கள் கவிஞர்கள் வடித்துள்ள மலையகத்தில் நிலவும் அரசியல் கொந்தளிப்பை தம் படைப்பின் ஊடாக சித்தரிக்கும் கவிதைகளை அடையாளப்படுத்தி மலையகத்தில் ஏற்படும் மாறுதல்களையும் சரித்திரத்திரத்தையும் அடையாளப்படுத்தி நூலுக்கு வலிமைபெறச் செய்துள்ளார்.

மலையக மக்கள் மீது போலித்தனங்களையும் கபட நாடகங்களையும் ஆடுகின்ற கங்காணிமார்களையும் துரைமார்களையும் துகிலுரித்துக்காட்டி மலையக சமூகத்தினை விழிப்புறச் செய்த மக்கள் கவிஞர்களாகக் கணிப்பிடப்படுபவர்களில் முதன்மையாளர்களாக விளங்குபவர்களை பெயர் பட்டியலிட்டு நூலாசிரியர் அறிமுகம் செய்துள்ளார். அந்த வகையில் சி.வி.வேலுப்பிள்ளை, சக்தி பாலையா, வி. எஸ். பாலு (குறிஞ்சித்தென்னவன்), அல் அஸூமத், சி.வே. ராமையா, க. ப. லிங்கதாசன், தமிழோவியன், வெலிமடைகுமரன், பூண்டுலோயா தர்மு, அரு. சிவானந்தன், முத்து சம்மந்தர், வீரா. பாலச்சந்திரன், 1980 களிலிருந்து இன்று வரையிலும் சு. முரளிதரன், இரா. நித்தியானந்தன், சி. சிவசேகரம், சிவ. இராஜேந்திரன், பன்னீர் செல்வம், இ. தம்பையா, நாவண்ணன், ம. சண்முகநாதன் , க. வெள்ளைச்சாமி, பெனி, இக்பால் அலி, றசீனா புகார், மல்லிகை சி. குமார், இராகலைப் பன்னீர், குறிஞ்சி இளந்தென்றல், க. ஆதவன், வ. ஐ. ச. ஜயபாலன், சி. எ. எலியாசன், தவசஜிதரன், சந்தனம், சத்தியானந்தன், புசல்லாவ கணபதி, எல். ஏ செல்வராஜ், நாகபூஷணி, மாரிமுத்து சிவக்குமார், பொ. புண்ணிய மூர்த்தி மடவளை சியாம், பொகவந்தலாவ சோ. ஶ்ரீதரன் கலகெதர உனைஸ் ஆரிப், வீ.கே. பெரிய சாமி, கண்டி ராமச் சந்திரன், குமரன் முரளிதரன், சந்தனம், பெனி, சி.சிவசேகரம், இ.இராஜேந்திரன், இ.தம்பையா, பொகவந்தலாவ சிறீதரன், கலகெதர உவைஸ், வெள்ளைச்சாமி, மாரிமுத்து சிவகுமார் என ஒரு நீண்ட பெயர் பட்டியலை நூலாசிரியர் தந்திருக்கிறார். இதில் அதிகபடியான கவிஞர்களை அடையாளப்படுத்தியிருந்தாலும் முன்னணிமிக்க கவிஞர்களுடைய கவிதைகளைத் தொட்டுக் காட்டி தனது இரசனையினை தனது உளக் கிளர்வினை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் நூலாசிரியர் கலாநிதி ஸாதியா பௌஸர்.

இறுதியாக மலையகக் கவிதைகளும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளும் என்ற தலைப்பின் கீழ், உணவுப் பிரச்சினை, உடைப் பிரச்சினை, வறுமை, வதிவிடப் பிரச்சினை, போதியளவு மருத்துவ, சுகாதார, போக்குவரத்து வசதியின்மை முதலிய உப தலைப்பின் கீழ் மக்கள் கவிஞர்களின் படைப்பாக்கம் தான் வாழ்ந்த சூழலில் எந்த நிலைமைகளில் எவ்வாறு பேசுகிறது. கவிஞர்களின் கவி வரிகளில் உள்ள மௌனப் பண்பாட்டுக் கவிதைகளையும் வெடிப்புறமாகப் பேசுகின்ற கவிதைகளையும் சரியாகப் பார்த்து நூலாசிரியர் ஆழமான மனப்பான்மையோடு மலையகத்தை இன்னுமொருபடி எப்படி மென்மேலும் மீட்டிடெடுக்கலாம் என்ற முக்கியமான கேள்வி ஒன்றையும் அவர் தம் ஆய்வின் மூலம் இயல்பாகவே காட்ட முனைந்துள்ளார் நூலாசிரியர்.

இந்நூல் பற்றி யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அணிந்துரையில் குறிப்பிடும் போது ‘நூலாசிரியர் கலாநிதி ஸாதியா பௌஸர் மலையக இலக்கியங்களை உணர்வுடனும் புலமைத்துவ நெறியுடனும் நீண்ட காலமாக படித்து வருபவர். அவற்றுள் மலையகக் கவிதைகளிலேயே நிறைய ஈடுபாடு கொண்டவர். அந்த ஈடுபாடு ஆய்வு நெறிப்பட்டதாக அமைந்து விட்டது. அதன் விளைவாக முதலில் ஓர் உயர்பட்ட ஆய்வேடாகப் பாராட்டுப் பெற்றது’ என அவரது அணிந்துரையில் சுட்டிக் காட்டியுள்ளார். மலையகத்தைப் பின்புலமாகக் கொண்டவர் இவ்வாய்வு முயற்சியினை மேற்கொண்டுள்ளார் என்பது உன்னிப்பாக நோக்கத்தக்கதாகும்.

கலாநிதி ஸாதியா பௌஸர் இவர் தனது தமிழ் சிறப்புக் கலைமாணி, முதுகலைமாணி, முதுத்தத்துவமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டவர். பல்வேறு நூல்களினதும் சஞ்சிகைகளினதும் ஆசிரியரான இவர் தமிழ் இலக்கியம், மலையக தமிழ் இலக்கியம், தொடர்பான பல்வேறு கட்டுரைகள் அவ்வப்போது எழுதி வருகிறார். இவர் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முதுநிலை விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

மலையகக் கவிஞர்களுடைய எதிர்கால எழுத்துத் துறைக்கு இந்நூல் பயனுள்ளதாக அமையும். மலையக மக்களுடைய சமூக, அரசியல், அன்றாட வாழ்க்கை, தொழில், கல்வி, சுகாதாரம் போன்ற இன்னோரன்ன எல்லா விடயங்களையும் அலசி ஆராய்வது மகிழ்ச்சியை அளிக்கிறது. அவரது முயற்சி பாராட்டத்தக்கது.

# விண்வெளியில் solar farms

European Space Agency, ஆனது எதிர்கால தொழின்நுட்பத்தை உருவாக்கக் கடினமாக உழைத்து வருவதாக அறிவித்துள்ளது, இது solar farms களைச் சுற்றுப்பாதையில் உருவாக்க அனுமதிக்கும், மின்சாரம் தரையில் உள்ள நகரங்களுக்கு உதவும்.

ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து ஆற்றலைப் பெறுவதில் இருக்கும் பெரும் திறனை பயன்படுத்த உள்ளது. இவை நமது கிரகத்தின் மேற்பரப்பில் கட்டப்பட்ட நிறுவல்கள், ஆனால் இது மாறப்போகிறது.

சூரியனில் இருந்து ஆற்றலைப் பிரித்தெடுக்க விண்வெளியில் வேலை செய்யத் தொடங்க ஏஜென்சி விரும்புகிறது. யோசனை புதியது அல்ல, ஆனால் இப்போது நாம் இறுதியாகப் போதுமான அளவிலான தொழின்நுட்பத்தை அடைந்துவிட்டோம், எனவே அதைச் செய்ய முடியும். சோதனைகள் 2-3 ஆண்டுகளில் நடைபெற உள்ளது.

விண்வெளியில், மேகங்கள் மற்றும் சாதகமற்ற வானிலை இல்லை. அதனால் சூரிய சக்தியையும் தடையின்றி பெறலாம். சூரிய மண்டலங்களின் செயல்திறன் பூமியை விடப் பல மடங்கு அதிகம். விஞ்ஞானிகள் இந்த நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள், ஏனெனில் அவர்கள் விளக்குவது போல், விண்வெளி வளர்ச்சி இல்லாதது பெரும் விரயமாகும்

ESA (European Space Agency) பிரச்சாரத்திற்கு எண்பத்தைந்து யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன, அவற்றில் 16 புதுமையானவை என்று தீர்மானிக்கப்பட்டது. சுற்றுப்பாதையில் solar farms நிர்மாணிப்பது மற்றும் புதுமையான "layer tiles" மூலம் சூரிய சக்தியை ரேடியோ அலைவரிசை (RF) ஆற்றலாக மாற்றும் சாத்தியம், அத்துடன் இந்த ஆற்றலை பூமிக்கு அனுப்பும் மற்றும் பயன்படுத்தக்கூடிய ஆற்றலாக மாற்றும் சாத்தியம் ஆகியவை இந்தத் திட்டத்தில் அடங்கும்.

சீனாவும் அமெரிக்காவும் இதே போன்ற சுவாரஸ்யமான திட்டங்களைக் கொண்டுள்ளன. முன்னால் நாடுகள் ஏற்கெனவே சுற்றுப்பாதையில் ஒரு ஒளிமின்னழுத்தச் செல் (photovoltaic cell) தொழிற்சாலையை உருவாக்கும் திட்டத்தைக் கொண்டுள்ளது. தொழிற்சாலைகள் விண்வெளியில் அமைக்கப்பட உள்ளன, அங்கு ஏற்கெனவே முடிக்கப்பட்ட கூறுகள் 3D பிரிண்டர்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டு, பறக்கும் போது ரோபோக்கள் மூலம் நிறுவப்படும். முதல் சோதனை solar farms 2023 இல் அடுக்கு மண்டலத்திலும், 2028 இல் விண்வெளியிலும் வைக்கப்பட உள்ளது. CNSA வெளியிட்ட தகவலின் மூலம், solar farms இல் 1 மெகாவாட் ஆற்றலைக் கொண்டிருக்கும் என்பதை அறியலாம். இந்த நிறுவல் 1000 டன் எடையுள்ளதாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர், இது சர்வதேச விண்வெளி நிலையத்தை விட பாதியாகும்.

அணுசக்தி நம் வசம் இருக்கும் போது புதிய விண்வெளி நிலையங்கள், நிலவில் உள்ள தளங்களுக்கு சூரிய சக்தியைப் பயன்படுத்துவதற்கான யோசனை, திறமையற்றதாகத் தோன்றலாம். எவ்வாறாயினும், அரசாங்கங்கள் விண்வெளியில் எரிசக்தி உற்பத்தியின் ஆதாரங்களை வேறுபடுத்த விரும்புகின்றன என்பதை எல்லாம் இது சுட்டிக்காட்டுகிறது. இங்கு எதிர்கால காலனிகளுக்கான பாதுகாப்பு பிரச்சினையும் முக்கியமானது.






# Google க்கு $100 மில்லியன் அபராதம்

ரஷ்யாவில் தடைசெய்யப்பட்ட தகவல்களை நீக்காததற்காக ரஷ்ய நீதிமன்றம் Google க்கு $98 மில்லியன் அபராதம் விதித்துள்ளது. 7.2 பில்லியன் (Ruble) அபராதம் என்பது ரஷ்யாவில் கூகுளின் வருவாயில் சுமார் 8% என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன, ரஷ்யா பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களின் மீது தொடர்ந்து அழுத்தத்தைப் பிரயோகித்து வருவதால் இதுவரை வழங்கப்பட்ட மிகப் பெரிய அபராதம் இதுவாகும்.

"நீதிமன்ற ஆவணங்கள் கிடைக்கும் போது அவற்றைப் படித்துவிட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும்" என்று கூகுள் (Google) கூறுகிறது. எவ்வாறாயினும், ரஷ்ய அதிகாரி, தடை செய்யப்பட்ட உள்ளடக்கத்தை நீக்குவதற்கான நாட்டின் ஆணைக்கு கூகுள் இணங்கவில்லை என்றால், "மிகவும் விரும்பத்தகாத நடவடிக்கைகள்" என்று அச்சுறுத்தினார், இதில் போதைப்பொருள் விளம்பரம் மற்றும் பயங்கரவாத அமைப்புகளின் பதிவுகள் அடங்கும். ட்விட்டர் (Twitter) மற்றும் மெட்டா (Meta) போன்ற நிறுவனங்கள் தங்கள் சேவைகளில் மந்தநிலையை எதிர்கொண்டன மற்றும் ரஷ்ய கட்டுப்பாட்டாளர்களின் தரநிலைகளுக்கு மதிப்பளிப்பதில் தோல்வியடைந்ததன் அடிப்படையில் அபராதம் விதிக்கப்பட்டது.

ரஷ்யாவில் அதன் உள்ளடக்க மதிப்பீட்டின் காரணமாக கூகுள் க்கு விதித்த முதல் அபராதம் இதுவல்ல. ஒரு பழமையான ரஷ்ய செய்தி சேனல் மீதான தடையை மாற்றாதவரை, ஒவ்வொரு வாரமும் இரட்டிப்பாக்கக்கூடிய அளவை google எதிர்கொள்கிறது, இருப்பினும் சேனலின் உரிமையாளருக்கு எதிரான அமெரிக்க மற்றும் இங்கிலாந்து தடைகள் காரணமாக இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூகிள் (google) கூறுகிறது.

2019 ஆம் ஆண்டில், ஸ்மார்ட் போன்கள், கணினிகள் மற்றும் தொலைக்காட்சிகள் ரஷ்ய டெவலப்பர்களிடமிருந்து நிறுவப்பட்ட (Pre-installed Software) மென்பொருளுடன் வர வேண்டும் என்று ஒரு சட்டத்தை இயற்றியது, இது இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடைமுறைக்கு வந்தது. நாட்டிலிருந்து தினசரி 500,000 பார்வையாளர்களுடன் இணையத்தளங்களை இயக்கினால், அந்நிறுவனங்கள் ரஷ்யாவிலும் அலுவலகங்களைத் திறக்க வேண்டும் என்பது கட்டாயம். தற்போது ரஷ்ய அதிகாரிகள் கூகுள் (Google) மற்றும் ஆப்பிள்(Apple) நிறுவனங்களின் மீது குறி வைத்துள்ளனர், அரசியல் எதிரிகளின் வாக்களிக்கும் செயலிகளை(Apps) தங்கள் app store களில் இருந்து அகற்றி, அந்நிறுவனங்களின் உள்நாட்டில் உள்ள ஊழியர்கள் மீது வழக்குத் தொடரப்போவதாக அச்சுறுத்தினர்.

ரஷ்யக் கட்டுப்பாட்டாளர்கள் நிதி அல்லாத வழிகளிலும் தொழின்நுட்ப நிறுவனங்களுக்கு இணங்க அழுத்தம் கொடுக்க முயன்று வருகின்றனர்.

# ஒரு T-Shirt ரூபா 50,000

British armour நிறுவனம் கூர்மையான கத்திகள் கொண்டு தாக்குதல்களுக்கு எதிராக நீங்கள் பாதுகாக்கக் கூடிய ஒரு தனிப்பட்ட சட்டை உருவாக்கியுள்ளது. இந்த ஆர்மர் டி-ஷர்ட்களின் விலை ரூ.43 000 முதல் ரூ.52000 வரை உள்ளது. அரை கை வி-நெக் டி-சர்ட் ரூ.43,000க்கும், முழு கை சட்டை ரூ.52000க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

PPSS Group, முதன்மையாக உடல் பாதுகாப்பு கவசங்களுக்கு பெயர் பெற்றது. இந்த சிறப்பு சட்டை கார்பன் ஃபைபரிலிருந்து தயாரிக்கப்படுகிறது, இது பருத்தி இழையை விட வலிமையானது.

பொதுவாக, கவசம் அல்லது ஆயுத நிறுவனங்கள் சாதாரண குடிமக்களுக்கான பாதுகாப்பு ஜாக்கெட்டுகளை தயாரிப்பதில்லை. இருப்பினும், இந்த சிறப்பு சட்டை உங்களைக் கத்தி தாக்குதலில் இருந்து பாதுகாக்கும். ஃபேஸ்புக்கில் பகிரப்பட்ட வீடியோவில், அதே சட்டை அணிந்த ஒரு நபர் கூர்மையான கத்தியால் தாக்கப்பட்டார். தாக்குதலுக்குப் பிறகு, சட்டை அகற்றப்பட்டது, நபரின் உடலில் ஒரு கீறல் கூட காணப்படவில்லை. டி-ஷர்ட் மிகவும் தடிமனாக இருந்தது, கூர்மையான ஆயுதம் கூட உள் உடலைப் பாதிக்காது.

பிரிட்டிஷ் ஆர்மர் நிறுவனமான பிபிஎஸ்எஸ் குழுமம் இந்த டி-ஷர்ட்டை சாதாரண மக்களுக்காக வடிவமைத்துள்ளது. முன்னதாக, இந்த நிறுவனம் பல்வேறு புல்லட் மற்றும் ஆயுத எதிர்ப்பு கவசங்களைத் தயாரித்துள்ளது, ஆனால் இப்போது கத்தித் தாக்குதலில் இருந்து மக்களைக் காப்பாற்ற இந்த சிறப்பு டி-சர்ட்டை உருவாக்கியுள்ளது.

காலப்போக்கில் பல்வேறு கவசம் உலகெங்கிலும் உள்ள நிறுவனங்கள் மேம்பட்ட கேடயங்களை உற்பத்தி செய்யும்.



# மக்களை அச்சுறுத்தும்...

(04 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வழங்கியதனாலும் ஏற்பட்ட மிக மோசமான மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட நெருக்கடியாகும். இதனை வெறுமனே தற்போதைய ஆளும் கட்சியில் தவறாகவோ பொறுப்பாகவோ மட்டும் கூறித் தப்பித்துச் செல்லமுடியாது.

இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே வீரியம்பெற்றெழுந்த சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ஆயுதவலிமை மீதான காதலும் அதன் வெற்றிச் செய்திகளைக்கொண்டு சாதாரண சிங்கள மக்களின் பகுத்தறிவினையும் சுயாதீனமாகச் சிந்திக்கும் ஆற்றலையும் இருட்டடிப்புச் செய்யலாம் என்ற ஆட்சியாளர்களின் மமதையும்தான் இந்த நெருக்கடிக்குக் காரணமாகும்.

தற்போது ஏற்பட்டு துரிதமாக விரிவடைந்துகொண்டு செல்லும் இப்பொருளாதார நெருக்கடி தீவு தழுவியதாக எல்லா மக்களையும் பாதிக்கப்போகின்றது. தமிழ்மக்கள் முன்பு அனுபவித்த நெருக்கடியினைத் தற்போது சிங்களமக்கள் எதிர் கொள்ளப்போகின்றார்கள், அது கடவுளின் சித்தம் என்று தர்க்கம் பேசுபவர்கள் பலர் எம்மத்தியில் உள்ளனர். இது மிகவும் வக்கிரமான சிந்தனையாகும்.

நாங்கள் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதற்குக் கிளர்ந்தெழுந்தவர்கள். ஒடுக்குமுறை யார்மேல் பிரயோகிக்கப்பட்டாலும் அதனை எதிர்த்து குரல் கொடுப்பதும் போராடுவதும் விடுதலை விரும்பிகளின் மரபு. நாங்கள் எதிரிகளின் துன்பத்தில் திருப்தி கொள்ளவோ மகிழ்ந்து கொண்டாடவோ முனையக் கூடாது. அது மானிட தர்மமுமல்ல: விடுதலைக்காகப் போராடுபவர்களின் மரபுமல்ல. சாதாரண சிங்கள மக்கள் எங்கள் எதிரிகளுமல்ல.

இன்று எங்கள் முன் உள்ள சவால், நாங்கள் பெற்ற கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் மிகப்பெரும் உணவு உற்பத்திப் போருக்கு எம்மைத் தயார்படுத்தவேண்டும். காலத்தின் வேகத்திற்கு எதிராக நாங்கள் போட்டியிடவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

உலகினை ஆட்டிப்படைக்கும் பெருந்தொற்று பூகோளப்பொருளாதாரத்தின் உச்சபட்ச வினைத்திறனை இன்று சவாலுக்கு உட்படுத்தியுள்ளது. ஒவ்வொரு நாடும் உணவு, மருந்து, எரிபொருள் என்பவற்றுக்கும் அப்பால் ஏனைய அத்தியாவசியக் கைத்தொழிற்பொருட்களையும் தங்களது கட்டுப்பாட்டிற்குள் தங்களது ஆளுகைப்பிரதேசத்திற்குள் வைத்து உற்பத்திசெய்யவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தைப் பெருந்தொற்று படிப்பினையாக வழங்கியுள்ளது.

பெருந்தொற்றும் தீவின் பொருளாதார நெருக்கடியும் ஆட்சியாளர்களின் கொள்கைகளும் ஏற்படுத்தியுள்ள நெருக்கடிகளையும் எதிர்மறையான போக்குகளையும் எவ்வாறு சாதகமாக்கலாம் என்பதனை விரைந்து சிந்தித்துச் செயற்படவேண்டும்.

எனது முன்னைய கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளது போன்று எமது மக்களுக்கான உணவுப்பாதுகாப்பு என்ற குறுகிய நிலைக்குள் எம்மை மட்டுப்படுத்திக்கொண்டிராமல் எமக்கான உணவு இறைமையினைக் கட்டியெழுப்ப வேண்டும்.

எமது மக்களுக்கு மட்டுமல்ல தீவில்வாழும் சகோதர இன மக்களுக்கும் தேவையான ஆரோக்கியமான உணவினை எவ்வாறு உணவுற்பத்தியின் அறங்களுக்குள் நின்று உற்பத்திசெய்து நியாயமான விலையில் பகிர்ந்து கொள்ளலாம் என்பதற்கு நாங்கள் உலகிற்கு உதாரணமாக மாறவேண்டியுள்ளது.

இதுவரை காலமும் செயற்கை விவசாய இரசாயனங்களில் தங்கிவிளைந்த உயர் இன பயிர்வகைகளைக் கைவிட்டு குறைந்த விளைச்சல் என்றாலும் நஞ்சற்ற உணவினை மக்களுக்குக் கொடுக்கக்கூடிய மரபுசார்ந்த பயிரினங்களின் விரைவான உணவு உற்பத்தித் திட்டத்தை நாம் ஆரம்பிக்கவேண்டும்.

தானியங்கள், இலைவகை மரக்கறிகளும் அவற்றைத்தரும் செடி கொடிகளும் மரங்களும் கிழங்கு வகைகளும் பழங்களும் மூலிகைகளும் மரபுசார்ந்த சத்துணவுகளுக்குத் தேவையான உள்ளீடுகளும் விளைபொருட்களாக வர வேண்டும்.

விவசாய உற்பத்திக்குழுக்களும் கிராம அபிவிருத்திச்சங்கங்களும் மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கங்களும் சமுர்த்தி சங்கங்களும் கூட்டுறவு இயக்கங்களும் விளையாட்டுக்கழகங்களும் இளைஞர் கழகங்களும் ஏன் ஆலய தர்ம கர்த்தா சபைகளும் கூட இதனைப் பேசுபொருளாக்கவேண்டும். பாடசாலை மாணவர்களும் ஆசிரியர் சங்கங்களும் சாரணர் இயக்கங்களும் இந்த உணவு உற்பத்திப்போருக்கான அறைகூவலை பட்டித்தொட்டியெங்கும் சென்று பரப்ப வேண்டும். ஒவ்வொரு குடும்பங்களும் தங்கள் வீடுகளை அண்டியதான இடங்களில் வீட்டுத்தோட்டங்களையும் மாடித்தோட்டங்களையும் தொங்கு தோட்டங்களையும் உருவாக்க வேண்டும்.

அரசாங்க திணைக்களங்களில் குறிப்பாக பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள அனைத்துப் பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் குறித்தொதுக்கிய பிரதேசத்தின் உணவுற்பத்திப் போருக்கு பொறுப்பேற்கவேண்டும். யாருமே நொண்டிச்சாட்டு கூறி இந்த தார்மீகப்பொறுப்பிருந்து தப்பிச்செல்ல அனுமதிக்கக்கூடாது.


ஏனெனில், உணவுநெருக்கடி மட்டுமல்லாமல் கூடிச்செல்லும் பொருளாதார நெருக்கடியும் இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளைப் பாதிக்கும் அளவிலும் பரிமாணத்திலும் இருந்து வேறுபட்டதாக வடக்குக் கிழக்கின் பரிமாணம் அமையும்.

ஏற்கெனவே நீண்ட யுத்தத்தின் தாக்கத்திலிருந்து விடுபடமுடியாமல் அல்லல்படும் மக்கள் தொகையினைக்கொண்டுள்ள எமது சமூகம் போதைப்பொருளினாலும் சமூகவிரோதக் காரணிகளாலும் வாள்வெட்டும் வன்செயலும் வழிப்பறியும் குடும்பவன்முறையும் எனப் பல முனைச் சீரழிவுகளினால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிலைமையில் உணவுப்பஞ்சத்தினாலும் கட்டுமீறிய விலைவாசி உயர்வினாலும் தமக்குரிய உணவினையும் ஏனைய தமது தேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியாத தரப்பினர் கொள்ளும் இயலாமை தூண்டிய கோபமும் பொறாமையும் காரணமாகச் சமூக வன்செயல்களும் குடும்ப வன் செயல்களும் தனிமனித நடத்தைப்பிறழ்வுகளும் பெருகிச்செல்லும்.

வறுமையும் வேலையின்மையும் பெருகும்போது இருப்பவனிடம் இருந்து இல்லாதவன் பறிப்பதும் கொள்ளையிடுவதும் சமூகத்தின் சகித்துக்கொள்ளும் நீதியாகவும் நிர்ப்பந்தமாகவும் மாறிவிடும் அபாயத்தை வடக்குக் கிழக்கின் மக்கள் அதிகமாகக் கொண்டிருப்பதனால் நாங்கள் அனைவரும் விரைந்தும் இணைந்தும் செயற்படவேண்டியுள்ளது.

■

# அத்தியாவசியப் பொருட்களுக்காக...



(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இலங்கை நாட்டில் இருக்கும் வெளிநாட்டு பணத்தின் இருப்பு அளவு மிகவேகமாகக் குறைந்துவருகிறது. இலங்கைக்குள் வரும் வெளிநாட்டுப் பணத்துடன் ஒப்பிடுகையில் வெளியே செல்லும் பணத்தின் அளவு மிக அதிகமாக உள்ளது. சுழல் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உணவு அவசரநிலையைக் கொண்டுவந்துள்ளது. இலங்கை அரசு இறக்குமதியின் மீது மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

வாகனங்கள், வாகன உதிரிப் பாகங்கள், டைல்ஸ், வீட்டு உபயோகப் பொருட்கள், செல்போன் உள்ளிட்ட உதிரிப் பாகங்கள் உள்ளிட்ட அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்கு மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. அதன், காரணமாக இலங்கையில் தொழில்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் கூற்றுப்படி, ஒட்டு மொத்தத் தெற்கு ஆசியாவிலும் இலங்கை மட்டும்தான் உயர் நடுத்தர வருமானம் கொண்ட நாடாகும். இலங்கையில் மட்டும் 100 சதவீத படிப்பறிவு மற்றும் உயர் தரத்தில் மனிதவள குறியீடுகள் உள்ளன. ஜனவரி 2020 ஆம் ஆண்டு இலங்கை மக்களின் எதிர்காலம் சிறப்பாக இருந்தது. அதிலிருந்து ஒரு மாதத்தில் கொரோனா உலகைத் தாக்கியது. அதனால், இலங்கையில் சாதாரண மக்களின் வாழ்க்கை ஒரு நாள் இரவில் தலைகீழானது.

இலங்கை அதிக அளவில் இறக்குமதியைச் சார்ந்துள்ளது. அந்நாட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

இலங்கையில் போதுமான அளவில் உற்பத்தி தொழிற்சாலைகள் இல்லை. பெரும்பாலான பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. உலக அளவில் மிகச் சிறந்த 10 சுற்றுலா நாடுகளில் இலங்கையும் ஒன்றாகக் கருதப் படுகிறது. இலங்கைக்கு ஆண்டுதோறும் 20 லட்சம் மக்கள் சுற்றுலாவுக்காக வருகை தருகின்றனர். சுற்றுலாத்துறை இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீத பங்குவகித்தாலும் அதன் மூலம் ஆண்டுதோறும் 400 கோடி அமெரிக்க டொலர் பணம் ஈட்டுவதன் மூலம் 30 லட்சம் மக்கள் பலன் பெறுகின்றனர்.

தைத்த ஆடைகள் ஏற்றுமதி, தேயிலை ஏற்றுமதி, சுற்றுலாவின் மூலம் கிடைக்கும் வருவாய் ஆகியவற்றைச் சார்ந்துதான் இலங்கைப் பொருளாதாரம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மொத்த ஏற்றுமதியில் ஆடைகளின் பங்கு 52 சதவீதமாகவும், தேயிலை ஏற்றுமதி 17 சதவீதமாகவும் உள்ளது. கொரோனாப் பெருந்தொற்றுக்குப் பிறகு உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் காரணமாக, இலங்கையின் ஏற்றுமதி மிகப் பெரிய அளவில் குறைந்து பொருளாதாரம் படுத்துவிட்டது. 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (ஜிடிபி) 1.1 சதவீதமாக இருந்த நிலையில் 2020 இல் இது மேலும் சரிந்து - 16.3 சதவீதம் (மைனஸ் 16.3 சதவீதம்) என வரலாறு காணாத கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. சுற்றுலாத்துறை முடக்கம் மற்றும் ஏற்றுமதிச் சரிவால் அந்நியச் செலாவணி கையிருப்பு வற்றி விட்டது. பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் மூலதனத்தை சுருட்டிக் கொண்டு வெளியேறி வருகின்றன. இலங்கையின் இன்றைய நிலைக்கு இவையும் பிரதான காரணிகள்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெருமளவு நிதியைப் பெற்றால் நாடு எதிர்நோக்கியிருக்கும் நிதி நெருக்கடியைச் சமாளிக்கலாம் என வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் வாங்குவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இல்லை. அது விதிக்கும் நிபந்தனைகள் அரசாங்கத்துக்கு உவப்பானதாக இல்லை. அதேவேளை தற்போது சீனா மேற்கொண்டுவரும் சில அபிவிருத்தித் திட்டங்களை இழக்க நேரிடுமென்றும் அதனால் சீன அரசிடம் இருந்து வேறு நெருக்குவாரங்கள் உருவாகுமெனவும் மூத்த அமைச்சர்கள் சிலர் கூறியுள்ளனர்.

ஆனாலும் நிதிநெருக்கடிகளைச் சமாளித்து சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதியைப் பெறுவது தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. அதற்கு முன்னர் மத்திய வங்கியின் உயர்நிலை அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவெடுக்கவுள்ளதாகவும் அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

■



# இங்கிலாந்தின் 50 ஆவது டக்அவுட்

இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் 2021 டெஸ்ட் கிரிக்கெட்டில் இது வரை 50 முறை டக்அவுட்டாகி மோசமான சாதனையைப் பதிவு செய்துள்ளனர்.

அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. பிரிஸ்பேன், அடிலெய்டு ஆகிய மைதானங்களில் நடைபெற்ற முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் இங்கிலாந்து படு தோல்வியடைந்தது.

இந்த நிலையில் பாக்சிங் டே டெஸ்ட் மெர்போர்னில் தொடங்கியது. இந்த டெஸ்டிலும் தோல்வியடைந்தால் தொடரை இழக்க நேரிடும் என்பதால் நான்கு மாற்றங்களுடன் இங்கிலாந்து களம் இறங்கியது. என்றாலும் பலன் அளிக்கவில்லை.

தொடக்க வீரர் ஹசீப் ஹமீத் ஓட்டம் ஏதும் எடுக்காமல் டக்அவுட்டில் வெளியேறினார். மற்றொரு தொடக்க வீரர் ஜாக் கிராவ்லி 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ஹசீப் ஹமீத் டக்அவுட் ஆனது இங்கிலாந்து அணிக்கு மிகப்பெரிய ஏமாற்றமாக அமைந்தது. அதோடு மட்டுமல்லாமல் டெஸ்ட் கிரிக்கெட்டில் 2021 ஆம் ஆண்டில் இங்கிலாந்து பேட்ஸ்மேன்களின் 50 ஆவது டக்அவுட் இதுவாகும். ■



# அவுஸ்திரேலிய பூர்வக்குடி வீரர் ஸ்காட் போலண்ட்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு 32 ஆவது வயதில் அறிமுகமாகி 2 ஆவது இன்னிங்சில் இங்கிலாந்தை 68 ஓட்டங்களுக்குச் சுருட்டிய ஸ்காட் போலண்ட் அவுஸ்திரேலிய ஆதி மண்ணின் மைந்தர்களான பூர்வக்குடியினத்தைச் சேர்ந்தவர். 4 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றி வரலாறு படைத்தார்.

ஜேசன் கில்லஸ்பிக்குப் பிறகு அவுஸ்திரேலியா அபார்ஜினல் என்று அழைக்கப்படும் பூர்வக்குடி இனத்தைச் சேர்ந்த போலண்ட் மண்ணின் மைந்தனாக மெல்போர்னில் டெஸ்ட் அறிமுகம் கண்டு அசத்தியுள்ளார். இவர் ஒருநாள் சர்வதேச போட்டியில் ஏற்கெனவே 2016 இல் அறிமுகமானார்.

அதன் பிறகு ரி20 அறிமுகப் போட்டியிலும் ஆடினார். ஆனால், டெஸ்ட்டில் இப்போதுதான் முதல் முறையாக அறிமுகமானார்.

பிரசித்தி பெற்ற பார்க்டேல் கிரிக்கெட் கிளப்புக்காக 6 வயதிலேயே யு-2 கிரிக்கெட் போட்டியில் ஆடியவர். அப்படியே வளர்ந்து விக்டோரியா பிரீமியர் கிரிக்கெட் கிளப்பில் 16 வயதில் இணைந்தார்.

பாப் ஹாலண்ட் என்ற ஒரு லெக் ஸ்பின்னர் சிட்னி ஸ்பெஷலிஸ்டோ அதே போல் போலண்ட் மெல்போர்ன் ஸ்பெஷலிஸ்ட். மெல்போர்ன் பொதுவாக வேகப்பந்து வீச்சுக்கு ஒரு சுடுகாடுதான். ஆனால் போலண்டுக்கு மட்டும் இங்கு பந்துகள் பேசும். சமீபத்தில் கூட நியூ சவுத் வேல்ஸ் அணிக்கு எதிரான கவுண்ட்டி ஷெஃபீல்ட் ஷீல்ட் போட்டியில் 3/33, 5/56 என்று விக்கெட்டுகளைக் குவித்தார். முதல் தர கிரிக்கெட்டில் 272 விக்கெட்டுகளை இதற்கு முன் எடுத்துள்ளார். பெரும்பாலான விக்கெட்டுகள் மெல்போர்னில்தான்.

இவரை கடந்த ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் அடிலெய்டில் பாட் கமின்ஸ் இல்லாததால் அணிக்கு அழைத்தனர். விக்டோரியா ரசிகர்களால் இவர் பெரிதும் பாராட்டப்பட்டார், காரணம், ஷேன் வார்ன், மறைந்த டீன் ஜோன்ஸ், மற்றும் மெர்வ் ஹியூஸ் ஆகியோர் இந்த மண்ணிலிருந்துதான் அவுஸ்திரேலியாவுக்கு ஆடியுள்ளனர்.

அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சு இவரது வருகையின் மூலம் மேலும் பலம் பெற்றுள்ளது, ஏற்கெனவே மிட்செல் ஸ்டார்க், ஜோஷ் ஹேசில்வுட், பாட் கமின்ஸ், இப்போது ஜை ரிச்சர்ட்சன், கேமரூன் கிரீன், மைக்கேல் நேசர் என்று சேர்ந்து கொண்டே போகிறது.

போலண்ட் டெஸ்ட் அறிமுகமானதை சக பூர்வக்குடி வீரர் ஜேசன் கில்லஸ்பி, 'பூர்வக்குடி ஆஸ்திரேலியாவுக்கு இது பெருமை மிக்க நாள்' என்று கொண்டாடுகிறார். போலண்டை இப்போது அவுஸ்திரேலியாவே கொண்டாடி வருகிறது. ■



# அமெரிக்காவுக்குப் பறந்த ஐ.பி.எல் வீரர்

இந்தியாவில் ஆண்டு தோறும் பல ஆயிரம் இளம் வீரர்கள் தீவிர பயிற்சி எடுத்து விளையாட வந்தாலும் அவர்களில் வெகு சிலருக்கே தேசிய அணியில் இடம்பிடிக்க வாய்ப்பு கிடைக்கும். அவர்களைத் தவிர மற்ற அனைத்து வீரர்களும் டொமஸ்டிக் கிரிகெட் மற்றும் ஐ.பி.எல் போன்ற தொடர்களில் தான் விளையாடி வருகின்றனர். அப்படி உள்ளூர் கிரிக்கெட், ஐ.பி.எல் தொடரில் சிறப்பாக விளையாடும் ஒரு சிலருக்கு தேசிய அணியில் விளையாட வாய்ப்பு கிடைக்கும். ஆனால், அதிலும் வாய்ப்பு கிடைக்காமல் இருக்கும் பல வீரர்கள் இந்திய கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று விட்டு வெளிநாடுகளுக்குச் சென்று விளையாடி வருகின்றனர். அந்த வரிசையில் தற்போது சன்ரைசர்ஸ் அணிக்காக விளையாடிய முன்னாள் வீரரான பிபுல் சர்மா இந்தியாவில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டு அமெரிக்கா சென்றுள்ளார்.

38 வயதான இவர் இதுவரை 33 ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடி உள்ளார். அதோடு 2016 ஆம் ஆண்டு ஐ.பி.எல் பட்டத்தை வென்ற சன்ரைசர்ஸ் அணியிலும் அவர் இடம் பிடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. உள்ளூர் கிரிக்கெட்டில் மொத்தம் 59 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 3012 ஓட்டங்களை எடுத்து, 126 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. அதோடு 105 ரி20 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 84 விக்கெட்டுகளைவீழ்த்தி, 1203 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

சிறப்பாக விளையாடிய அவருக்கு இந்திய ஏ அணியில் இடம் கிடைக்கவில்லை. இதன் காரணமாக விரக்தி அடைத்த அவர் தற்போது இந்திய கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று அமெரிக்கா சென்றுள்ளார். இவருக்கு முன்னதாகவே பல வீரர்கள் இதே போன்று இந்தியாவில் வாய்ப்பு கிடைக்காமல் அமெரிக்கா சென்றுள்ளனர். ■







# அசல் ஆயிரங்கால் பூச்சி!


லத்தீன் மொழியில் 'மில்லிபீட்' என்றால் ஆயிரங்கால்கள் என்று பொருள். ஆனால், உண்மை என்ன தெரியுமா? அண்மையில்தான் ஆயிரம் கால்களைக் கொண்ட பூச்சிகளை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இதுவரையில் உயிரியலாளர்கள் கண்டறிந்து வகைப்படுத்தியவை எல்லாம் குறைந்தது 34 முதல் அதிகபட்சமாக 400 கால்களைக் கொண்டவைதான். ஒரே ஒரு வகை ஊர்வன மட்டும் 750 கால்கள் வரைகொண்டவை.



ஆனால், அண்மையில் மேற்கு ஆஸ்திரேலியாவில், கிழக்கு தங்கச் சுரங்கப் பகுதியில், பூமிக்குக் கீழே 200 அடி ஆழத்தில் வசிக்கும் சில சென்டிபீட்களுக்கு 1,306 கால்கள் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். பூமிக்கடியில், மண்ணை இளக்கி, கற்களுக்கிடையில் இண்டு இடுக்குகளில் ஊறிச் செல்வதற்கு ஏற்ப, தங்கள் உடல்களை இந்த மில்லிபீட்கள் தகவமைத்துக் கொண்டிருக்கலாம் என விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

இதனால்தான் இவற்றுக்கு 'இயுமிலிபீஸ் பெர்செபோன்' என்று பெயரிட்டுள்ளனர். லத்தீன் மொழியில் இயுமிலிபீஸ் என்றால் 'மெய்யாகவே ஆயிரம் கால்கள்' என்று பொருள். பெரிஸ்போன் என்பது நிலத்தடி உலகிற்கான கிரேக்கக் கடவுளின் பெயர்.

நிலத்துக்கு அடியில் வாழும் உயிரினங்களைப் பற்றி அறிவியலுக்குத் தெரியாத பல்லாயிரம் விஷயங்கள் இருப்பதையும் இந்தக் கண்டிபிடிப்பு வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது.



# உதிர்வும் மலர்வும்

ஒரு அடர்ந்த காட்டில் பல்வேறு மிருகங்கள் வசித்து வந்தன. அவற்றுள் முயலும் மானும் இணைபிரியாத நண்பர்கள். தினமும் இரைதேடச் சென்று வந்த பின் இருவரும் சந்தித்து கதைப்பது வழக்கம். கதைக்கும் போது வழியில் நடைபெற்ற அனைத்தையும் பகிர்வது வழமை. அன்று முயல் இரை தேடச் சென்ற போது வழியில் ஓர் காகம் இறந்து கிடந்தது. அதனைச் சுற்றி பல காகங்கள் கரைவதும் பறப்பதுமாய் இருந்தன இந்தக் கவலையை முயல் மானிடம் பகிர்ந்தது. முயலின் முகத்தில் கவலை தென் பட்டது. இதனைப் பார்த்த மான், "கவலைப்படாதே முயலே எந்தவொரு தாக்கத்திற்கும் சமனானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு" என்றது. யாதொன்றும் புரியாது முயல் நின்ற போது "பிறப்பு என்ற ஒன்று உண்டு" எனின் இறப்பு என்பதும் உண்டு என மான் கூறியது.

**ஜெ.சௌமி**
தரம் - 11
யா/நெல்லியடி மத்திய கல்லூரி




# விண்மீன்

வானில் தெரியும் மீன்களாம்
வண்ண வண்ண மீன்களாம்
பார்த்து சிரிக்கும் மீன்களாம்
பள பளக்கும் மீன்களாம்
இரவு வானில் தோன்றிடும்
இருளைப் போக்க உதவிடும்

**மது**

# சிக்கனமாக மின்சாரம் குடிக்கும் சில்லு!

மின்கலன்களில் சேமிக்கப்படும் மின்னாற்றலைக்கொண்டு அதிக நாட்களுக்கு வேலை செய்யும் தொழில்நுட்பத்தை ஐ.பி.எம் மற்றும் சாம்சங் ஆகியவை கூட்டாக உருவாக்கியுள்ளன. கணினிகள் முதல் அதிதிறன் மொபைல்கள் வரை மூளையாகச் செயல்படுபவை சிலிக்கன் சில்லுகள்தான்.



இந்தச் சில்லுகள் வேலை செய்வதற்கு தற்போது அதிக மின்னாற்றலை எடுத்துக்கொள்கின்றன. இதற்குக் காரணம், இன்றைய சில்லுகளில் பதிப்பிக்கப் படும் 7 நேனோ மீற்றர் அளவுள்ள டிரான்சிஸ்டர்கள்தான்.

அண்மையில் ஐ.பி.எம், வெறும் 2 நனோமீற்றர் அளவே உள்ள டிரான்சிஸ்டர்களை உருவாக்கி அசத்தியது. இவை மிகவும் குறைவான மின்சாரத்தையே பயன்படுத்தும். தற்போது 2 நனோமீற்றர் அளவுள்ள 50 பில்லியன் டிரான்சிஸ்டர்களை ஒரே சில்லில் பதித்து வெளியிட்டுள்ளது ஐ.பி.எம், - சாம்சங் கூட்டணி. விரல் நக அளவே உள்ள இந்தச் சில்லு பழைய சில்லுகளைவிட 75 சதவீதம் குறைந்த மின்சாரத்தில் விரைவாக வேலை செய்கிறது. இதனால், தற்போதைய மொபைலில், இந்தச் சில்லினைப் பதித்தால், ஒரே சார் ஜில், ஒரு வாரத்திற்கு மேல்கூட அது வேலை செய்யும் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இந்த முறை, டிரான் சிஸ்டர்களை படுகிடையாக வைத்து சர்க்யூட்டில் பற்றவைக்காமல், அவற்றை நெடுக வைத்து இணைத்து உள்ளனர். அதனால், குறைந்த இடத்தில் அதிக டிரான்சிஸ்டர்களை பதிப்பித்திருப்பதோடு, இணைப்பான்களின் தொலைவையும் குறுக்கியுள்ளனர். இதனால் மின்சாரம் குறைவாகவே செலாகும் என ஐ.பி.எம், - சாம்சங் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மின்சார சிக்கனம் சில்லுகளுக்கும் வந்துவிட்டது.





**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 01.01.2022 அன்று வெளியிடப்பட்டது.